
# வேதாத்திரி மகரிஷி
## பற்றி
# 100 அறிஞர்கள்



அறிஞர்கள் மற்றும் அனுபவசாலிகளின்
கருத்துகளும், சரித்திரங்களும்
அவற்றைக் கற்கும் எல்லோருக்கும்
பலவிதத்திலும் நற்பயனையே தருகின்றன

- அருள் தந்தை

அருள்நிதி
**மன்னார்குடி பானுகுமார்**

விஜயா பதிப்பகம்

# வேதாத்திரி மகரிஷி
## பற்றி
# 100 அறிஞர்கள்

[வேதாத்திரி மகரிஷியின் நூறாவது பிறந்தநாள் நினைவாக வெளியிடப்பட்டது]

அருள்நிதி
மன்னார்குடி **பானுகுமார்**

**விஜயா பதிப்பகம்**
*20, ராஜ வீதி,*
*கோயம்புத்தூர் - 641 001.*
vijayapathippagam2007@gmail.com

© விஜயா பதிப்பகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள் |
| ஆசிரியர் | : | மன்னார்குடி பானுகுமார் |
| முதல் பதிப்பு | : | மார்ச் 2010 |
| வெளியீடு | : | **விஜயா பதிப்பகம்**<br>20, ராஜ வீதி,<br>கோயம்புத்தூர் - 641 001.<br>✆ 0422-2382614 / 2385614 |
| ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு | : | ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை. |
| அட்டை வடிவமைப்பு | : | ஆர். சி. மதிராஜ், சென்னை. |
| அச்சாக்கம் | : | ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5. |
| பக்கம் | : | 104 |
| விலை | : | ரூ.50/- |

ISBN -81-8446-219-0

**VETHATHIRI MAHARISHI PATTRI 100 ARINGARGAL**

| | | |
|---|---|---|
| Author | : | Mannarkudi Banu kumar |
| First Edition | : | March 2010 |
| Published By | : | **VIJAYA PATHIPPAGAM,**<br>20, Raja Street, Coimbatore - 641 001.<br>✆ 0422-2382614 / 2385614 |
| Layout & Laser type set | : | IRIS graphics, Coimbatore. |
| Cover Design | : | R.C. Mathiraj, Chennai. |
| Printed At | : | Jothi Enterprises, Chennai - 5. |
| Pages | : | 104 |
| Price | : | Rs.50/- |

## ஆன்மீகவாதிகள்

1. சுத்தானந்த பாரதியார் - இறைவனேதான் வேதாத்திரி
2. பரஞ்சோதி மகான் - கடமையுணர்வின் எழுச்சி
3. கிருபானந்தவாரியார் - ஞானம் விளையும் இடம்
4. சுவாமி வெங்கடேஸ்வரானந்தா-நடமாடும் யோகீஸ்வரர்
5. சுவாமி கௌதமானந்தா - சமுதாயத்திற்காக வாழ்ந்தவர்
6. பொன்னம்பலஅடிகளார் - ஆன்மீகத்தை உயர்த்திப் பிடித்தவர்

## எழுத்தாளர்கள்

7. தமிழ்வாணன் - காவி தரிக்காத மகரிஷி
8. சத்யபானு - ஞான நிலா
9. வேலா. அரசமாணிக்கம் - மாதவயோகி வேதாத்திரி
10. சிற்பி - சூரியப் பிழம்பு
11. சுகி. சிவம் - உலகத்தை வென்றவர்
12. ஆனந்தா - வையத்தை வாழ்த்தியவர்

## முதல்வர்கள் / துறைத் தலைவர்கள்

13. ச. ஜெயப்பிரகாசம் - தீர்க்கதரிசி
14. முனைவர்.பாக்யவதி சங்கரலிங்கம்- ஆற்றுப்படுத்தும் அருளாளர்
15. முனைவர். ச.இராதாகிருஷ்ணன் - மக்கள் மனதில் வாழுபவர்
16. இரா. சந்திரன் - புதுநெறி காட்டிய புலவர்
17. முனைவர்.கடலூர் மணிமாறன் - தமிழ்ச் சான்றோர்

## நீதிபதி

18. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் - இரயில் நண்பர்

## ஆய்வியல் நிறைஞர்கள்

19. ந.விஜயன் - கவி வெள்ளம்
20. சி.பிரகாஷ் - மனோதத்துவர்
21. சி.இராசலிங்கம் - ஆன்மீகப் பேரொளி

## புலவர்கள்

22. புலவர் ப. வெள்ளை - பிறருக்கென வாழுபவர்
23. புலவர் க. தியாகராஜன் - உலக உத்தமர்

## முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

24. மோ. கிறிஸ்டி - இறைச் சிந்தனையாளர்
25. க.ப. வித்தியாதரன் - வெள்ளைச் சித்தர்
26. மா. இராமன் - சமுதாயச் சிந்தனையாளர்
27. க. நேசன் - புதுமைச் சித்தர்

## மருத்துவர்கள்

28. டாக்டர்.க.வி. அனந்தநாராயணன் -விந்தை மனிதர்
29. டாக்டர். சிவக்குமரன் - ஞானாசிரியனின் மருத்துவம்
30. டாக்டர். U.கென்னடி - அளவற்ற அருளாளர்
31. டாக்டர். G..கார்த்திகேயன் - தாரக மந்திரம் தந்தவர்
32. டாக்டர். M.V.ரபீந்திரநாத் - நூற்றாண்டு கண்ட மகான்
33. டாக்டர். K.அம்பலவாணன் - சிகரங்களைத் தொட்டவர்

## கலைஞர்கள்

34. க. மோகன்ராஜ் ஸ்தபதி - தட்சிணாமூர்த்தி

## பேராசிரியர்கள்

35. முனைவர் இரா. ரெங்கம்மாள் - விடிவெள்ளி
36. முனைவர் வெ.ஆ. நாகரத்தினம் - நடமாடும் மகான்
37. முனைவர் இரா. சந்திரசேகரன் - இலக்கியவாதி
38. முனைவர் வீ. சண்முகம் - சொல்லின் செல்வர்
39. முனைவர் இ.கி. இராமசாமி - தமிழ்ச் சித்தர்
40. க. இராமலிங்கம் - தொண்டாற்றி இன்பமுறும் மகரிஷி
41. க. தமிழ்ச்செல்வன் - ஓங்கி ஒலிக்கும் குரல்
42. முனைவர் கோ.எழில் ஆதிரை - அறிவியல் ஆன்மீகச் சித்தர்
43. முனைவர் அமிர்தஜோதி சந்திரசேகரன்-அருட் பேராசான்
44. க. இராமலிங்கம் - அன்பின் சிகரம்

## கவிஞர்கள்

45. கவிக்கோ. அப்துல் ரகுமான் - யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி
46. கவிஞர். முருகொளி - யோகி ஆசான்
47. அ.நி. ஜெய்ப்பிரகாஷ் - எட்டாவது அதிசயம்
48. அரிமாப் புலவர் - முத்தமிழ் வித்தகர்
49. கவிஞர். இராகவன்முத்து - மாமுனிவர் வேதாத்திரி
50. கவிப்பேரரசு வைரமுத்து - வேதாத்திரியத்தின் விஸ்வரூபம்

## பிற மாநில / நாட்டு அறிஞர்கள்

51. முனைவர் நாகப்பா நாச்சியப்பன் -கருணை வள்ளல்
52. முனைவர் து. மனுவேல் - தரணி போற்றும் தனயன்

53. முனைவர் வெள்ளிங்கிரி - ஞான வழிகாட்டி

54. முனைவர் சி.சுப்பிரமணியபிள்ளை- மனிதநேயப் பண்பாளர்

55. அ. அறிவுநம்பி - சமூக மருத்துவர்

56. முனைவர் செங்கைப் பொதுவன்- உன்னத மகான்

57. முனைவர் எம். பரமசிவம் - அருட்கடல்

## தமிழ் அறிஞர்கள் / ஆர்வலர்கள்

58. சிலம்பொலி செல்லப்பன் - வளர்மனவள முனிவர்

59. மு. இராஜகோபால் - புது வேதம்

60. முரசு நெடுமாறன் - கலங்கரை விளக்கம்

61. மு.ஐ. வரதராஜன் - பண்முகச் சிந்தனையாளர்

62. மரு.மு. தணிகாசலம் - வள்ளலாரின் வாரிசு

63. எஸ். நடராஜன் - பொதுநலத் தொண்டர்

64. ம. சாந்தி - உளவியல் ஆராய்ச்சியாளர்

65. வி. கலியபெருமாள் - பாமர மக்களின் தத்துவஞானி

66. தமிழருவி மணியன் - மகரிஷியின் பெருமை

67. ஏ.பி. இராஜேஸ்வரி - பிரம்மரிஷி

## தொழில் அதிபர்கள்

68. பொள்ளாச்சி மகாலிங்கம் - உண்மை சன்மார்க்கி

69. மு. வேலாயுதம் - நம்மோடு வாழ்ந்த மகான்

## விஞ்ஞானி

70. டாக்டர். அழகர் இராமானுஜம் - ஞானப் பறவை

## இதழ்கள்

71. வேத ஒளி - மகரிஷி கண்ட பெண்மை

72. ஈழக் கேசரி. இலங்கை - காலத்துக்கேற்றவர்

73. தினமலர் - பாரட்டத்தான் வேண்டும்

74. சுதேசமித்திரன் - கருத்தாழமுடைய சொற்கள்

75. ஞான ஒளி - ஞானச் சுரங்கம்

## மாநில / மத்திய அதிகாரிகள்

76. சி. சேகர் - அருள் ஒளி

77. மு. கருணாநிதி - மனிதநேயம் போற்றும் மகான்

78. D.R. கார்த்திகேயன்.I.P.S. - விஞ்ஞான மெய்ஞ்ஞானி

79. வி. குமார் - என் குருநாதர்

## துணைவேந்தர்கள்

80. சே.ஜே. இன்னாசிமுத்து - புத்துலகம் படைத்தவர்

81. முனைவர் சி. தங்கமுத்து - வரலாற்றுப் புருஷர்

82. முனைவர் ந. மார்க்கண்டன் - நம்பிக்கை நட்சத்திரம்

83. முனைவர் கே. குழந்தைவேல் - ஞானத்தந்தை

84. முனைவர் இ. சுந்திரமூர்த்தி - ஞான ஒளிவிளக்கு

85. முனைவர் L.B.வெங்கட்ரங்கன் - புரட்சிகர தத்துவஞானி

86. டாக்டர் சி.வி. பிரம்மானந்தம் - மெய்ஞ்ஞான போதகர்

87. முனைவர். துரை விஸ்வநாதன் - அறிவியல் பெட்டகம்

88. முனைவர் மு. தங்கராசு - சித்தர் வேதாத்திரி மகரிஷி

89. முனைவர் திருவாசகம் - சூத்திரம் தந்த சூத்திரதாரி

## பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்

90. முனைவர் ய. மணிகண்டன் - செப்பறிய சிந்தனையாளர்
91. சு. செல்வக்குமாரன் - படைப்பாளி
92. முனைவர் க. திலகவதி - ஞானக்கலவை
93. முனைவர் தி. பெரியசாமி - கல்வி சீர்திருத்தாளர்
94. முனைவர் சு.வெங்கட்ராமன் - அற்புத மனிதர்
95. முனைவர் பா. நீலாவதி - சகலகலா வல்லவர்
96. முனைவர் கே. ஞானசேகரன் - ஓருலகச் சிந்தனையாளர்
97. முனைவர் அ. பிச்சை - புகழ்பெற்ற சிந்தனையாளர்

## தலைவர்கள்

98. தந்தை பெரியார் - சமாதானப் பிரியர்
99. சி. சுப்பிரமணியம் - விஞ்ஞானி மகரிஷி

## இந்தியக் குடியரசுத் தலைவர்

100. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் - SOCIAL REFORMER

# அறிஞர்களின் அனுபவங்கள்

அறிஞர்கள், கவிஞர்கள், தொழில் நிபுணர்கள் இவர்களின் வாழ்வில் பல்வேறு சூழ்நிலைகளில் எண்ணிறந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடந்தேறுகின்றன.

உலக மக்களுக்கு அவர்களது அனுபவங்களைப் பேச்சாலும், எழுத்தாலும், கவியாலும், கலையாலும் அம்மேதைகள் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்கள். அவர்கள் அந்தத் துறையில், அந்தந்த நிகழ்ச்சியில் அந்தந்தச் சமயத்தில் தாங்கள் அடைந்த இன்பங்களையும், துன்பங்களையும் உலக மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

அவர்களின் இத்தகைய முயற்சியால் அவர்கள் அடைந்த இன்பத்தை ஒருவர் அறிந்து கொண்டது முதல் அதை நினைக்கும் தோறும் ஓரளவு இன்பமும் அதே இன்பத்தைத் தானும் பெற வேண்டும் என்ற முயற்சியும், அதைத் தொடர்ந்து, முயற்சிக்கேற்ற பயனையும் அடைய முடிகிறது.

அவர்கள் அடைந்த துன்பத்தை ஒருவர் அறிந்து கொள்வதனால் அதுபோன்ற துன்பம் வாழ்வில் தனக்கு ஏற்படாமலும் விழிப்பாக இருப்பதற்கும் அப்படி ஏதேனும் சூழ்நிலை சந்தர்ப்ப நிர்ப்பந்தங் களினால் ஏற்பட்டு விட்டாலும் அதைச் சமாளிக்கவும், குறைத்துக் கொள்ளவும் ஏற்ற அறிவின் திறமை, தகைமை, பொறுமை இவைகளை யாரொருவரும் பெற்று வருகிறார்கள்.

ஆகவே **அறிஞர்கள் மற்றும் அனுபவசாலிகளின் கருத்துக்களும், சரித்திரங்களும் அவற்றைக் கற்கும் எல்லோருக்கும் பலவிதத்திலும் நற்பயனையே தருகின்றன.**

- அருள்தந்தை



பானுகுமார்
பி58, ஏழாவது குறுக்குத் தெரு,
அண்ணாநகர், செங்கற்பட்டு.
Email : banukumar.v@gmail.com
www.rajampathipakam.com

# என்னுரை

## எல்லாப் புகழும் வேதாத்திரியத்திற்கே

மகரிஷியுடன் பல ஆண்டு காலம் நெருங்கியிருந்த ஒரு பெரியவரிடம் உரையாடிக் கொண்டிருந்தேன். ''அருட்தந்தையைப் பற்றிப் பல்வேறு அறிஞர் பெருமக்கள் தெரிவித்த கருத்துக்களை யெல்லாம் தமிழ் மக்களும் அறியுமாறு தொகுத்து வெளியிடலாமே! அது, இன்றைய தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும்'' என்று கேட்டேன்.

''நல்ல கருத்து: உங்கள் விருப்பப்படி தாராளமாகச் செய்யுங்கள். இந்த நூலுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்'' என்று அப்பெரியவர் வாழ்த்தினார்.

இதுவரை பாதுகாத்து வைத்திருந்த செய்தித்தாள், மலர்கள், நூல்கள், அருட்தந்தையின் விழாக்களில் சேகரித்த விபரங்களை யெல்லாம் தேடி எடுத்தேன்.

அந்தக் கருத்துச் சோலைக்குள் புகுந்து ஒரு தேனீயைப் போல் தகவல்களைச் சேகரித்தும், தொகுத்தும், படியெடுத்தும் சில பெருமக்களிடம் கேட்டுப் பெற்றும் இந்தத் தொகுப்பைச் செய்து கொண்டிருக்கும்போது, இந்தத் தொகுப்புக்கு என்ன பெயர் கொடுக்கலாம் என்று சிந்தித்துச் சில தலைப்புகளை அசை போட்டுக் கொண்டிருக்கும்போது ''வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்'' எனும் தலைப்பையே மகரிஷி விரும்புவதாக மனம் சொல்லியது.

அருட்தந்தை இருக்கும்போதே இந்நூலை வெளியிட விரும்பியபோதிலும் இயலவில்லை. அவரின் மறைவிற்குப் பின், **நூறு அறிஞர்களின் சொல்லோவியங்களைக் கொண்ட இந்த நினைவு மண்டபத்தை எழுப்பி உள்ளேன்.** சில கட்டுரைகள் அவர் மறைவிற்குப் பின் வந்தவை.

இந்த என் முயற்சிக்குப் பலவகையிலும் ஊக்கம் ஊட்டியும், ஆலோசனைகளை வழங்கியும் ஒத்துழைப்பு நல்கிய புலவர் க.தியாகராஜன், எனது இயக்குநர் வாழ்க்கைத் துணைவியார் அருள்நிதி பானுமதிகுமார், என் இல்லத்து ஞானச் செல்வங்கள் பிரம்ம நாளிகள் நிவேதிதா, நரேந்திரன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் கொண்டு வந்துள்ள கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் திரு.மு. வேலாயுதம் அவர்களுக்கு நன்றியுடையேன்.

இந்த நூலைப் படிக்கும் வாசகர்கள் பாமர மக்களின் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் வாழ்க்கை நெறியைப் பின்பற்றி மானுடத்திற்குத் தன்னலங்கருதாமல் தொண்டுபுரிய முன் வருவார்களேயானால் அதுதான் இந்த நூலுக்குக் கிடைக்கும் பெருமையாகும்.

**வாழ்க வையகம்!**

**வாழ்க வளமுடன்!**

**வேதாத்திரியம் புகழ் ஓங்குக..!**

| | | |
|---|---|---|
| ***நாள்:*** | ***25.01.2010*** | **வழக்கமான வணக்கங்களுடன்** |
| **இடம்:** | **செங்கற்பட்டு** | **பானுகுமார்** |

## ஆன்மீகவாதிகள்

# 1. இறைவனேதான் வேதாத்திரி

- சுத்தானந்த பாரதியார்

''வேதாத்திரி என்ற பெயர் இயற்கைப் பெயராக இருக்காது என்று எனக்குத் தோன்றியது. ஏனென்றால் வேதாத்திரி என்ற சொல்லுக்கு அறிவு மலை என்று பொருள். பொருள் பொருத்தம் இத்தனை கச்சிதமாக இருக்கவே, இது சூட்டிக்கொண்ட பெயராக இருக்கும் என்று தோன்றியது. விசாரித்ததில், அது அவருக்கு அவரது அன்னை தந்தையார் வைத்த இயற்பெயரே என்று தெரிய வந்தது. இத்தகு பெயர்ப் பொருத்தம் உலகில் வேறு யாருக்கும் அமைய முடியுமா?''

''இன்னொரு அதிசயம் இவர் ஒரு இரண்டு பெண்டாட்டிக்காரர். ஆனால் அவர் வாழ்க்கையில் ஒரு சண்டைகூட வந்தது கிடையாது. இதிலிருந்தே தெரிகிறதல்லவா, இவர் ஒரு **ஞானவான்** என்று? ஏனென்றால் இரண்டு பெண்டாட்டிக்காரனுக்கு நரகம் கிடையாது என்பார்கள்; அதாவது செத்தபிறகு. காரணம், சாகும் முன்னரே அவன் எல்லா நரகத் துன்பங்களையும் அனுபவித்து விடுவான். இவர் வாழ்க்கையில் ஒரு சண்டை கிடையாதென்றால் இவர் எத்தகு புண்ணியாத்துமாவாக இருக்க வேண்டும்? வேறு விளக்கங்கள் எதற்கு?''

''இன்னொரு அதிசயம். He is a selfmade man. அப்படியானால் இறைவனேதான் வேதாத்திரியாக வந்திருக்க வேண்டும். இதில் சந்தேகத்திற்கிடமே இல்லை.

**இவரை ஒத்த மகானை நான் கண்டதில்லை. இவருக்கு நேர் சொல்ல வேறு ஒரு ஞானி இல்லை. இவர் பெரிய மேதாவி.** இவருக்குப் பிள்ளை இல்லை என்பதை ஒரு குறையாக நினைக்கலாம். ஐயோ, இவருக்குத் தான் மிகவும் அதிகப் பிள்ளைகள்! நீங்களெல்லாம் இவருடைய கோடிக்கணக்கான பிள்ளைகளில் சிலர்தாமே!

இவர் செய்யும் செயல், சொல்லும் சொல் எல்லாம் உயர்ந்தவை. அந்த மகராசனம். அது எவ்வளவு உயர்வானது தெரியுமா? எனக்குத்தான்

தெரியும். இவரிடம் உள்ள பல அரும்பெரும் சிறப்புகளில் மிகவும் உயர்ந்தது என்ன தெரியுமா? எதையுமே முதலில் அவர் தானே கடைப் பிடித்துப் பரிஷித்துப் பார்த்த பிறகுதான் பிறருக்கு உபதேசிக்கிறார்.

பாத்தூண் என்று வள்ளுவர் ஒன்று சொல்லுவார். அந்தப் பாத்தூணில் நம்பர் ஒன் வேதாத்திரிதான். உயர்ந்த அரிய விஷயம் எல்லாவற்றிலுமே ***'நம்பர் ஒன் (One)'*** னாகத்தான் அவர் இருக்கிறார்.

✣ ✣ ✣

## 2. கடமையுணர்வின் எழுச்சி

- பரஞ்சோதி மகான்

உள்ளத்தின் அமைதியைப் பொறுத்தே உலகத்தின் அமைதியும் ஆகும். மனிதர்கட்கு குடல் பசி, உடல் பசி, அறிவுப் பசி என மூன்று வகையான தேவைகள் உண்டு. அறிவு உயர உயர அந்தத் தேவைகள் உலகில் வாழும் மக்கள் எல்லோருக்கும், வயதிற்கேற்றபடி, காலா காலத்தில் கிடைக்க வேண்டும் - கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கமும், அதற்கேற்றவாறு செயலாற்றும் ஆர்வமும் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிறது.

இத்தகைய கடமையுணர்வின் ஒரு பகுதி எழுச்சியே உலக சமாதானப் புத்தகமாக உருவாகியிருக்கிறது.

**எனது சீடர்களில் ஒருவரான G.V. வேதாத்திரி** எழுதி வெளி யிட்டிருக்கும் இந்த உலக சமாதானம் என்ற நூலில், மனிதர்களின் அவசியமான வாழ்க்கைத் தேவைகளை எடுத்துக்காட்டி அவைகளைக் கூட்டுறவால் உற்பத்தி செய்து நிரவி அனுபவித்து ஒற்றுமையாய் வாழ வேண்டிய முறைகளையும், அவசியத்தையும் ஆராய்ச்சியுடனும், துணிவுடனும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

மனித வாழ்வின் இலட்சிய வாழ்வையும், கடமையையும் உணர்த்தி மக்கள் அறிவிற்குச் சிந்தனையூட்டும் இந்த வேதாத்திரியின் நூலினால் நான் மகிழ்ச்சியடைகிறேன். சந்தோஷம்.

✣ ✣ ✣

# 3. ஞானம் விளையும் இடம்

- திருமுருக கிருபானந்த வாரியார்

***"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்***
***என்னுடைய ரேனும் இலர்"***

என்பார் திருவள்ளுவத்தேவர்.

இந்த அறிவு இருவகைப்படும். ஒன்று நூலறிவு; மற்றொன்று வாலறிவு. அபரஞானம்; பரஞானம் என்பார்கள். புத்தகத்தால் வருவது அபரஞானம். அனுபவத்தால் வருவது பரஞானம். இதனைத் தெய்வப் புலமை சேக்கிழார் சுவாமிகள்,

**"உவமையில்லாக்கலை ஞானம்**
**உணர்வரிய மெய்ஞ் ஞானம்"**

என்கிறார். இந்த மேலான அனுபவ ஞானத்தைப் பக்குவப்பட்டு தன்னையடைந்த புண்ணிய சீலர்கட்கு அள்ளி அள்ளி வழங்குகின்றார் தவத்திரு வேதாத்திரி சுவாமிகள்.

இந்த ஞானம் விளையும் இடம் அறிவுத் திருக்கோயில் ஆழியாற்றங்கரையில் அமைந்துள்ளது. இது மகா புனிதமான ஞான ஆலயமாகும்.

இதனை அருட்செல்வர் முதலிய அன்பர்கள் அமைத்துள்ளார்கள். இது ஓங்கி உயர்ந்து விளங்குவதாக.

***"ஆதார மாக அடியார்க் கருள்புரியும்***
***வேதாத்திரி மாமுனிவர் மேவுபுகழ் - நாதாந்த***
***ஓங்கார நன்னிலையம் ஓங்கி ஒளி சிறந்து***
***பாங்காக வாழ்க பணைத்து"***

✣ ✣ ✣

# 4. நடமாடும் யோகீஸ்வரர்

- சுவாமி வெங்கடேஸ்வரானந்தா

"நமது வேதாத்திரி சுவாமிகள் நமக்கு **நடமாடும் யோகீஸ்வரராவார்.** அவருடைய ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் உண்மையும்

தூய்மையும் விளங்கக் காணலாம். குற்றத்தை நீக்கி குணம் ஒன்றே காணும் பெருநோக்குப் படைத்தவராக இவர் விளங்கி வருவார்.

தன் லட்சோப லட்ச சொத்துக்களை எல்லாம் பிறர் நன்மைக்கே பயன்படுத்திய பெருவள்ளல் என்றே இவரைச் சொல்ல வேண்டும். இன்றும் தன் உழைப்பையெல்லாம் பிறர் நன்மைக்கே இவர் அளித்து வருவதானது மிகவும் போற்றுதற்குரியது. இவருடைய புகழ் இந்நாட்டில் மட்டுமின்றி இனி அமெரிக்காவிலும் பரவப்போவது உறுதி.

✤ ✤ ✤

# 5. சமுதாயத்திற்காக வாழ்ந்தவர்

- சுவாமி கௌதமானந்தா

தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம்

வேதாத்திரி மகரிஷி போன்ற மகான்கள் நம் நாட்டில் தோன்றி ஆயிரமாயிரம் மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பதனால்தான் நம் நாடு இன்றைக்கும் ஓர் ஆன்மீக நாடு என்ற பெயரோடு இருக்கிறது.

தன்னலத்தை விட்டு வாழ்வது சிறந்த ஒரு பண்பு. தன்னலம் இருந்தால் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. மகான்கள் தனக்கென எதுவுமே சிந்தனை கொள்ள மாட்டார்கள். சமுதாயத்திற் காகத்தான் சிந்தனை செய்வார்கள். இப்படித்தான் வேதாத்திரி மகரிஷி 95 வருட வாழ்க்கையை வாழ்ந்தார்.

இவரது வாழ்க்கையில் பொன் என்ற வகையில் பொருளும் இருந்தது. வாழ்க்கைத் துணை என்ற வகையில் பெண்ணும் இருந்தது. அந்த உறவுகளில் தெளிவும் இருந்தது. துறவும் இருந்தது.

இவரது வாழ்க்கையைப் பார்த்தால் நமக்கும் சீர்மை மிக்க வாழ்க்கையில் நம்பிக்கை வரும். நம்பிக்கை வர வேண்டும் என்பதற்காகத்தான் இம்மாதிரியான மகான்களை இறைவன் உலகத்திற்கு அனுப்புகிறார்.

அத்தகைய மகான்கள் வரும் நிகழ்ச்சியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் வழியைப் பின்பற்ற வேண்டும். நம் வாழ்க்கையில் மேம்பாடு கொண்டு வரவேண்டும்.

✤ ✤ ✤

# 6. ஆன்மீகத்தை உயர்த்திப் பிடித்தவர்

- தவத்திரு. பொன்னம்பல அடிகளார்

மதங்கள் மனிதனை நெறிப்படுத்திக் கொண்டிருந்தபோது மனிதர்களை நெறிப்படுத்த ஆன்மீகத்தை உயர்த்திப் பிடித்தவர்தான் **மக்கள் மகரிஷியாய்** விளங்குகின்ற வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

இன்றைக்கு உலகம் அவர்களை நினைவு கொண்டிருக்கிற நேரம். வாழும் காலத்தில் அவருடைய தத்துவம் அறியப் பட்டதைவிட, அவர் நம்முடைய பெருமை நிறைந்த உலகில் நிறைந்திருக்கிற போதுதான் மக்கள் மனங்களில் நிறைந்திருக்கிற அறிவுத் தத்துவமாக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

மகரிஷி வாழும் தத்துவமாக வாழ்ந்து காட்டிய உண்மை விளக்கம் தான் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான மக்களை அறிவு சார்ந்த ஆன்மீகத்தின்பால் ஈர்த்திருக்கிறது.

ஆன்மீகம் என்பது எப்போதும் அறிவு சார்ந்ததுதான். அது எதற்கும் எதிரானது அல்ல. எதற்கும் முரணானது அல்ல. பகுத்தறிவும் அப்படித்தான்.

பகுத்தறிவு என்பது பக்திக்கு முரணானது அல்ல. மூட நம்பிக்கைக்கு முரணானது. அதனால்தான் மூட நம்பிக்கைக்கு முரணான சிந்தனையை வளர்க்கிற பணியில் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஒரு அருந்தவ வேள்வியை இந்த மண்ணில் விட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

சகமனிதனை நேசிப்பதிலும், சமுதாயத்தை ஒருங்கிணைப் பதிலும் சமுதாய மேம்பாட்டிற்கு உழைப்பதிலும், அறிவு உழைப்பும், உடல் உழைப்பும், செல்வத்தை தனக்கென வைத்துக் கொள்ளாமல், சமூகம் மகிழ வழங்குவதிலும், மனிதனுக்கு மனிதன் அநீதி இழைக் காதீர்கள் என்ற தடத்தில் பயணிப்பதுதான் உண்மையான ஆன்மீகத் தடம் என்று இந்த மண்ணில் வழங்கிச் சென்றிருக்கிற அருள் தந்தையின் அருமையான தத்துவத்தை நடைமுறையாக்குகிற பணியில் நாளும் நாமும் ஈடுபடுவோம்.

✣ ✣ ✣

## எழுத்தாளர்கள்

# 7. காவி தரிக்காத மகரிஷி

- தமிழ்வாணன்

திரு வேதாத்திரி அவர்கள் மக்களிடையே சிந்தனையைத் தூண்டி வருவது போற்றற்குரியது. சிந்திக்காதவனுடைய மனதில், தேங்கிக் கிடக்கும் குட்டையில் நீரைப்பாசி மூடிக்கொள்வது போல அழுக்கு மூடிக் கொள்ளும். சிந்திக்கிறவனுடைய மனம் எப்போதும் மாசின்றி விளங்கும்.

எனவே நமது வேதாத்திரியவர்கள் அமெரிக்க மக்களிடம் சிந்தனையைத் தூண்டச் செல்வது வரவேற்க வேண்டியதே. மேலும் இவர் போதிக்கும் குண்டலினி யோகத்தைச் செய்ய வீட்டை விட்டுக் காடேக வேண்டியதில்லை. இல்லத்திலிருந்தே எளிமையோடு பழகலாம்.

காவி தரிக்க வேண்டியதில்லை. களங்கமற்றிருந்தால் போதும், மற்ற யோகிகளைப் போலில்லாமல் நமது வேதாத்திரியவர்கள் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது போற்றத்தக்கது.

இத்தகைய எளியவர்களாலும் தூயவர்களாலும்தான் மக்களுக்குப் பெரும் நன்மையுண்டாக முடியும்.

✣ ✣ ✣

# 8. ஞான நிலா

- சத்தியபானு

சுவாமி விவேகானந்தர் என்னும் ஞான சூரியன் கிழக்கே உதயமானான். இந்தத் தமிழகத்தின் தென் கோடிக் கடலோரத்தி லிருந்துதான் அந்த ஞான சூரியனின் பயணம் மேற்கு நோக்கித் தொடங்கியது. சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக உரையில் மேலை நாடுகள் மயங்கின. புதிய விழிப்புணர்வு பெற்றன.

அதற்குப் பிறகு, ஒரு புதிய ஞான நிலா தோன்றியது. ஞான நிறை குடமாய் விளங்கும் அந்த நிலாவும் மேற்கு நோக்கியே பயணமாகியது.

ஆன்மீகக் கருத்துகளை அற்புதமாய் - எளிய வார்த்தைகளில் - இந்த ஞான நிலா உணர்த்தியபோது, மேலை நாட்டினர் ஆன்மீக அனுபவத்தில் மூழ்கித் திளைத்தார்கள். பெரு மகிழ்வு பெற்றார்கள்.

அந்த ''ஞான நிலா'' வேறு யாருமில்லை. சுமார் 50 ஆண்டு களுக்கும் மேலாக ''மணவளக்கலை''யைப் பாமரரும் உணர்ந்து, வளமுடன் வாழ்ந்திடத் தன் வாழ்வை அர்ப்பணித்துவிட்ட **யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள்தான் அந்த 'ஞான நிலா'.**

ஒளிவீசும் பூரண நிலவு ஒரு மானிட உடலாய் மாறி விட்டதோ! இல்லை. இல்லை. தவக்கனல் வீச வேண்டிய **மகரிஷி அவர்களின் உடலிருந்து நிலவு ஒளிர்ந்து கொண்டிருக்கிறதோ!**

நானும், நண்பரும் ஒரு எல்லையில்லாப் பரவசத்தில் ஆழ்ந்து, ஒரு நிமிடம் திகைத்துப் போய்விட்டோம்.

மகரிஷி அவர்கள் எங்கள் எதிரே இருந்த ஆசனத்தில் ''வாழ்க வளமுடன்!'' என்று வாழ்த்தியவாறே அமர்ந்தார். அவரிடம் 'தொழில் வணிக முதலீடு' இதழின் 1997-ஆம் ஆண்டு சிறப்பு மலரைக் கொடுத்தேன். மணம் வீசும் மலரைப் பிரித்துப் பார்த்தார். ''நன்றாக இருக்கிறது'' என்றார்.

இது ஓர் அபூர்வமான சந்திப்பு. இந்தச் சந்திப்பில் மனித குலத்தின் மனத்தை அரித்துக் கொண்டிருக்கும் கேள்விகளை மகரிஷி அவர்களிடம் கேட்டோம்.

ஆன்மீக ஞானத்தின் வடிவமாக விளங்கும் அந்த ஞான நிலா அளித்த பதில்களைச் செவியுற்ற அனுபவத்தை விவரிக்க வார்த்தைகள் இல்லை.

✣ ✣ ✣

## 9. மாதவயோகி வேதாத்திரி

- வேலா. அரசமாணிக்கம்

மாதவயோகி வேதாத்திரி அவர்கள் சீரிய சிந்தனையாளர், சான்றோர், **மீமிசை மாந்தர்** ஆவார். தமிழ்ப் பண்பாட்டிலிருந்து வருணாசிரம வேதங்களில் கலந்துபோன மெய்யுணர்வுகளையும், நல் வேள்விகளையும், மன-உடல் பயிற்சிகளையும், திருக்குறள் - திருமூலம் - திருவருட்பாவோடு ஆய்ந்து, உய்த்துணர்ந்து அமிழ்தெனும்

இன்பொருளாக்கித் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி உலக மக்கட் கெல்லாம் வழங்கும் அருட் பணியைத் தம் வாழ்க்கையில் மேற்கொண்டுள்ளார்.

இவர்தம் அமிழ்தை உண்ட அனைவரும் வாழ்வொளி பெற்று வளம் அடைகின்றனர். உலகின் அனைத்துத் திக்குகளிலும் இவர்தம் மாணாக்கர் உளர் என்பது அறிய தமிழ் நெஞ்ச முடையோர் பெருமிதம் பெறுவது உறுதி.

தமிழ் நிலம் காலங்காலமாய்த் தோற்றுவிக்கும் மீமிசை மாந்தர்களுள் ஒருவராகத் திகழும் இப்பெருமகனார் நம் காலத்தே வாழ்கிறார் என்பதே நாம் பெற்ற பேறு.

✣ ✣ ✣

# 10. சூரியப்பிழம்பு

- சிற்பி

''வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!'' இந்த வாழ்வுதரும் பதங்களைப் பாரகம் அடங்கலும் பனிக்குளிர் ததும்பப் பறைசாற்றி வரும் **தமிழகச் சித்தர்** 'அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி' அவர்கள்.

'முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனாய்த் திகழும் இந்தத் தத்துவ விளக்கின் பிரகாசம் மெல்ல மெல்ல வையகமெல்லாம் பரவி வருகிற வேளை இது.

நோக்கரிய நோக்கும் நுணுக்கரிய நுண்ணுணர்வும் பெற்ற ஞானியான மகரிஷி அவர்கள் **சூரியப்பிழம்பாக** அறிவொளி வழங்கி வருகின்றார். அதே சமயம் நம் கைக்கெட்டும் தீபமாக எளிமையும் தாங்குகின்றார்.

பழைய ரத்தினக் கற்களைப் புதிதாகப் பட்டை தீட்டித் தருகிறபோது இழையோடும் மெருகில் சமுதாய சேவையின் வாசல்கள் எல்லாம் தெளிவாகின்றன. உடல், உள்ளம், உலகு என்ற மூன்று தளங்களிலும் மானுடம் வியத்தகு வெற்றிகள் காணும் வழிவகைகள் ஒளி பெறுகின்றன. ஆழ்நிலைத் தியானத்தில், ஆற்றல்களின் சிகரங்களைத் தொடும் மாற்றரிய மௌனத்தில், வானம் அளந்த சாதனைத் தவத்தில், வையம் வியப்பெய்தும் சோதனை ஆய்வில் **அருள் பழுத்த மகரிஷி** அவர்கள் கண்ட விஞ்ஞான, மெய்ஞ்ஞானக் கோட்பாடுகள் அறிஞர்

உலகை ஆச்சரியத்திலும், எளிய மனிதர்களைப் பரவசத்திலும் ஆழ்த்தி வருகின்றன. மனவளக்கலையும், உலக சமுதாய சேவையும், யோக பரிபக்குவ எளிமையும் ஒரு புதிய வீச்சாக நமது **தமிழகப் பரமஹம்சரிட மிருந்து** வெளிப்பட்டு வருகின்றன.

உலகை வலம் வரும் இந்த ஒளி முகில் கலகமற்ற அமைதி பூக்கவும், கலக்கமற்ற நிறைவு காய்க்கவும், களங்கமற்ற சாந்தி பழுக்கவும், அருள் மழை பொழிகின்றன.

✣ ✣ ✣

# 11. உலகத்தை வென்றவர்

**- சுகி. சிவம்**

மிக நீண்டகாலமாக, மனித சமுதாயம் முழுமைக்கும் அக்கறையோடு தோன்றிய ஞானிகளை ஓயாமல் ஓரங்கட்டுவது, புதைத்து விடுவது, வெளியில் தள்ளுவது என்று தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருந்த சக்திகளை முறியடித்து, மனிதவர்க்கத்தின் மீதுள்ள அக்கறையை, எல்லா மனிதரும் இறைநிலையை அடைய முடியும் என்ற உண்மைத் தத்துவத்தை, அதற்கு ஜாதியோ, அவர்கள் பார்க்கிற வேலையோ, அவர்களது தொழிலோ ஒருபோதும் தடையாக இருக்க முடியாது. அவனுடைய அக்கறைதான் முக்கியம். ஒழுக்கமான வாழ்வுதான் முக்கியம் என்ற உண்மையை மீண்டும் புதுப்பித்து இந்த உலகத்தில் வெற்றி பெற்றவர்தான் வேதாத்திரி மகரிஷி.

புத்தர் பெற முடியாதது, வள்ளலார்கூட பெற முடியாதது, இந்த உலகத்தில் தொடர்ந்து நடைபெற்ற சக்திகளால் மனித வர்க்கத்திற்கு தர நினைத்த கருத்துக்களை, மனிதவர்க்கம் பெற முடியாமல் போனதை தம் ஆயுள் காலத்திலேயே தந்து, அது நிரூபணமாக நிலைத்து, இன்று ஆயிரக்கணக்கான குடும்பங்களில் அந்த அறிவு நெறி நிலை வேரூன்றி இருக்கிறது என்றால் அதுதான் வேதாத்திரி மகரிஷி வழங்கிய வேதாத்திரியம் உலகத்திற்குக் கொடுத்திருக்கிற மிகப்பெரிய கொடையாகும். இதை நன்றியுடன் கொண்டாடுவோம்.

✣ ✣ ✣

# 12. வையகத்தை வாழ்த்தியவர்

- ஆனந்தா

சிறுவயதிலிருந்தே தன்னுடைய சொந்த முயற்சியால் உழைத்து முன்னேறி, வாழ்க்கையில் பல்வேறு இன்ப துன்பங்களைக் கடந்து தனது பல்லாண்டுகால அனுபவமான யோகப் பயிற்சிகளை அனைவருக்கும் வேறுபாடு இன்றி வழங்கி வழிகாட்டினார்.

இந்தியா மட்டுமல்லாமல் அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, தைபான், ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, பர்மா ஆகிய நாடுகளிலும், 1216 யோக மையங்களுக்கு மேல் தொடங்கப்பட்டு அவை சிறப்பாக இயங்கி வருகின்றன.

'வாழ்க வளமுடன்! என்று வையகத்தை வாழ்த்தியவர் ஆயிரக் கணக்கான கவிதைகள் எழுதினார். சுமார் 70-க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதி வெளியிட்டார்.

இதன் மூலம் இலட்சக்கணக்கான மக்களால் 'யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர், 2006-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் நாள் மகா சமாதி அடைந்தாலும், இன்றளவும் அவருடைய யோகப் பயிற்சிகளின் மூலம் மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

கோடிக்கணக்கானோர் மகரிஷியை தங்கள் குருவாகப் போற்றி பூஜையறையில் அவரது திருவுருவப் படத்தை வழிபடுகின்றனர்.

✣ ✣ ✣

## முதல்வர்கள் / துறைத்தலைவர்கள்

# 13. தீர்க்கதரிசி

- ச. ஜெயப்பிரகாசம்

அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் புதிய புதிய ஞானச் சிகரங்களின் மீது ஏறி நின்று அரிய பேருண்மைகளை மானுடம் உய்ய வழங்கி வருகிறார். மிக உயரே ஏறி நிற்கும் அவர், தமது அளவற்ற கருணையால் மானிடர் ஒவ்வொருவரையும் தம்முடன் உயரே ஏற அழைக்கிறார்; அதற்கான எளிய வழிமுறையையும் நமக்குத் தருகிறார்.

'நான் யார்?'' என்றமையக் கேள்விக்கு 'இறைநிலையே (நாமாக) தன்மாற்றம் அடைந்த நீண்ட சரித்திர உண்மையை' மகரிஷி உணர்த்து கிறார். நமது மூலமான ''இறைநிலையை'' நம்மில் சுடர்விடச் செய்ய அருட்தந்தை வழிகாட்டுகிறார். நமக்குப் புதிய 'பிறப்பு' (விழிப் புணர்வு/ பரிணாமம்) தர முற்படும் அவர் அருள் தந்தையாய், **அருள் தாயாய்** ஒளி விடுகிறார்.

இயற்பியல், வேதியியல், உயிரியல், பொறியியல், மருத்துவம், உளவியல், மொழியியல், பூகோளவியல், தத்துவம், வரலாறு, சமயம் என்று பல்வேறு அறிவுத் துறைகளைக் கடவுள் படைக்கவில்லை. இங்ஙனம் அறிவைப் பல்வேறு துறைகளாகப் பிரித்து ஆராய முற்பட்டது மானிட முயற்சியேயாகும். இங்ஙனம் கூறுகளாகப் பிரித்துப் பார்ப்பதால் சிறப்பு நிலை ஆய்வுகள் ஓரளவு விரைந்து வளர்ந்துள்ளன என்பது உண்மையே என்றாலும், அனைத்தையும் தொகுத்து ஒருங்கிணைத்துக் காணும் முழுமை ஞானம் பெரிதும் கைகூடாத ஒன்றாகிவிட்டது. ஒருங்கிணைந்த முழுமைஞான வெளிப்பாடாக மகரிஷியின் நூல்கள் அமைகிறது.

மானிடர் பகுத்தறிவுக்கு (Pre-rational) முற்பட்ட குழந்தைத் தனமாக (Childish) நிலையில் இழிந்து கிடப்பதே மிகுதியாகும். அசுரராய், அரக்கராய், மூடராய், விலங்குகளாய், மரமாய்... மானிடர் தாழ்ந்து விடுகின்றனர். பகுத்தறிவு (rational) விழித்தெழ மானிட நிலைக்கு உயர, மானிடர் முற்படுகின்றனர். அதற்கு மேலே பகுத்தறிவைத் (trans-rational) தாண்டிச் செல்லும் புதிய பரிணாமத்துக்கு ஏற்பவளர்ச்சியடையாது பின்தங்கியுள்ளசமயங்களையும், அறிவியலையும் புதிய வளர்ச்சிக்கு உந்தித்தள்ள மகரிஷி முயல்கிறார்.

அருள் தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் நம்முடன் வாழ்ந்து வரும் **மகத்தான தீர்க்கதரிசி** என்பதை இனங்கண்டு அவர்வழி நாம் புதிய சிகரங்களில் ஏறுவோம்.

✣ ✣ ✣

## 14. ஆற்றுப்படுத்தும் அருளாளர்

- முனைவர் பாக்கியவதி சங்கரலிங்கம்,
சென்னை

**வயது ஏழே** ஏழு; உடலில் துள்ளும் இளமை; உணர்வு சீரிய கருத்தோடு எப்பொழுதும் இயங்குவது: விட்டது பள்ளிக்கூடக்

கல்வி; தொடங்கியது வேலை மட்டுமன்று; சிந்தனையும் கூட; அதுவும் அகலமானது; ஆழமானது; கேள்விகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

தறியில் கை மின்னலை இயக்க, மனம் எண்ண மலைகளையும் சேர்த்தே பின்னியது. அவ்வெண்ணம் தன்னைப் பற்றியது அன்று; தன் குடும்பத்தைப் பற்றியதுமன்று; அகில உலகத்தையே பற்றியது. அது தொடரத் தொடர எழுந்த எண்ணமெல்லாம் எழுத்தாக மலர்ந்தன; மணம் பரப்பத் தொடங்கின.

அவ்வழுத்தும் எண்ணமும் சீரோடும் சிறப்போடும் கடலலையாய் அகலமாய் ஆழமாய் இடைவிடாது பரவிக் கொண்டே இருந்தன; இருக்கின்றன. விளைவு? மெய்ஞ்ஞானம் வளர வளர விஞ்ஞானத் துடனும் அதற்குத் தொடர்பு உண்டென்பதை உணர்ந்தது.

ஒவ்வொரு சமயத் தலைவரிடமும் ஏதோவொரு தனித் தன்மை உண்டு; ஆசான்களிடமும் அறிஞர்களிடமும் ஆழ்ந்த அறிவு உண்டெனத் தெளிந்தார் மகரிஷி. அவர்கள் அனைவரையும் தாமே நேரில் சென்று சந்தித்தார். அவர்களுடன் நுணுக்கமாக அளவளா வினார். அறிவு புகட்டினார்; தம் அறிவையும் வளர்த்துக் கொண்டார்.

மனம் சொன்னவற்றையெல்லாம் கை எழுதத் தொடங்கியது. எழுந்தன எண்ணற்ற நூல்கள். தாய் மொழி தமிழில் மட்டுமன்று; உலகத்தோடு தம்மை இணைப்பதற்கு உதவிய ஆங்கிலத்திலும் எழுதினார். அது அவர் கூறும் கூற்றுகள்: எழுதும் எழுத்துக்கள் ஆற்றும் பணிகள்: அவர் வாழ்ந்து வரும் வாழ்க்கை நம்மை ஆற்றுப்படுத்தும். நல்நெறிப்படுத்தும் ஆற்றலுடையதாய் விளங்கின்றமையின் வாழ்க்கை விளக்கமாக உள்ளார்கள்.

இவர் எல்லோருக்கும் வழங்கிய வாழ்த்துரைகளில் மிக உயர்ந்ததும், உண்மையானதும் ''வாழ்க வளமுடன்'' என்ற இரு சொற்களே.

✣ ✣ ✣

## 15. மக்கள் மனதில் வாழுபவர்

- முனைவர் ச. இராதாகிருஷ்ணன்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,

தத்துவஞானிகள் வேதாத்திரி மகரிஷி அவர்களின் சிந்தனைகள் எந்தச் சூழலுக்கும், எந்த மதத்திற்கும், எந்த இனத்திற்கும்

பொருந்தக் கூடியதாகும். மகரிஷி தம் நாடு, தம் மக்கள் என்று இல்லாமல் உலக மக்கள் அனைவருக்காகவும் வாழ்கிறார்.

நாம் வாழும் இன்றைய நவீன உலகம் பல சிக்கல்களை நேர்கொள்கிறது. இந்த உலகில் மனநிறைவுடன் வாழக்கூடியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவே. எனவே இவ்வுலகில் மனநிறவை, முழுமையாகத் தெளிவை நாம் உணரமுடியவில்லை.

ஒரு சிக்கல் ஏற்பட்டு அதை எதிர்கொண்டு முடிக்கும் முன்பே மற்றொரு சிக்கல் எதிர்கொள்கிறது. மனிதர்களிடையே தெளிவாக ஒரு தேடலும், அறிதலும், புரிதலும் தேவைப்படுகிறது. இந்தச் சிக்கலுக்கும், வாழ்வில் தெளிவிற்கும், வளத்துடன் வாழ்வதற்கும் மகரிஷி அவர்களின் சிந்தனை மிகவும் உதவிபுரிகிறது என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

மகரிஷி அவர்களின் தத்துவக் கருத்துக்கள் பல. மனித குல வாழ்விற்குத் தேவையான அடிப்படைக் கருத்துக்கள், சூழல்கள், அன்றாடம் நாம் எதிர்கொள்ளும் இயற்கை, தெய்வீகம், குடும்பம் பற்றி மகரிஷியின் கருத்துக்கள் மேம்படுத்துகிறது.

உலகின் தலைசிறந்தவர்களாக விளங்கிய **புத்தர், விவேகானந்தர், காந்தியடிகள்** போன்றோர் இன்றும் மக்களிடையே வாழ்ந்து வருவதற்கு அவர்களின் சீரிய கருத்துக்களும், சிந்தனைகளும் காரணமாகும்.

மனிதகுல முன்னேற்றத்திற்காகப் பல கருத்துக்களை வெளிப்படுத்தி, சமூகம் ஒழுங்குபட அமைதியும், சமாதானமும் பெற்று வாழ்வில் வளமுடன் வாழ மகரிஷி வழிவகுக்கிறார்.

எனவே, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் புத்தர், வள்ளுவர், காந்தி போல, மனித குலம் இருக்கும் வரையில் மக்கள் மனதில் நிலை பெறுவார் என்பது தெளிவாகும்.

✣ ✣ ✣

## 16. புதுநெறி காட்டிய புலவர்

– இரா.சந்திரன், மன்னார்குடி.

பாரதியும், வேதாத்திரி மகரிஷியும் கிட்டத்தட்ட சம காலத்தவர்கள், பாரதியின் 29 வயதில் மகரிஷி தோன்றுகின்றார். பாரதியும் மகரிஷியும் **பிறவிக் கவிஞர்கள்.**

இருவரின் கவிதைகளிலும் சொல் புதிது, பொருள் புதிது. புரிந்து கொள்வதும் எளிது. பாரதி மக்கள் கவி. மானுடம் பாடவந்த மாக்கவி, புது நெறி காட்டிய புலவன், கவிதைக்குப் புது வடிவம் கொடுத்தவன், பாரதியின் பாரம்பரியத்தில் வந்தவர் மகரிஷி.

நாட்டுமக்கள் அடிமைத்தளையை உடைக்கப் பொங்கி எழுந்தவர் பாரதி. ஆன்மாவின் அடிமைத் தளையை உடைக்க வீறு கொண்டு எழுந்தவர் மகரிஷி.

சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மாற்றிப் புதிய சமுதாயத்தைப் படைக்க வந்த மகான்கள் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்த விந்தை மனிதர்கள் தலைகவிழ பெண் விடுதலை பற்றிப் பாடியவர்கள், பக்தியில் ஆரம்பித்து ஞானத்தில் முடிக்கிறார் பாரதி. ஞானத்தில் ஆரம்பித்து ஞானத்தில் தொடர்கிறார் மகரிஷி.

பல தெய்வங்களைப் பற்றிப் பாடினாலும் பரம்பொருள் ஒன்றே என முடிக்கிறார் பாரதி. பரம்பொருள் எப்பொழுதும் ஒன்றுதான் என அழுத்தம் திருத்தமாக அறிவியல் நோக்கோடு பாடுகிறார் மகரிஷி.

துவைத தத்துவத்தில் ஆரம்பித்து அத்துவைதத்தில் முடிக்கிறார் பாரதி. அத்துவைதத்தில் ஆரம்பித்து அத்துவைதத்தில் ஆழ்ந்து சொல்கிறார் மகரிஷி.

பாரதி பல செய்திகளை முன் மொழிகின்றார். மகரிஷி அறிவியல் கண்ணோட்டத்துடன் அவைகளை வழி மொழிகின்றார்.

பாரதி தத்துவங்களை வேதாந்தமாகப் பாடுகிறார். மகரிஷி அவற்றை எல்லாம் சித்தாந்தமாக்குகிறார்.

செய்க தவம் செய்க தவம் என்றார் பாரதி. தவம் செய்ய பயிற்சி கொடுக்கிறார் மகரிஷி.

பாரதி, மகரிஷி இருவரின் பன்முகப் பரிணாமங்கள் மக்களின் வாழ்க்கையின் உயர்வுக்குப் பயன்படும்.

✣ ✣ ✣

# 17. தமிழ்ச் சான்றோர்

- முனைவர் கடவூர் மணிமாறன்,
ஈரோடு,

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அருட்பேராற்றல் நிறைந்த **மெய்ப்பொருள் அறிஞர்.** உலகெங்கும் நன்கு அறியப் பெற்றவர். 'வாழ்க வையகம் வாழ்க வளமுடன்' என்னும் உயரிய பொதுமைக் கோட்பாட்டை முன் நிறுத்தி உலகோர் இன்புற்று வாழ அறிவுறுத்தும் **விரிந்த சிந்தனையாளர்.**

ஆன்மீகம், மெய்யறிவியல் (தத்துவம்), மாந்தவியல், இயற்கை நெறி ஆகிய பல தளங்களிலும் தடம் பதித்து உண்மை விளக்கம் உணர்த்தி வருவதோடு 'மனவளக்கலை' மூலம் ஓர் எழுச்சியை விதைத்து வருபவர். எளிமையும், இனிமையும், புதுமையும் நிறைந்த பாடல்களை எழுதித் தம் புலமைத் திறத்தையும் வெளிப்படுத்தி வரும் ஆற்றலாளர்.

யாப்பு நெறி பிறழாத நூற்றுக்கணக்கான பாடல்கள் மூலம் உயரிய சிந்தனைகளையும், வாழ்வியல் மெய்ம்மைகளையும், இறையறிவையும், உயிரறிவையும், வினை விளைவு நீதியறிவையும் எடுத்துரைத்து வரும் இனிய **தமிழ்ச் சான்றோர்** ஆவார். இவர் தம் பாடல்களில் பொதிந்து சிறக்கும் எளிமை, இனிமைச் சிறப்புகள் படிப்பவரை வியக்க வைக்கும்.

நினைந்து நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து அருள் பாடல்களைப் பாடிய வள்ளலாரைப் போல அருள் நெறியையும் உயிரிரக்கக் கொள்கை உணர்வையும் சாதிமத மறுப்பையும் உலகியல் பொது நோக்கையும் ஆழப்பதித்து வருபவர் அருட்தந்தை மகரிஷி.

✣ ✣ ✣

நீதிபதி

# 18. இரயில் நண்பர்

- நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார்

திரு. வேதாத்திரியவர்களை நான் சுமார் 30 ஆண்டு காலத்திற்கும் மேலாக அறிந்திருப்பதோடு, நான் இருந்த கிராமம் கூடுவாஞ்சேரிக்கு

10 மைல் தொலைவில்தான் இருந்தது. மேலும் 1940-41-ல் நான் வழக்கறிஞனாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் பணியாற்றியபோது அடிக்கடி அவரை ரயிலில் சந்திப்பதுண்டு.

அப்போதெல்லாம் நாங்கள் நெருங்கிப் பழகுவோம். பெரும் பாலும் தத்துவ ஞானத்தைப் பற்றியும், வேதாந்தத்தைப் பற்றியுமே நாங்கள் சம்பாஷிப்போம். என்னை வளர்த்தவர் ஒரு சாது. ஆதலால் எனக்கு இயல்பாகவே இளமை முதல் தத்துவ ஞானத்தில் விருப்பம் ஏற்பட்டிருந்தது.

திரு.வேதாத்திரி அவர்கள் அப்போதே நல்ல தமிழில் சுவையான பாடல்களை எழுதி அவற்றை எனக்குப் படித்துக் காட்டுவார். உலக சேவையைப் பற்றியே அவர் எப்போதும் பேசிக்கொண்டிருப்பார்.

திரு.வேதாத்திரியவர்களிடம் தூய்மையும், எளிமையும் நிறைந் திருப்பதால்தான் நாம் இவரைப் போற்ற வேண்டியுள்ளது. நெற்றி நீர் நிலத்தில் விழ உழுதுண்டு வாழும் ஒரு பாட்டாளியைக் காணும் போதெல்லாம் உண்மையில் அவனிடமே கடவுள் குடிகொண்டிருப் பதாக எனக்குத் தோன்றும். உண்மையில் அவனே கர்மயோகியாவான், கள்ளங்கபடமற்ற அவனிடம்தான் கடவுள் தன்மையும் குடியிருக்க முடியும். திரு.வேதாத்திரி அவர்கள் கடமையுணர்வையும், உழைப்பையும் வலியுறுத்துவது பாராட்டிற்குரியது.

✣ ✣ ✣

## ஆய்வியல் நிறைஞர்கள்

# 19. கவி வெள்ளம்

- ந. விஜயன்

தம்மபதம் தந்த **பாலியையும்**, குர்ரான் இறக்கப்பட்ட **அரேபிய மொழியையும்**, பைபிள் அருளிய **அராமெய்க் மொழியையும்** மனித குலம் மறக்கமுடியுமா! அந்தக் காலகட்டத்தில்தான் மனிதர்களை நெறிப் படுத்த அனுபவங்களின் உத்தியால் வடிவமெடுத்து அடுத்த சந்ததி யினரையும் நெறிப்படுத்தவே தோன்றியது இலக்கியங்கள். அவ்விலக்கிய வரிசையில் திருமூலர், வள்ளலாரைத் தொடர்ந்து இன்று நமக்குக் கிடைத்த ஒரு **ஞான இலக்கியமே** வேதாத்திரிய இலக்கியம்.

இது மனிதனின் பரிணாம சரித்திரத்தையும், அவனது வாழ்க்கை நெறிகளையும், அவனது எதிர்காலச் சிந்தனையும் செயலும் எவ்வாறு அமைய வேண்டும் என்ற நியதிகளையும் மனித குலத்திற்கு உணர்த்து கிறது. முறையான இலக்கினை மனித குலத்திற்கு எடுத்தியம்புவதே எனலாம்.

''அறந்தழைக்கவும், மறம் வீழவும், காலத்தின் கட்டாயமாக உலகை உய்விக்க மகான்கள் தோன்றுவார்'' என்ற உரைக்கிணங்கத் திருமூலர் முதலிய சித்தர்களும், ஆழ்வார்களும், நாயன்மார்களும், தாயுமானவரும், இராமலிங்கரும் என வாழையடி வாழையாக வந்த ஞானியர் திருக்கூட்டம், தமிழ் நிலத்தில் அணிவகுத்தது, தமிழ் இலக்கியத்திற்கு இவரது வேதாத்திரியக் கவிதைகளே!

மகரிஷியின் கவிகள் எளிமையானவை, சிறந்த கவிக்குப் பெயர் பெற்றவை, கவிதைகளின் வரிகள் அனைவருக்கும் புரியக் கூடியவையாக அமையும்.

**பாட்டெழுதும்** பழக்கமுள்ள மகான் வேதாத்திரி மகரிஷியிடம் இயற்கை ரகசியம் மலர்ந்து, இவரிடம் எழுத்தாய் மாற அந்த எழுத்துக்களின் தொகுப்பே வேதாத்திரிய இலக்கியம். இந்த இலக்கியத்தில் வேகாத அரிசியும் இல்லை, வெந்த அரிசியில் வேண்டாத கல்லுமில்லை எனலாம்.

✣ ✣ ✣

# 20. மனோதத்துவர்

- சி. பிரகாஷ்

உலகில் விளக்கம் அளிக்க முடியாத சில வகைகளில் மனமும் ஒன்று. அறிஞர், ஞானிகள் பலர் மனம் என்பதற்கு விளக்கம் அளிக்கவே நம் மனத்தை அர்ப்பணம் செய்துள்ளார்கள். ஏனெனில், மனந்தான் வாழ்வின் கருவறை. **மனமென்ற கருவறை எவ்வளவு வலிமையானதாக இருக்கிறதோ அதற்கேற்பச் சக்தியுள்ள நம் வாழ்க்கைக் குழந்தை பிறக்கிறது**. மனதைப் பற்றிப் பாடாத தத்துவஞானிகள் இலர். மகரிஷி அவர்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு மனம் என்பதற்குப் புதிய விளக்கம் கொடுக்கிறார்.

**''மனம் என்றால் சீவகாந்த அலையன்றி வேறோ**
**மனம் நிலைத்தால் அறிவு. அதே இறைவெளி மெய்ப்பொருளாம்''**

என்கிறார். மனம் என்பது இந்த அகண்டாகாரத்தில் உலவும் காந்த அலை. ஜீவனுக்கும் காந்த அலைக்கும் உள்ள பிணைப்புதான் மனம். அந்த மனிதனின் நிலைப்பாடு பொறுத்துதான் அறிவு. அதுவே மெய்ப்பொருளும் என்கிறார்.

மனமென்றால் அது அமைதியாக இருக்க வேண்டும். தூய்மை யானதாக இருக்க வேண்டும். அதற்கு ஜீவகாந்த அலைகள் சீராக்கி அலைவுற வேண்டும். அதற்கு எளியமுறை உடற்பயிற்சி முறைகளைப் பயில வேண்டும் என்று வழிகாட்டுகிறார் மகரிஷி.

❖ ❖ ❖

# 21. ஆன்மீகப் பேரொளி

- சி. இராசலிங்கம்

நிலையற்ற இவ்வுலகில் பற்பல உயிரினங்கள் தோன்றி வாழ்ந்து மறைகின்றன. பிறப்பில் மிகவும் புனிதமானது மனிதப் பிறவியே ஆகும். பிறவியின் மேன்மைகளையும் மகத்துவத்தையும் அறிந்து அறவழியில் நின்று ஆன்மீகத் தொண்டாற்றிய பல சித்தர்களும் ஞானி களும் தோன்றிய இந்தப் புண்ணிய பூமியில் தன்னுடைய வாழ்வில் ''உன்னத உண்மை **நிலையையுணர்ந்து அருட்பணி செய்திடவே தோன்றியவர் வேதாத்திரி மகரிஷி** அவர்கள் ஆவார்.

இளம் வயதிலேயே ஆன்மீகத்தில் ஈடுபட்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்களைப் போலவே மகரிஷியவர்களும் தம்மிடம் ஆன்மீக ஒளியைக் கண்டு பல ஞானிகளிடம் நட்புறவு கொண்டு ஆன்மீகப் பயிற்சி பெற்றவர்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதற்கிணங்க தான் உணர்ந்த மெய்ம்மையினை அனைவரும் உணரும் பொருட்டு 1958-ல் கூடுவாஞ்சேரியில் உலக சமுதாய சேவா சங்கத்தை ஏற்படுத்தி மக்களுக்கு ஆன்மீக நெறியைப் போதிக்கும் ஆசானாக விளங்குகிறார்.

இவ்வுலக மக்கள் பல தீய சக்திகளுக்கும் கொடிய எண்ணங் களுக்கும் ஆட்பட்டு, நாட்டையே கோர நாட்டியமாடச் செய்து கொண்டிருக்கின்றனர். இந்தத் தீயவழியில் இருந்து நல்வழிக்கு மீட்டுருவாக்கம் செய்திட வேதாத்திரி மகரிஷியவர்கள் வேதாத்திரியம் என்னும் நூலில் வாழ்வியலுக்கு உகந்த சிறந்த வாழ்க்கை நெறிகளைக் கூறியுள்ளார்.

''கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'' என்பதற்கு இணங்க, இந்த உலகத்தில் நடக்கும் போரின் விளைவுகளால் சதைப் பிண்டகத்தின் சிதறல்களை நீக்கவும் மக்களின் கொடிய துயரைப் போக்கிட ஆன்மீகப் போராளியாய் மகரிஷியவர்கள் போரில்லா நல்ல நல்லுலகைப் படைக்க முனைகின்றார்.

✣ ✣ ✣

**புலவர்கள்**

## 22. பிறர்க்கென வாழ்பவர்

- புலவர் ப. வெள்ளை, ஸ்ரீவில்லிபுத்தூர்

''வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்! என்னும் தாரக மந்திரத்தைத் தரணிக்குத் தந்த அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர். இன்முகம், எளிமை இரண்டையும் செல்வமாகப் பெற்றவர். ஆழியாறு அறிவுத் திருக்கோயில் அமைத்து அருள் தொண்டாற்றி வருபவர்.

ஒருவர் தாம் எழுதிய நூலுக்குத் தாமே உரை எழுதினால் சிறப்பாக இருக்கும். மற்றவர் உரை எழுதினால் நூலாசிரியரின் கருத்துக்கு ஏற்றதாகவோ, சிறிது வேறுபட்டோ கூட இருக்கலாம். மகரிஷி தாம் எழுதிய நூலுக்குத் தாமே உரை எழுதியுள்ள தன்மை அவர் கருத்தை நன்கு புரிந்து கொள்ள உதவுகிறது. ''உலக சமாதானம்'' என்ற நூலுக்கு மகரிஷி தாமே உரை எழுதியுள்ளார்.

''பாடல்களைப் படிக்கத் தெரியாதவர்கள், பழக்கம் இல்லாதவர்கள், தெளிவாக விளங்கிக் கொள்ளவும், எந்த உள்நோக்கத்திலிருந்து இந்தக் கவிகள் உதித்தன என்பதைத் தெளிவுபடுத்தவும் ஒவ்வொரு கவியின் அடியிலும் விளக்கவுரை கொடுக்கப்பட்டிருப்பதை உணர முடிகிறது.''

''படைப்பாளனின் மனதில் தெளிவு இருந்தால் அவனது படைப்பும் தெளிவாக அமையும். ஒருவரது மொழிநடை அவரது தெளிவைப் புலப்படுத்துகிறது'' என்பார் திறனாய்வாளர் ந.பிச்சமூர்த்தி. எனவே, மகரிஷியின் மொழிநடை உரையின் - அவரது தெளிவைப் புலப்படுத்தும் தன்மையை உணர முடிகிறது.

✣ ✣ ✣

## 23. உலக உத்தமர்

- புலவர் க. தியாகராஜன்

மனிதன் தொண்டு செய்யப் பிறந்தவன். தொண்டு செய்து கடவுளை அடைதற்பொருட்டே நமக்கு மனித உடல் தரப்பட்டுள்ளது. உயிர்கள் அனைத்துள்ளும் நல்ல உடலையும், நல்ல உள்ளத்தையும் மனிதன் பெற்றிருக்கின்றான். உடலையும், உள்ளத்தையும் பயன்படுத்தி மனிதன் பணிபுரியலாம். பணிபுரிதலே மனிதனது கடமையாகும். பணிபுரிதலோடு மனிதனுடைய கடமை முடிவடைந்து விடுகின்றது.

நம்முடைய குருநாதர் அருள்தந்தை அவர்கள் தன்னை முற்றிலுமே உலக நலனுக்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் எழுதிய ''வாழ்க்கை விளக்கம்'' என்ற நூலில் எத்தனை எத்தனை வகையான தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதை தெளிவாக யாவரும் அறிந்து கொள்ளலாம்.

**பண்பிலே மகரிஷியைப் போல் மற்றொருவரைக் காணமுடியாது.** சிறந்த தத்துவ ஞானத்தையும் அவர் உலகுக்கு வழங்கி வருகிறார். உலக மக்களிடத்து ஒப்பற்ற அனுதாபத்தையும் காட்டி வருகிறார். ''உலக சமாதானநூல்'' ஒன்றேஅவரின்உலகநலத்தை, உலக ஒற்றுமையை, ஓருலக ஆட்சியின் அவசியத்தை எடுத்துவிளக்கும். அவர் ஒரு பெரிய **தன்னி கரற்ற தத்துவஞானி.** ஒப்புயர்வற்ற தத்துவங்களை அவர் உலகுக்குப் புகட்டி வருகிறார். செயற்கரிய பெரிய செயல்களை உலகிலே செய்து கொண்டு இருப்பதற்கு இடையில் நமக்கு ஒரு தனி இடத்தை அவர் விரும்பாதவராக விளங்குவதனை நாம் அறிவோம்.

✣ ✣ ✣

### முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

## 24. இறைச் சிந்தனையாளர்

- மோ.கிறிஸ்டி,
தமிழ்ப் பல்கலைக்கழகம்.

2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு இவ்வுலகில் பிறந்து மனிதனோடு மனிதனாக வாழ்ந்து, மக்களோடு உறவாடி, மக்களை நல்வழிப்படுத்தும் விதத்தில், தமக்குள்ள இறை ஆற்றலின் மூலம்

மக்களுக்கு எளிமையாகப் புரியும் வண்ணம் உவமைகளின் மூலமும், தம்முடைய வாழ்க்கை நெறிமுறைகளின் மூலமும் மக்களுக்குப் போதித்து உள்ளார்.

இதேபோல் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களும் மக்களை நல்வழிப்படுத்தும் விதத்தில் போதனைகளாகவும், அருட் பாடல்களாகவும் இறை குறித்த சிந்தனைகளாகவும் போதித்து மக்களை நல்வழிப்படுத்துகின்றார். இவ்விருவருடைய இறை சிந்தனைகளும் போதனைகளும் மானுடம் தழைக்க பேருதவி புரிகின்றன.

மனிதகுலம் மேம்பட இயேசுவும் மகரிஷியும் கூறிய இறை சிந்தனைகளில் ஒன்றுபடுகின்றனர். அவரவர்கள் வாழ்ந்த கால கட்டங் களுக்கேற்ப கூறிய சிந்தனைத் துளிகளை மனிதகுலம் செயல்படுத்தும் போது வாழ்க்கை மேம்பாட்டை அடையும் என்பதில் ஐயமில்லை.

✣ ✣ ✣

## 25. வெள்ளைச் சித்தர்

- க.ப. வித்தியாதரன்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சமயம் சார்ந்த சான்றோர்கள் பலர் இத்தமிழ் மண்ணில் தோன்றியுள்ளனர். ஆயின் 'சன்மார்க்கம்' என்ற பொருண்மையில் ஒரு தோழமை யோகத்தை வலியுறுத்தியவர் வள்ளல் பெருமான். அவ்வள்ளல் பெருமானுக்குப் பின் இருபதாம் நூற்றாண்டின் மானுடம் சிறக்க, தனிமனித வாழ்வின் மேம்பாட்டிற்குரிய சிந்தனை களையும், உலகச் சமய மேம்பாட்டிற்குரிய சிந்தனைகளை அருள் உரையாக இன்றைக்கு உலகளாவிய அளவில், இயற்கையின் ஆற்றலையும், இறைநெறியின் ஆற்றலையும் இணைத்து ஆன்மீக அறிவியல் சிந்தனையாக மக்களுக்கு எடுத்துக் கூறிவரும் **மகரிஷி அவர்கள் வெள்ளாடை அணிந்த வெள்ளைச் சித்தராகவே வாழ்ந்து வருபவர்.**

✣ ✣ ✣

# 26. சமுதாயச் சிந்தனையாளர்

- மா. இராமன்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,

சமுதாயத்தில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் மானுட குலம் தழைத்து முன்னேறுவதற்குப் பல ஞானிகள், மகரிஷிகள் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றித் தன்னாட்டை வளப்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் **காரல்மார்க்ஸ், காந்தியடிகள், தாகூர், சிவானந்தா, ரமண மகரிஷி, ஜி. கிருஷ்ணமூர்த்தி** ஆகியோர் புகழ்பெற்ற சிந்தனையாளர்கள்.

அந்த வரிசையில் இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றி நம்மிடையே வாழ்ந்து வரும் வேதாத்திரி மகரிஷி அவர்கள் சமுதாயம் வளர்ச்சிபெற ஆன்மீகத்தையும், தம் வாழ்வில் உணர்ந்த பட்டறிவையும் சமுதாயச் சிந்தனைகளாக விதைத்துள்ளார்.

சமுதாயம் வளர்ச்சி பெற ஆன்மீக நெறியாளர்கள் காலந் தோறும் தம்முடைய வாழ்வில் உணர்ந்த பட்டறிவையும், அரிய சிந்தனைகளையும் தொகுத்துத் தருகின்றனர். வள்ளுவர் முதல் வள்ளலார் வரை அனைவரும் சமுதாயச் சிந்தனைகளை மானுட நெறியோடு இணைத்து மனிதம் மேம்பட அரிய சிந்தனைகளைத் தந்துள்ளனர்.

காரல் மார்க்ஸ், லெனின் தொடங்கி அவர்கள் சிந்தனைகள் வரிசையில் பாரதிதாசன் அவரைத் தொடர்ந்து பரம்பரைக் கவிஞர்கள் பலரும் தொழிலாளர் நலன் பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டினர். மெய்ஞ்ஞான மார்க்கத்திற்கு வழிகாட்டும் மகரிஷியும் பொதுவுடைமை வாதிகளின் பார்வையில் இந்தப் பிரச்சனையை அணுகியிருப்பது புதுமையானது.

இறை நிலை பற்றித் தெளிவு பிறந்த பின்பு பிற ஆசாரங்கள் பொருளிழந்து போகின்றன என்பது மகரிஷியின் கருத்து. **படையலெல்லாம் பக்தனுக்காகவே அன்றி, இறைவன் அதன் தேவைகளைக் கடந்தவன் என்பதையும் நளினமான எள்ளலோடு உரைக்கிறார்.** இவ்வாறு வேதாத்திரி மகரிஷி அவர்கள் பல பாடல்களில் சமுதாயச் சிந்தனைகளை எடுத்துரைத்துள்ளார்.

✣ ✣ ✣

# 27. புதுமைச் சித்தர்

- க. நேசன்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்

உலக சமுதாய சேவா சங்கத்தைத் தோற்றுவித்த வேதாத்திரி மகரிஷி அவர்கள் அத்வைதக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட இந்நாளைய வாழும் அருட்தந்தை, தென்னாட்டில் பக்தி இலக்கியம் முருகி வளர்ந்தபோது **சங்கரர், மத்துவர், இராமநுஜர்** தோன்றித் தத்துவங்களை வாதிட்டு சமய எழுச்சியூட்டினர். அவர்கள் ஊட்டிய அத்வைதக் கோட்பாட்டை நம் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் **புதுமை நோக்கில்** இந்நாள் வாழ்வியலுக்குப் பயன்தரும் வண்ணம் தந்துள்ளார்.

திருமூலர், தாயுமானவர், வள்ளலார் வழியில் அருட்தந்தை அவர்களும் அத்வைதக் கோட்பாட்டை உருவாக்கி வாழ்ந்து வருகின்றார். வள்ளலார் பெருமானோடு அருட்தந்தையார் பத்தாண்டுகள் இருந்துள்ளார். அப்போது உருவானதே வேதாத்திரியக் கருத்துக்கள்.

அருட்தந்தை அவர்கள் அத்வைதக் கோட்பாடுகளாகத் தத்துவங் களைத் தந்து, விளக்கம் தந்து சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞானமாக விளக்குகிறார்.

❖ ❖ ❖

## மருத்துவர்கள்

# 28. விந்தை மனிதர்

- க.வி. ஆனந்தநாராயணன்
எம்.எஸ்.சி.,எம்.எஸ்,
செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி

பலவருட ஆராய்ச்சிக்குப் பிறகு நமது அருள்தந்தை அவர்களால் நமக்கு அளிக்கப்பட்ட இந்த எளியமுறை உடற்பயிற்சி, விஞ்ஞானி களும், மெய்ஞ்ஞானிகளும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.

உடற்கூறு, உடல் இயக்கம் இவற்றை நன்கு கற்றறிந்த மருத்துவன் என்ற முறையில் இந்த எளியமுறை உடற்பயிற்சியைச்

செய்யும்போதும், மற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கும்போதும் நமது உடல் உறுப்புகள் அடையும் நன்மைகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்து பார்க்கும் போதும் மகரிஷி அவர்களின் இந்த உடற் பயிற்சி எனக்கு இன்றும் வியப்பை அளித்துக் கொண்டே இருக்கிறது.

மகரிஷி வாழும் காலத்தில் இருக்கும் நாம் இந்த எளியமுறை உடற்பயிற்சியை நன்கு பயின்று தொடர்ந்து செய்து வந்தோமாகில், நமது ஆன்மீகப் பயணமாகிய நலவாழ்க்கை சீராக இருக்கும் என்பது திண்ணம்.

❖ ❖ ❖

## 29. ஞானாசிரியனின் மருத்துவம்

- **Dr.** சிவக்குமரன் **BHMS M.Sc., (Phy)**

**மதுரை.**

எமது வாழ்க்கையில் ஆழ்ந்த மாற்றத்தைக் கொடுத்தது இரண்டு விஷயங்கள். (1) மனவளக்கலை, (2) ஹோமியோபதி மருத்துவத்தின் சிறப்பு. "அருள்தந்தை கட்டுரையும், ஞானாசிரியனும் மருத்துவமும்" என்ற கட்டுரையும் எமது கண்களுக்கு ஒளியூட்டின.

"மருந்து" என்பதற்கு அர்த்தம் என்ன? என்று மருத்துவரைக் கேட்டால், The word Medicine is defined as substance which is prepared from drugs with prescribed pharmaceutical formula என்பதில் வரும். இதில் என்ன அர்த்தம் உள்ளது?

ஆனால், மருந்து=மரு உந்து என விளக்கிக் காட்டி, எப்படி ஒரு வீட்டில் மகளாக உள்ள பெண், தன் கணவன் வீட்டிற்குச் செல்லும் போது மருமகளாக மருவுகிறாளோ, அதைப்போல் நமது உடலில் உள்ள உந்து சக்தியில் (உயிர்) குறைபாடு ஏற்பட்டால் அது உடலில் நோயாகவும், உள்ளத்தில் களங்கமாகவும் வெளிப்படுகிறது.

இவ்விரண்டினையும் நீக்குவதற்கு, பிறிதொரு பொருளில் (தாவரம் உலோகங்கள், மண், விலங்குகள், கதிர்வீச்சுகள், அயனிகள் மற்றும் பல) உள்ள உந்து சக்தியை உரிய முறையில் (Dybamization or attanation) பிரித்தெடுத்து எவ்விதமான குறைபாடு உள்ளது என்பதை ஆராய்ந்து, அதற்கு ஒத்ததாக (Law of Similars) உள்ள உந்து சக்தியைக் கொடுத்து, நோயாளியின் உந்து சக்திக் (Vital Force) குறைபாட்டை நீக்கும் முறையே மருத்துவம் என்றும், அவ்வாறு உந்து சக்தி மருவும்

போது நோயாளியின் ''ஜீவகாந்த திணிவு, பெருக்கமடைந்து உந்து சக்தி மீண்டும் முழுமை அடைகிறது நோயாளி பூரண ஆரோக்கிய நிலைக்குத் திரும்புகிறார்.

உந்து சக்தியின் மருவும் தன்மையே மருந்து எனக்கூறி தெளிவு படுத்தி (1) நோயாளியை அடித்துத் திருத்துவது அலோபதி (2) நோயாளியைப் புத்திகூறித் திருத்துவது சித்த மருத்துவமும் ஆயுர் வேதமும் (3) நோயாளியைத் தியானத்தால் வாழ்த்தியே திருத்துவது போன்றது ஹோமியோபதி என்று மருத்துவத்தின் அடியாழத்தை திருவள்ளுவப் பெருந்தகைக்கு அடுத்து உலகிற்கு உணர்த்தியது வள்ளலாரும், வேதாத்திரி மகரிஷியும் மட்டுமே.

✣ ✣ ✣

# 30. அளவற்ற அருளாளர்

**- Dr. V. கென்னடி, MD., (ACU)**

**ஒசூர்.**

இந்தப் பூமியில் உலக மக்கள் தொகை மொத்தம் 666 கோடி. இந்த 666 கோடி மக்களுக்கும் அளவிட முடியாத ஞானத்தை, பொக்கிஷத்தைக் கொடுத்துச் சென்றுள்ளார்கள் நம் முன்னோர்கள். அவர்களில் தற்பொழுது மிக முக்கியமானவராகத் திகழ்பவர் **அளவற்ற அருளாளர் ஆசான் அருள்தந்தையே.**

அவர் அருளிய மனவளக்கலையைப் பயின்று அதன் மூலம் கிடைத்த ஞானம் என்பது ஞாலத்தின் மாணப்பெரிது தோலிற்குத் தென்றலாகவும், சுவைக்கு அமுதமாகவும், மனத்திற்கு மலராகவும், பார்வைக்குப் பாராகவும் (அகிலம்), செவிக்குத் தேனாகவும், மனத்திற்கு விழிப்புணர்வை தொகுப்புணர்வாக்கிக் கொடுத்த அறிவாகவும் ஒவ்வொரு துளி மணி நேரமும் மனத்தில் உற்சாகத்தை கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. முழுமலர்ச்சி பெற்ற இந்தக் கலையானது அருட்பேராற்றலின் கருணையினால் எல்லாத் தரப்பு மக்களிடத் தேயும் சென்று மணம் பரப்பி, பயனடைந்து, நோயில்லாத, துன்ப மில்லாத, பிரச்சனை இல்லாத, தொல்லை இல்லாத உலகை உருவாக்கி வருகிறது.

உலக அளவில் 80 சதவிகித மக்கள் அவர்களுடைய வாழ்க் கையில் சுமார் 20 சதவிகிதம் மட்டுமே நிறைவடைகிறார்கள் என்றும்,

ஆனால் 20 சதவிகிதம் மக்கள் அவர்களுடைய வாழ்க்கையில் 80 சதவிகிதம் மட்டுமே நிறைவடைகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

அன்புடையோர் சிலராகவும், அன்பில்லாதவர்கள் பலராகவும், பண்புடையோர் சிலராகவும், பண்பில்லாதவர்கள் பலராகவும், வளமையில் செழிப்போர் சிலராகவும், வறுமையில் வாடுவோர் பலராகவும், நோயற்றவர்கள்சிலராகவும், நோயுள்ளவர்கள் பலராகவும், பிரச்சனையின்றி வாழ்வோர் சிலராகவும், பிரச்சனையுடன் வாழ்வோர் பலராகவும், அறிவுடையோர் சிலராகவும், அறிவில்லாதவர்கள் பலராகவும் இருப்பதற்கு என்ன காரணம்? பூமியில் ஏதேனும் பற்றாக் குறை உண்டா? குற்றம் ஏதேனும் உண்டா? எல்லோரிடத்திலும் விழிப்புணர்வின்மையே காரணம்.

ஆறாவது அறிவை அறியவில்லை என்பதே உண்மை. **இவற்றை யெல்லாம் சரி செய்வதற்கே அருட்பேராற்றலானது அருள்தந்தை வேதாத்திரி மகரிஷியைப் போல மகான்களை உருவாக்கிக் கொண்டே யிருக்கும்.** எப்பொழுதும் இந்தப் பூமியை புதுப்பித்துக் கொண்டேயிருக்கும்.

✣ ✣ ✣

## 31. தாரக மந்திரம் தந்தவர்

- Dr. G. கார்த்திகேயன், M.B.B.S., M.R.S.H.,
திருவாரூர்.

போட்டிகளும், பொறாமைகளும் நிறைந்த இன்றைய உலகச் சூழலில் இளம் மாணவர்களின் மனநலத்தைப் பாதுகாப்பது அவர்களது வளமான வாழ்வுக்கும், சிறந்த எதிர்காலத்திற்கும் மிக இன்றியமை யாதது. மனதை வளப்படுத்தி அவர்களை உடல் அளவில் மன அளவில் பக்குவப்படுத்தும் மிக எளியபயிற்சி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலையாகும்.

மனித வாழ்வில் மிக இன்றியமையாத பருவம் பத்து முதல் பத்தொன்பது வயதுக்குட்பட்ட வளரும் இளம் பருவம் ஆகும். இவர்களின் எதிர்காலத்திற்கான அஸ்திவாரம் இப்பருவத்தில் அமைவதால், சரியான சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவர்களின் வாழ்க்கை முழுவதும் பிரதிபலிப்பதால் சரியான பாதுகாப்பும் அரவணைப்பும் இவர்களுக்கு அவசியம். இப்பருவத்தினருக்கான பாதிப்புகள் பருவமாற்றம், ஊட்டச்சத்து, பாலியல், சூழ்நிலை ஆகியவற்றால்

ஏற்படுகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து இவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பயிற்சிகள் மூலம் இவர்களின் மனதை வளப்படுத்தி மேம்படுத்துவதும் முக்கியமாகும்.

தத்துவஞானி மகரிஷி அவர்கள் இளம் பருவம் வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டிய பருவம், கல்விக்கே உரிய பருவம், குண நலன்களைப் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய பருவம் என முக்கியப் படுத்துகிறார். இவர்களது கற்கும் திறனை உயர்த்தவும், சிந்திக்கும் ஆற்றலை அதிகரிக்கவும், தீய எண்ணங்களை நீக்கி நல்லெண்ணங்களை உருவாக்கவும், சிறந்த வாழ்க்கை கல்வி ''மனவளக்கலை'' என்கிறார். இக்கலை அளிக்கும் எளிய முறை உடற்பயிற்சி, எளியமுறை காயகல்பம், தவம் மற்றும் அகத்தாய்வுப் பயிற்சிகள் இப்பருவத்தினர் அறிவியல் தெளிவு பெற்று வாழ்வில் அமைதிபெற உறுதுணையாய் உள்ளது.

✣ ✣ ✣

## 32. நூற்றாண்டு கண்ட மகான்

- **Dr. M.V. ரபீந்திரநாத் M.Sc., M.D.,**
**கோவை.**

இந்த நூற்றாண்டு கண்ட மகான் வேதாத்திரி மகரிஷி அவர்கள். மகரிஷியின் தத்துவச் சிறப்புகள் பல. இறைநிலைக்குச் சரியான சொற்பொருள் விளக்கம் (Definition) தந்த மகரிஷி அவர்களே! **எளிமையே உருவான யோகிராஜ் எழிலுகம் போற்றும் வகையில் அத்வைத விளக்கம் தந்தார்.** இறைநிலையை உணர்த்திய மகரிஷி மனிதனை முழுமையாக ஆராய்ந்து விளக்கம் தந்தவர்.

இறைநிலையையும், மனிதநிலையையும் விளக்கிய மகான். மனிதனைத் தெய்வமாக்கத் தந்ததே மனவளக்கலை. பிரபஞ்சம் முழுவதும் இறைநிலையே அன்றி வேறில்லை எனும் அத்வைத சித்தாந்தம் புதிதல்ல என்றாலும் வேதகாலம் தொட்டு வருவதுதான் என்றாலும், மனிதனைத் தெய்வமாக்க எளிய வழிமுறைகளையும், யுக்திகளையும், நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் எளிய தெளிந்த கருத்துக்களை கூறுகிறார்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் ''வாழும் காலத்திலேயே தெய்வ மாகலாம்'' என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

✣ ✣ ✣

# 33. சிகரங்களைத் தொட்டவர்கள்

- **Dr. K.** அம்பலவாணன், **RHMP,**
கோயம்புத்தூர்.

மருத்துவம், ஆன்மீகம் என்ற இருவேறு துறைகளில் அதனதன் உச்சத்தைத் தொட்ட இரு மாபெரும் மகான்களின் சிந்தனைகள் எவ்வாறு மானுடம் உய்ய வழிகாட்டி வருகிறது என்பதை உணர்ந்து போற்றத்தான். இந்த இரு பெரும் சமூகச் சிந்தனையாளர்கள் அவரவர் துறையின் சிகரங்களைத் தொட்டவர்கள் சிறு வயதில் வறுமையில் வாடியவர்கள். வாய்மையும், தேடலும் இவர்களோடு ஒட்டிப் பிறந்தவர்கள். இருவரின் சிந்தனைகளும் தெளிந்த நீரோடை போன்றது; சமுதாயம் சார்ந்தது.

ஆனிமேன் அவர்கள் மருத்துவத்தில் M.D. பட்டமும், நீண்ட பழுத்த அனுபவமும், மருத்துவ ஆய்வுகள் குறித்த ஆழ்ந்த அறிவும் ஒருங்கே சேர்ந்த சமுதாயச் சிந்தனையாளர்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஆன்மீகத்தில் பட்டறிவின் உச்சம், நீண்ட பழுத்த உலக ஆன்மீக அறிவு, தன்னை அறிதலில் கடலின் ஆழம், அறிவே இறைநிலை என்ற தெளிவு ஆகிய குணங்கள் நிறைந்த சமுதாயச் சிந்தனையாளர்.

ஹோமியோபதி மருத்துவம் ஒரு குணமாக்கும் கலை; It is an art of healing. இதற்குத் தெளிவான நெறிகள் (Rules) உண்டு. உடலின் உயிர்ப்பு ஆற்றல் பாதிப்படையும் சமயமே நாம் நோயைப் பெறுகிறோம் என்கிறது ஹோமியோபதி.

வேதாத்திரியம் என்பது வாழ்வியல் கலை; It is Human art of Living. இது வாழ்வியல் நெறிகள் அடங்கியது. நாம் செய்யும் தவத்தின் மூலம் மன ஆற்றலைப் பெருக்கி, கருமையப் பதிவுகளைத் தூய்மைப் படுத்தி, மன உடல் நலம் பெற முடியும் என வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

ஆனிமேன் உலகிற்கு அளித்த மருத்துவக் கொடை- ஹோமியோபதி.

வேதாத்திரி மகரிஷி உலகிற்கு அளித்த கொடை - வேதாத்திரியம்.

✣ ✣ ✣

**கலைஞர்கள்**

## 34. தட்சிணாமூர்த்தி

- க. மோகன்ராஜ் ஸ்தபதி,
சுவாமிமலை.

இன்று மகரிஷிகளும், ஞானிகளும் யோகம், முக்தி, ஆசனம் முதலானவைகளைப் பலருக்குப் போதித்து வருகின்றனர்.

உலகின் முதல் போதனாசிரியர் குரு தட்சிணாமூர்த்தி. லௌகீக வாழ்க்கையிலிருந்து விடுபட பிரம்ம தேவர்களின் குமாரர்கள் ஈஸ்வரனை வேண்ட மௌன மொழியால் ஈஸ்வரன் அவர்களுக்குப் போதிக்கிறார்.

ஆழியாறு கண்ட மகரிஷியும் அந்த வகையில் ஒரு குரு தட்சிணாமூர்த்தியே. மனமது செம்மையானால் மந்திரமும் ஜபிக்க வேண்டாம். இதுவே பக்தியின் இலக்கணம். முக்திக்கு எல்லை.

''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''

என்ற நோக்கில் இந்த ஆழ்ந்த உண்மையை உலக மக்களுக்கு சுவாமி சச்சிதானந்தா அவர்கள் அமெரிக்கா வெர்ஜினியாவில் தாமரைக் கோயில் கட்டி அங்கே ஜோதி வழிபாட்டை மையமாக வைத்து அந்த ஒளி இதயத் தாமரையாகிய கமல பீடத்திலிருந்து புறப்பட்டு உச்சிக்குச் சென்று பின் 12 இதழ்களாக அமைந்த 12 மதக் கடவுள்களைச் சென்றடையும் அமைப்பில் கட்டியுள்ள இக்கோயில் சர்வ சமயக் கோவில். இங்கே பதஞ்சலியோகம், தியானம் கற்பிக்கப்பட்டு அமெரிக்க வாழ் ஆடம்பர மக்களைப் பண்பட்ட ஞானமக்களாக மாற்றிய பெருமை சச்சிதானந்த சுவாமிகளைச் சேரும்.

அமெரிக்க தாமரைக் கோயிலைப் போல ஆழியாற்றில் ஓர் அறிவுத்திருக்கோயில். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் கனவு நனவான கோயில். இதுவே அருட் பேராற்றல் உருவான இடம்.

இக்கோயிலில் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி ஒளிமங்கிய மக்களின் திரியாகிய சக்தியைத் தூண்டி விட்டு அவர்களைப் பண்பட்ட மனிதர்களாகத் தம் நூல்களால் சேவை செய்கிறார்.

✣ ✣ ✣

**பேராசிரியர்கள்**

## 35. விடிவெள்ளி

- முனைவர். இரா. ரெங்கம்மாள்,
பழனி.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் இந்த உலக உயிர்களை உய்விக்க வந்த ஒரு விடிவெள்ளி. இந்த அவனியில் ஆழியாற்றைத் தேர்ந்து கொண்டு, அங்கு வரும் அத்தனை பக்தர்களுக்கும் அருளும் ஆசியும் வழங்கி வருபவர். அருள்தந்தை மகரிஷி இந்த நூற்றாண்டின் மகத்தான ஆன்மீக அறிவியல் அறிஞர். **'அறிவார்ந்த பெருங்கருணையும் தவஞ்சார்ந்த தூய நல்லமைதியும் ஒன்றாகக் கலந்து இயங்கும் பெருங்கடல்** என்பது மிகவும் பொருந்தும்.

மனிதனானவன் இயற்கையின் ஒரு பகுதி. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு நிமிடமும் இயற்கையானது மனிதனுக்கு அறிவின் பெருக்கத்திற்குரிய பாடங்களைக் கற்றுத் தந்து கொண்டே இருக்கின்றது. இயற்கையை மதிக்கின்றவனுக்கு வாழ்வில் இனிமை, நிறைவு, மகிழ்ச்சி இவை அனைத்தும் கிடைக்கும் என்று மகரிஷி வழி காட்டியுள்ளார்.

வேதாத்திரி மகரிஷியின் வாழ்வியல் நெறிகளைக் கடைப் பிடிக்கும் மனிதன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலைக்கு உயர்த்தப்படுவான் என்பது உறுதி. வளர்க வையகம்! வாழ்க வளமுடன்!

❖ ❖ ❖

## 36. நடமாடும் மகான்

- முனைவர் வெ.அ. நாகரத்தினம்,
காங்கேயம்.

பிரபஞ்சமாக விளங்கும் இயற்கை பற்றிய உண்மைகளை, எளிய நடையில் தெளிவாக உணர்த்தியிருக்கிறார் 21ம் நூற்றாண்டில் **நடமாடும் மகானாக விளங்கும் அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி** அவர்கள். தான் அறிந்த, கண்ட உண்மைகளை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்பதில் அவருடைய ஆர்வம் ஈடு இணையற்றது.

ஆயிரக்கணக்கான கவிதைகளும், நூல்களும், வாழ்க்கை விளக்கமும் எழுதி மக்களுக்காகத் தொண்டாற்றி வருபவர். அவர் இயற்றிய எந்த நூலிலும் முக்கிய சாரமாக விளங்குவது, பிரம்மத்தைப் பற்றிய உண்மைகளும், விளக்கங்களுமே ஆகும். அதற்கு அவருடைய 'பிரம்ம ஞானம்' சிறந்த எடுத்துக்காட்டு.

''உலக நாடுகளின் எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்த ஐ.நா. சபை ஏற்றுக் கொள்ளும் வகையில் உலகில் போரை நிரந்தரமாக நிறுத்த வேறு வழியே இல்லை'' என்கிறார் மகரிஷி.

இப்படி மனித மனம் பரந்து விரிந்து செல்ல வேண்டும் என்பதற்காக அவர் எழுப்பிய சிந்தனைகளே 'பிரம்ம ஞானமாக' உள்ளது.

யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள், யோகியா? ஞானியா? சித்தரா? அல்லது சிந்தனையாளரா? இப்படி எல்லாமாக இருந்தும் எதனையும் ஏற்றுக் கொள்ளும் அவர் பிரம்ம ஞானத்தின் மூலமாக உயர்ந்து விளங்குகிறார் என்பது தெளிவு.

✣ ✣ ✣

# 37. இலக்கியவாதி மகரிஷி

- முனைவர். இரா. சந்திரசேகரன்,
திருச்செங்கோடு.

கவிதையையே கருவியாகக் கொண்டு, மனிதனை மகிழ்விக்க ஒருவன் பாடினான்; மனிதன் சிந்தனை செயலிழக்குமளவிற்கு ஒருவன் பாடினான்; மனிதனைப் புனிதனாக்க ஒருவன் பாடினான்; மனிதனை மனிதனாக்க மற்றொருவன் பாடினான்; மனிதனை அடிமையாக்கவும், அவனையே தெய்வமாகப் போற்றியும் பலர் பாடினார்கள்.

எனினும் மனிதனை மனிதன் மதிக்க, நேசிக்கப் பாடியவர்கள் சிலரே; அவர்களுள் ஒருவரே அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி ஆவார். இவருடைய பாடல்கள் மனிதநேயத்தையும், ஆளுமை வளத்தையும், சமாதானத்தையும் முதன்மைப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

'நான் மனிதனைப் பாடுகிறேன்' என்றார் அமெரிக்காவின் **வால்ட் விட்டமன்.** 'மனிதன் சம்பந்தமான எதுவுமே இலக்கியத்திற்குப்

புறம்பானதன்று' என்றார் இரஷ்ய இலக்கிய மேதை மாக்சிம்கார்க்கி. **அலெக்சாண்டர், போப், விட்டமன், கார்க்கி** போன்றவர்களெல்லாம் மனித நேயத்தைப் பாடியவர்கள் ஆவார்கள். ஆனால்,

மனித நேயத்தோடு, உலக சமாதானம், ஒற்றுமை போன்ற உயர்ந்த நெறியினைச் சமரச நோக்கோடு பாடியவர்கள் **மகரிஷியைத் தவிரவேறு யாரும் யாருமில்லை.**

டெல்லி, கீட்ஸ், வேர்ட்ஸ்வொர்த்த, பைரன், தாகூர் போன்றவர் களெல்லாம் கவிஞர்களாக மட்டுமே வாழ்ந்தனர். ஆனால் மகரிஷியார் உலக சமுதாயத்தின் பொதுநல சேவகராக, மனித நேயம் மிக்கவராக, மனித மனத்தை அறவழியில் கொண்டு செல்பவராக, மனித வளத்தினை வெளிக் கொண்டும் மேன்மையாளராகத் திகழும் இவர் ஒரு நல்ல கவிஞராகவும் விளங்குகிறார்.

மகரிஷியின் கவிதைகள் சொல்லழகும், பொருளழகும், தொடையழகும், அணியழகும், நடையழகும் கொண்டு விளங்குவன. இக் கவிதைகளைப் படிப்பவர் தம் உள்ளத்தை ஈர்ப்பன. நல்லறிவைப் புகட்டுவன. உள்ளத்தை ஈர்த்துச் சிந்தனையை மகிழ்விப்பன.

இவருடைய கவிதைகள் கருத்தாழம் கொண்டவை. தேர்ந் தெடுத்த கருத்தை அசைபோட்டு, அசைபோட்டு, எளிமையான மொழி யமைப்பில் தனது கருத்தைப் புகுத்தி, கவிதையாக்கி நயத்தோடு வெளிப்படுத்தும் திறன் இவருக்கு உள்ளதை அறிய முடிகிறது.

அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி தமது கவிதைகளில் அழகும், ஆற்றலும் வாய்ந்த சொற்களைக் கையாண்டும், பொருள் புலப்பாடு என்ற நோக்கிலும், படிப்பார்க்கு அலங்காரம் ஆகி இன்பம் பயக்கும் வகையில் அழகிய உவமை, உருவகங்களைக் கையாண்டும், சந்த நயங்களை மிகுதியாகப் பயன்படுத்தியும் கட்டுக் கோப்பாக இயற்றியுள்ளார். இதனால் தமிழ்க் கவிதை வரலாற்றில் மட்டு மல்லாது, தமிழ் இலக்கிய வரலாற்றிலும் இவரது கவிதைகள் இடம்பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

✣ ✣ ✣

# 38. சொல்லின் செல்வர்

- முனைவர். வீ. சண்முகம்,
நாமக்கல்.

கவிஞர் மகரிஷியின் வாழ்நிலை அனுபவங்களும் சிந்தனை ஆற்றலும் அருட்கவி வாழ்நாள் கடமை எனக் கொண்டு அருட் பேராற்றலின் உயிர்ப்பைக் கவிதைகளில் ஊற்றெடுக்கச் செய்துள்ளார். சர்வதேச சமூக - அரசியல் - பொருளியல் - பண்பாட்டு நிகழ்வுகளை உள்வாங்கிக் கொண்டு அவரின் கவிதைகள் ஆன்மீகத் தளத்தில் வேதாத்திரியக் கொள்கைகளாய்க் கோட்பாடாய் உருவாக்கியுள்ளன. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கான ஒளிப்பாய்ச்சலை - கவிஞர் மகரிஷியின் கவிதைகள் வழங்குகின்றன. இலக்கியத் தளத்தில் நுண்பார்வை மிக்க சொற்கோலங்கள் படைக்கும் வித்தகக் கவிஞராய் மகரிஷி விளங்குகிறார்.

படைப்பவரையும், படிப்பவரையும் உணர்வால் இணைக்கும் இணைப்புத் தளங்களாய் மகரிஷியின் கவிதைச் சொற்கள் விளங்கு கின்றன. உணர்வுகளை இணைப்பதற்குரிய இணைப்பாற்றல் **(Communication Power)** இச்சொற்களுக்கு வாய்த்து விடுகின்றன. கவிஞரின் மன உணர்வையும் **(Feelings),** மனநிலையையும் **(Mood),** மனப் பான்மையையும் **(Attitudes),** சொற்கள் அடையாளம் காட்டி விடுகின்றன. 'கவிதைச்சொல்' என்பது வேறு 'கவிதையில் சொல்' என்பது வேறு. ஒரு கவிதையில் 'சொல்' எவ்விதம் இடம் பெற வேண்டும் என்பதற்குக் கவிஞர் மகரிஷி தமது கவிதைகளில் நான்கு விதிகளை அமைத்துக் காட்டியுள்ளார். *(1)* சொல்லை அளவோடு அமைத்தல் **(Quality),** *(2)* சொல்லைத் தெளிவோடு அமைத்தல் **(Quality),** *(3)* சொல்லைத் தொடர்போடு அமைத்தல் **(Relational),** *(4)* சொல்லை முறையோடு அமைத்தல் **(Manner).**

ஒரு மொழியின் ஒலியால் தோன்றுவது சொல். சொல்லால் தோன்றுவது தொடர். தொடரால் விளைவது பொருள். பொருளால் தோன்றுவது உணர்வு. உணர்வால் எழுவது இயங்கு தளம். இயங்குதள விளைவுகளே மனிதத்தைத் தீர்மானிக்கும்.

கவிஞர் மகரிஷியின் சொல்லாட்சிகள் தொடை விகற்பங்களில், உவமை உருவகங்களில், ஓசை நயங்களில், வினா-விடைகளில், பொருள் வரையறைகளில், புதுச் சொல்லாக்கங்களில் மேற்கண்ட கவிதைக் கோட்பாட்டைச் சாதித்துள்ளன.

✣ ✣ ✣

## 39. தமிழ்ச் சித்தர்

- முனைவர். இ.கி. இராமசாமி,
மதுரை.

அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி ஒரு தமிழ்ச்சித்தர். **அறிவியலும், ஆன்மீகமும் அவருடைய இரு விழிகள்.** அருட்பிரகாச வள்ளலார், அறிவே தெய்வமென்ற பாரதியார் போன்றோர் சிந்தனை களை உள்வாங்கிப் புதிய தடம் பதித்து வரும் மனித நேயப் பண்பாளரான அருள்தந்தை. மொழி, இனம், நாடு ஆகியவற்றைக் கடந்து நின்று உலகில் **அமைதியை நாடுகின்ற அருள்வள்ளல்.** தமிழ்ச் சித்தமரபில் ஊன்றித் திளைத்துப் பரம்பொருள் நிலையைப் பாருக்கு உணர்த்த முனைபவர். அறிவியல் அழுத்தத்துடன் **(with Scientific Temper)** முற்றிலும் புதிய ஆன்மீகத்தை மன்பதையில் விளைவிக்கின்றார்.

திருமூலரும், **சிவவாக்கியரும்** அவருடைய **சிந்தையில் நடம் புரிகின்றனா்;** உரைவீச்சில் வெளிப்படுகின்றனர். உலகம் அருள்தந்தையின் **'அன்பொளி'**யில் நனைகின்றது. மாந்தன் பிறர் வளம் பறித்து உண்பதை உளவியல் நெறியில் மாற்றிட நோன்பிருக்கின்றார்; தவம் செய்கின்றார். பேராவியற்கைக் கோட்பாட்டை இவர் புலப்படுத்து கின்ற பாங்கு புதுமை சான்றது. ஆழமான எண்ண அதிர்வுகளை உள்ளடக்கி ஒலிக் கின்ற இவரது வெண்கலக் குரலில் என்றும் பிசிர் அடித்ததில்லை. அக்குரல் மக்கள் கடல்மீது அறிவுத் தேக்கத்தைத் திறந்து விட்டு அன்பின் ஈரத்தைப் பாய்ச்சி நெஞ்சை நெகிழ வைக்கும் ஆற்றல் வாய்ந்தது.

✣ ✣ ✣

## 40. தொண்டாற்றி இன்பமுறும் மகரிஷி

- க. இராமலிங்கம்,
திருச்செங்கோடு.

தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெரு நோக்கோடு வாழ்ந்து மக்களுக்குத் தொண்டாற்றி வருபவர் வேதாத்திரி

மகரிஷி. அவருடைய ஞானக் களஞ்சியப் பாடல்கள் பல்வேறு சமூகப் பொருளாதார மாற்றங்களை உள்ளடக்கிய வித்தாக, சிறந்த கருவூலமாகத் திகழ்கிறது. மேலும் மனித வாழ்க்கைக்குத் தேவையான எல்லாச் செய்திகளும் அடங்கிய முழுமை பெற்ற நூலாகத் திகழ்கிறது.

ஒன்றை எதிர்பார்த்துச் செய்வது உதவி. எதிர்பார்க்காமல் செய்வதே தொண்டு நெறி. தொண்டு என்பது தன்னலமற்ற சேவை.

தொண்டு செய்வதிலேயே நாட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகள், களங்கங்கள் மறையும் என்பதை "இக வாழ்வில் பழக்கத்தால் ஏற்றுள்ள களங்கங்கள் இனிதாய் மாற தொண்டே ஏற்ற வழி, அதைச் செய்வோம் என்கிறார்.

இவ்வாறு வேதாத்திரி மகரிஷியின் ஞானக்களஞ்சியப் பாடல்கள் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளையும் முறைகளையும் எளிமையாக எடுத்துக் கூறுகிறது.

உயர்ந்த தத்துவ ஞானத்தை பாமரரும், அறியும் வண்ணம் பாடியிருப்பது சிறந்த ஒன்றாகும். இவருடைய பாடல்கள் உணர்த்தும் அன்பு, அறம், நட்பு, ஒழுக்கம் போன்றவைகள் மனிதனுக்கு இம்மை மறுமைப் பயனைத் தரும் என்பது உறுதி.

✣ ✣ ✣

# 41. ஓங்கி ஒலிக்கும் குரல்

- முனைவர். க. தமிழ்ச்செல்வன்,
வேலூர்.

அருள்தந்தை அவர்களுடைய தத்துவம், அனுபவத்தை அடிப் படையாகக் கொண்டது. உள்ளுணர்வின் வழி வந்தது. ஆன்மீக உண்மைகளை வெளிப்படுத்துவது. விஞ்ஞான உண்மைகளுக்கு முரண்படாதது.

அருள்தந்தை அவர்கள் மனித வாழ்க்கைத் துறையை எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்திருக்கிறார்கள். ஆன்மீகத் துறையில் அருள் தந்தை அவர்களுடைய வான்காந்தம் மற்றும் ஜீவகாந்தம் பற்றிய தத்துவம் ஒரு மிகச்சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, தெய்வம் என்பதற்கும், உயிர் என்பதற்கும், அறிவு என்பதற்கும் உண்மை விளக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

ஒரு புறம் இந்தத் தத்துவம், பழங்காலத்தில் சொல்லப்பட்ட உயர்ந்த கருத்துக்களுக்கு எளிய விளக்கங்களைக் கொடுத்து, விஞ்ஞான மேற்கோள்மூலமாக எல்லோரும் உணரும்படி செய்கிறது. இன்னொரு புறம் நவீன பௌதீகம், இரசாயனம், மரபியல், உளவியல், மருத்துவம், சமூக இயல், அரசியல், பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் நடைமுறைப்படுத்த முடியும் என்பதை வலியுறுத்துகிறார்கள்.

இந்தத் தத்துவத்தை விளங்கிக் கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடித்தால் ஒவ்வொருவரும், தங்களைத் தாங்களே குழப்பிக் கொண்டிருக்கிற கற்பனை மயக்கங்களிலிருந்து விடுபட்டு உண்மை யான ஆன்மீக உணர்வோடு வாழ முடியும்.

வாழ்க்கை நெறி போதிக்கும் வள்ளுவத்துடன் மகரிஷியின் கருத்துக்கள் ஒத்துப் போவதால் அவருடைய கொள்கையும், கோட் பாடும் குறள் போல் என்றென்றும் ஒலிக்கும் என்பதில் ஐயமில்லை.

❖ ❖ ❖

## 42. அறிவியல் ஆன்மீக சித்தர்

- முனைவர் கோ. எழில் ஆதிரை,
நாகப்பட்டினம்.

தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து சான்றோர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களை மேன்மேலும் வளப்படுத்த, வாழ்வியல் நெறிகளை அவ்வப்பொழுது எழுந்த இலக்கியங்கள் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. அவ்வகையில் அருட்தந்தை வேதாத்திரி அவர்கள், வாழ்வியல் நெறிகளை மிகவும் எளிமையான தமிழில் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் தந்து மக்களுக்கு வழிகாட்டுகிறார்.

ஒவ்வொரு செயலுக்கும் விளைவுண்டு என்பது நியூட்டனின் கூற்று. **(For every action there is an equl and oppositie reaction) "you reap what you sow"** என்கிறது பைபிள்.

**"தினை விதைத்தவன் தினை அறுப்பான்**
**வினை விதைத்தவன் வினை அறுப்பான்"**

என்று வினைகளின் பயனைச் சொல்கிறது தமிழ்ப் பழமொழி.

''கர்மாவைச் செய்வதற்குத்தான் உனக்கு அதிகாரம் உண்டு; அதன் பலன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்ல உனக்கு அதிகாரமில்லை. பலனைத் தீர்மானிப்பவன் நான்'' என்று கிருஷ்ணர் **பகவத்கீதையில்** கூறுகிறார்.

''கியாம நாளில் துல்லியமான தராசுகளையே நாம் வைப்போம்; கடுகளவு நன்மையிருப்பினும், தீமை இருப்பினும் கணக்கில் எடுத்துக் கொள்வோம்'' என்று **திருக்குர்ஆன்** சொல்கிறது.

நற்காட்சி, நற்சிந்தனை, நற்சொல், நற்செயல் என்ற இந்த நான்கும் ஒருங்கே அமைந்தவரது வாழ்வு நல்வாழ்க்கையாக அமையும் என்று **புத்தமதம்** உணர்த்துகிறது.

அவரவர்கள் செய்த வினைகளின் தன்மையின் அடிப்படையில் அவர்களுக்கு நல்ல பயன்களும், தீய பயன்களும் அவர்களை வந்தடையும் என்று மகரிஷி அவர்களின் கருத்தைப் பல இலக்கியச் சான்றுகளில் காண முடிகிறது.

ஆனால், நல்வினை, தீவினைகள் இப்பிறவியில் மட்டுமல்லாது மறுபிறவியிலும் அதாவது உடலை விட்டுப் பிரிந்த உயிர் வேறு உடம்பு எடுத்து வினைகளுக்குத் தக்கவாறு பல இடங்களில், வெவ்வேறு குடும்பங்களில் மறுபிறவி எடுக்கும் என்பதைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகின்றது.

இந்நிலையில், அருட்தந்தையின் மரபு வழித் தொடர்ச்சியாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அக்குடும்பத்தின் மூதாதையர் களின் நல்வினை, தீவினைச் செயல்பாடுகள் அக்குடும்பத்தின் வாரிசுகளைச் சென்று தொடர்சங்கிலி போல் அமையும் என்பது ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கருத்தாகும்.

✣ ✣ ✣

## 43. அருட் பேராசான்

- முனைவர். அமிர்தசோதி சந்திரசேகரன்,
கோயம்புத்தூர்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த **அருட்பேராசான்**. அறிவே தெய்வம் என்று தெளிந்த நல்ல சிந்தனை

களால் வழிபடும் அருட்தந்தை அவர்கள் தம் வாழ்க்கையையே ஒரு பாடமாக எளியோர்க்கும் தெளிவாக்கிப் பல வாழ்வியல் உண்மை களைத் தத்துவங்களாக விளக்கியுள்ளார்.

மக்கள் தம் வாழ்வில் கடைப்பிடிக்க, எல்லோரும் இயற்கை வளங்களைச் சமமாய்ப் பகிர்ந்து ஒற்றுமையாய் வாழப் பல எளிய வழிகளைக் கூறியுள்ளார். ஐந்தொழுக்கப் பண்பாடு என அருட்தந்தை வலியுறுத்தும் கொள்கைகள் எல்லோராலும் ஏற்கத் தக்கன. உலக ஒற்றுமையும், எல்லா நாட்டு மக்களின் வளமான வாழ்வுமே மிக விரும்பும் மகரிஷி உடல் நலனுக்கு, மன பலத்திற்கு, வளத்திற்கு என்று பல அறிவுரைகள் அளித்துள்ளார். பல்கலைக் கழகப் பட்டங்கள் பல பெற்ற அறிஞர்களும் ஞான குருவாய் மகரிஷி அவர்களை ஏற்கின்றனர். மூடப்பழக்கங்கள் தவிர்த்து, அறிவுப்பூர்வமாய்ச் சிந்தித்து, எந்தக் காலத்திற்கு எது சரியோ அதையே ஏற்று, முன்னோர் சொன்ன கருத்துக் களில் ஒவ்வாதவற்றைத் தவிர்த்து, எந்த உயிர்க்கும் உடல், மன வருத்தம் தராதவாறு நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் பல நல்ல வழிகளைக் காட்டும் அருட்தந்தையின் கல்விக் கொள்கை சிறப்பானதாகும்.

பல கல்வியாளர்கள் உலகமெங்கும் கல்வி தொடர்பான பல தத்துவங்களை உணர்த்தியுள்ளனர். ''இயற்கை மனிதனுக்கு சிறந்த ஆசான்'' என்பது கல்வியாளர் ரூசோ அவர்களின் கருத்து. நம் அருட் தந்தையவர்கள் ''உலகமே ஒரு பழைய பள்ளிக்கூடம், ஒவ்வொன்றும் போதிக்கும்'' என்கின்றார். கண்டும், கேட்டும், துய்த்தும் உணரும் அறிவே நிலையானது; ''அனுபவங்களே மிகச் சிறந்த அறிவைத் தருகின்றன'' என்பது **ஜான் டூயே என்ற கல்வியாளரின்** கருத்து. நம் அருட்தந்தையும், இக்கருத்தையே வலியுறுத்துகின்றார். அறிஞர்கள் தம் வாழ்வில் சிந்தித்து ஆராய்ந்த முக்கிய நிகழ்ச்சிகளின் விளக்கங்கள் நம் சிந்தனைச் செயல்திறனை ஒழுங்கு செய்யும் என்கின்றார் மகரிஷி.

நான் குருவாய் வாழ்ந்து பல பேராசிரியர்கள் மூலம் எல்லா இடங்களிலும் சங்கங்கள் அமைத்து உடல் நலனுக்கு யோகப் பயிற்சியும், மனநலத்துக்கு சிந்தனைப் பயிற்சியும் அளித்து வரும் மகரிஷியவர்களின் கருத்துக்கள் எந்த மதத்தவரும், எந்த நாட்டவரும் எல்லாக் காலத்திலும் ஏற்றுப் பயன் பெறத்தக்கது.

✣ ✣ ✣

# 44. அன்பின் சிகரம்

- க. இராமலிங்கம்,

காரைக்கால்.

அருட்பிரகாச வள்ளலாருக்குப் பிறகு வாழ்ந்து கொண்டிருக்கும் அருளாளர்களின் குறிப்பிடத்தக்கவர் வேதாத்திரி மகரிஷி. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெருநோக்கோடு மக்களுக்குத் தொண்டாற்றி வருபவர்.

இவருடைய ஞானக் களஞ்சியப் பாடல்கள் பல்வேறு சமூகப் பொருளாதார மாற்றங்களை உள்ளடக்கிய **வித்தாக, சிறந்த கருவூலமாகத்** திகழ்கிறது. மனித வாழ்விற்குத் தேவையான எல்லா நெறிகளும் அடங்கிய முழுமை பெற்ற நூல் இது. அப்பாடல்கள் வழி மனிதன் பெற வேண்டிய சமுதாய வாழ்வியல் நெறிகளைக் கூறுகின்றன.

உயிர்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது அன்பு. 'அன்பின் வழியது உயிர்நிலை' என்கிறார் வள்ளுவர். 'அன்பே சிவம்' என்கிறார் **திருமூலர்** ''துன்பம் போக்கும் தூய நெறியே அன்பாம் அறமாம் அறிவின் உயர்வாம்'' என்கிறார் மகரிஷி. இன்ப துன்பங்களுக்கான காரணங்களை அறிவு கொண்டு ஆராய்ந்து பார்க்குமிடத்து அன்பெனும் ஊற்று அறிவில் சுரந்திடும். எல்லா உயிரும் ஒன்றே என்ற நோக்கோடு ஆற்றுகின்ற கடமையே அன்பின் செயலாகும்.

இவருடைய பாடல்கள் மாந்தர்களைச் சிற்றின்ப நிலையிலிருந்து பேரின்ப நிலைக்கு அதாவது மனித நிலையிலிருந்து இறை நிலைக்கு அழைத்துச் சென்று பிறவாப் பேரின்பத்தைத் தரும் என்பது உறுதி.

✣ ✣ ✣

## கவிஞர்கள்

# 45. யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி

- கவிக்கோ அப்துல் ரகுமான்.

உலகம் நோயாளியாக இருக்கிறது. இதைக் குணப்படுத்தா விட்டால் நாம் இதில் வாழ முடியாது. நோயைக் குணப்படுத்த வேண்டு மென்றால் ''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'' வேண்டும்.

காலந்தோறும் தோன்றிய ஞானிகள், சமயச் சான்றோர்கள், தத்துவ அறிஞர்கள் பல்வேறு மருத்துவத்தைப் பரிந்துரைக்கிறார்கள்.

நம் காலத்தில் உயிர் வாழும் மதிப்பிற்குரிய யோகிராஜ் மகரிஷி அவர்கள் இந்தப் பிரச்சனை பற்றிச் சிந்தித்து "உலக சமாதானம்" என்ற பெயரில் அரியதொரு நூலை அளித்திருக்கிறார். இதற்காக மனித குலம் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

**"கதவிருக்கும் தாழ்ப்பாளும் இருக்கும் அன்று**
**கள்ளனில்லை, பூட்டில்லை, சாவியில்லை**
**மதமில்லை, ஜாதியில்லை, இனமுமில்லை**
**மாற்றானோ மன்னவனோ இல்லைஇல்லை"**

என்று ஓர் அழகிய குறிக்கோள் உலகை மகரிஷி அவர்கள் கனவு காண்கிறார். இது பலிக்குமா? பலித்தாக வேண்டும். இல்லையேல் உலகமே கனவாகி விடும்.

இந்தக் கனவு நனவாக ஒரு செயல் திட்டத்தையும் மகரிஷி அவர்கள் பரிந்துரைக்கிறார்கள். ஆரம்பத் திட்டம் ஐம்பது ஆண்டு களிலும் இறுதித்திட்டம் அடுத்த நூறு ஆண்டுகளிலும் படிப்படியாகச் செயல்படுத்த வேண்டும் என்பது அவர் கருத்து. இதற்காக அங்கங்கே உலக சமாதான சங்கங்கள் தோன்றிப் பணியாற்ற வேண்டும் என்கிறார்.

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் **தீர்க்கதரிசி ஏசாயா** அமையப்போகும் ஓர் இலட்சிய அரசைப் பற்றி முன்னுணர்ந்து வருணித்திருக்கிறார்.

கிரேக்க அறிஞர் **பிளேட்டோ** தம்முடைய **குடியரசு** என்ற நூலில் ஓர் இலட்சியஅரசு பற்றிய கோட்பாட்டை முதன் முதலாக விவரித்துள்ளார்.

அவருக்குப் பிறகு **அரிஸ்டாட்டில், இமானுவேல் கான்ட், ஹெகல், க்ரீன், பொஸாங்கெட், ப்ராட்லே** ஆகியோர் இலட்சிய அரசு பற்றித் தத்தம் கோட்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவர்கள் ஆன்மீகத் தத்துவ அடிப்படையில் தங்களுடைய கோட்பாடு (Metaphysical Theory) என்றும், தத்துவக் கோட்பாடு (Philosophical Theory) என்றும் அழைக்கப்படுகிறது. மகரிஷி அவர் களுடைய உலக சமாதானம் இந்த வகையில் அமைந்து சிந்திக்கத் தூண்டுகிறது.

❖ ❖ ❖

## 46. யோகி ஆசான்

- கவிஞர் முருகொளி

தண்டமிழும் தகைசான்ற உலகி லுள்ள
தக்கோரும் மிக்கோரும் உடன்பி றப்பாய்
அண்டமதில் வாழ்வாங்கு வாழ்வ தற்கே
அறைகூவி அனைத்துயிரும் தன்னு யிர்போல்
கொண்டுலகில் வாழவழி வகுத்து ரைத்துக்
குவலயத்தில் ஒருலக ஆட்சி காண
எண்டிசையோ ரும்வருக வெனும்வே தாத்திரி
இணையடிகள் பணிந்துபுகழ் பாட வாரீர்!

அருள்வள்ளல் வள்ளலாரின் அருளைப் பெற்று
அவர்விட்ட குறைமுடிக்க வந்த யோகி
மருள்நீக்கி அப்பர்போல் சம்பந் தர்போல்
மாத்தமிழின் சுந்தரமும் தாயு மானார்
தெருள்ஞானத் தமிழ்மறையின் வள்ளு வர்போல்
தேர்ந்தபர குண்டலியை எளிமை யாக்கும்
அருள்வள்ளல் நிறைமொழியாம் யோகி ஆசான்
அருட்தந்தை வேதாத்திரி வாழ்க மாதோ!

✢ ✢ ✢

## 47. எட்டாவது அதிசியம்

- அ/நி. ஸ்ரீ ஜெயப்பிரகாஷ்

பெற்றோருக்கு எட்டாவது பிள்ளையாய்
ஆங்கில மாதம் எட்டில் உதித்தவர் வேதாத்திரி மகிரிஷி
சிந்தனை உயர, இயற்றிய அருட்கவிகளின் வரிகள் எட்டு
சீவ இனங்களின் சிறப்பு இயக்கங்களாகக் கண்ட தத்துவங்கள் எட்டு
ஓயாது ஓதி உணர்த்திய தாரக மந்திரத்தின் எழுத்துக்கள் எட்டு
எட்டாத தத்துவங்களை எல்லோருக்கும் எளிதில்
எட்டும்படி சொன்ன மகரிஷி எங்களது எட்டாவது அதிசியம்.

✢ ✢ ✢

## 48. முத்தமிழ் வித்தகர்

- அரிமாப் புலவர்

மலர்தலை உலகத்து மனவிரு ளகல
உளநிலை ஓம்பி உயர்நிலை பெற்றிட
பலகலை யதனில் பாவியம் தீட்டும்
நலந்திகழ் நற்பணி நாட்டினர் முன்னோர்!

பித்து மனத்தரும் பேதமை நீங்கிட
சத்து நூல்தரும் முத்தமிழ் வித்தகர்
முருகொளிப் பாவலர் முந்தை மரபினர்
கருங்கல் மனத்தரும் கசிந்துருக ஓதுவர்!

வள்ளுவர் தாயு மானார் வள்ளலார்
மூலனாரும் வழிவழி யோக சித்தர்
வான்மறை அருளின் வேதாத்திரி முனிவர்
பிள்ளைத் தமிழைப் பாடினார் பெட்புற,

இலக்கிய நயமும் இனியபல் கருத்தும்
தத்துவச் செறிவும் தாங்கிய பாவால்
மகரிசி வாழ்வு மாண்பின் ஊற்றாய்
திகழப் படைத்தனர் தீந்தமிழ்ச் சாறே!

ஏற்றுப் போற்றி இயங்குநல் லுணர்வால்
கருத்துட னாற்றி கரும வீரராய்
தவத்தின் சீலராய் தத்துவ மேலராய்
ஓங்குவம் நாளும் ஒண்புக ழுற்றே!
வாழ்த்துவம் போற்றி! வான்புகழ் பெறற்கே!

✣ ✣ ✣

## 49. மாமுனிவர் வேதாத்திரி

- கவிஞர். இராகவன் முத்து

உலகத்தில் மனித வாழ்வு எப்பொழுதும் வினாக்களும், சிக்கல்களும் நிறைந்ததே. வாழ்வுச் சிக்கல்களில் வழிகாட்டவும்,

மாந்தரினம் சீரிய அமைதி காணவும் பற்பல பெரியவர்கள் (மகான்) - அருளாளர்கள் காலங்கள் தோறும் தோன்றிக்கொண்டே உள்ளனர். அவர்கள் காலம், மதம், மொழி, நிறம், நாடு என்ற வேறுபாடுகள் பல வற்றுக்கு ஆட்பட்டாலும், உலக நலம் (Universal Welfare) என்ற பொது நோக்கில் ஒன்றுபட்டவர் ஆகின்றனர். சமயத் தலைவர்களும் இந்தப் பட்டியலில் வருவர்; சார்பு கடந்த, வேற்றுமை பாராட்டாத பொதுநலத் தொண்டர்களும் இவ்வரிசையில் இடம் பெறுவர்.

சைவ சமயப் பெரியார்கள், வைணவத் தொண்டர்கள், **புத்தர், மகாவீரர், ஏசுநாதர், நபிகள் நாயகம், இராமகிருஷ்ணர், வள்ளற்பெருமான், இராமலிங்கர்** முதலியவர்களும், **நிவேதிதா அம்மை, அன்னை தெரசா** போன்றோரும் இடம்பெறும் இப்பட்டியல் மிக நீளமானது. இவர்களில் ஒருவராக அருள்தந்தை என்றும், தத்துவஞானி என்றும், மாமுனிவர் என்றும் வழங்கப்பெறும் வேதாத்திரியாரும் எண்ணப் பெறுகிறார். அவர்தம் புதிய இயக்கக் கோட்பாடுகளை, பல நூல்களாகத் தந்திருக்கின்றார்.

தத்துவஞானியாக வேதாத்திரியார் ''உலகம் முழுமையும் ஒரே இணைப்பு அமைப்பாக (சமுதாயமாக) ஒன்றிணைய வேண்டும். உயிர்கள் யாவும் அமைதியும் மகிழ்வும் கொண்டு சீரிய நல வாழ்வு காணவேண்டும்'' என்ற நல்லெண்ணம் தன்னை மையப்படுத்தி, புதிய இயக்கம் ஒன்றை உருவாக்கியுள்ளார். அவ்வமைப்பு ஏறத்தாழ வள்ளற் பெருமான் காட்டும் சமரச சுத்த சன்மார்க்கம் போல்வது.

மனவளமும் உடல் வலிவும் கொள்வதற்கு வேண்டிய பயிற்சி - முயற்சிகள்தான் இங்கு கற்க வேண்டிய கலைகள். அவற்றை அறிவுறுத்தும் வண்ணம், அவர்கள் தம் பல்லாண்டு காலத் தேடுதல் களை, உள்முகச் சிந்தனையால் பெற்ற வினா விடைப் பயன்களை, பற்பல நூல்களாய் வழங்கியுள்ளார்.

✣ ✣ ✣

## 50. வேதாத்திரியத்தின் விஸ்வரூபம்

- கவிப்பேரரசு வைரமுத்து.

நான் கடவுள் நம்பிக்கை அற்றவன்தான்; ஆனால் மனித நம்பிக்கை உள்ளவன்; மனிதர்களை நேசிக்கிறவன். மண்ணில் ஒவ்வொரு துணுக்கும் எல்லா மனிதருக்கும் சொந்தமானது என்பதை நம்புகிறவன்.

சூரியனைப் போல, மழையைப் போல, நிலாவைப் போல, காற்றைப் போல எல்லாருக்கும் எல்லாமே கிடைக்க வேண்டும் என்ற வேட்கையோடு கவிதை எழுதிக் கொண்டிருக்கிறவன் நான்.

இந்த ஆனந்தத்தில் வேதாத்திரியத் தத்துவத்தின் விஸ்வரூபமாக வேதாத்திரி மகரிஷியின் உட்குரலை நான் கேட்கிறேன். அதனால் அவருடைய கருத்துக்கள் பலவற்றோடு எனக்கு நெருக்கம் இருப்பதாக நான் நிச்சயம் நம்புகிறேன்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் மழையைப் பொதுவுடைமை செய்தது போல, காற்றைப் பொதுவுடைமை செய்தது போல, தண்ணீரையும் பொதுவுடைமையாக்க வேண்டும். இந்தக் கருத்தை ஆழமாக அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார் வேதாத்திரி மகரிஷி. எனக்குப் பிடித்தமான கருத்தும் இதுதான்.

❖ ❖ ❖

## பிற மாநில / நாட்டு அறிஞர்கள்

# 51. கருணை வள்ளல்

- முனைவர். நாகப்பா நாச்சியப்பன்
புதுச்சேரி பல்கலைக் கழகம்.

தமிழ்நாடு தத்துவ தரிசனத்தின் விளைநிலம்; சங்க காலம் தொட்டு மெய்ப்பொருள் சிந்தனை தமிழர்களின் எண்ணக்கருவில் உருவாகி இலக்கிய வடிவம் பெற்று வந்துள்ளது. இதற்கு இணையாக சித்தத்தை வென்றவர்களின் சிந்தனை பெருவளர்ச்சி பெற்று வந்துள்ளது. கடவுளைக் கண்டு தெளிந்தவன் சித்தன், காண முயல்பவன் பக்தன் என்பது உலகோர் வாக்கு.

''செயல்வேகம் கொண்டவனே சித்தன், சிந்தனையில் புயல் வேகம் கொண்டெழுத்தில் பொறித்தான் பலகலைகள்'' என்பது **மகரிஷியின் மெய்ப்பொருள் நோக்கு.** இத்தகைய சித்தர்களின் வரிசையில் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களும் இணைகிறார்.

பிண்டத்தின் அண்டத்தைப் பெருவெளியாய் பார்த்தவர் திருமூலர். அவ்வரிசையில் மகரிஷி அவர்கள் இக்கால அறிவிற்கேற்ப அறிவியல் வளர்ச்சிக்கேற்ப அறிவாராய்ச்சி விளக்கம் செய்தவர்கள். அவ்வாராய்ச்சி நிலையில் மெய்ப்பொருள் காட்சியைக் காணவேண்டும் என்று ஞானத்தெளிவு பெறச் செய்கிறார் அருள் தந்தையவர்கள்.

மகரிஷி அவர்கள் சீவகாந்தத்தை விளக்குகையில் அந்தமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணுவின் ஞானம் இரண்டையும் அறிந்து உய்யும் வழியைக் கூறுகையில், அவரைச் சிறந்த விஞ்ஞான மெய்ஞ் ஞானியாக இனம் காணமுடிகிறது.

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே நெற்றி நடுவே, புருவ மத்தியில் வெளியைப் பார்த்தவர் திருமூலர். உடலையும், மனத்தையும் ஒருங்கு கூட்டும் கலையாக சீவகாந்தம் பற்றிக் கூறுகிறார் அருள் தந்தை.

புலன் வழிவாழ்வே புவனவாழ்வு என்ற மனித சமுதாயத்தை கட-உள் எனக்காட்சி அறிவை அறியும் அறிவைத் தந்தவர்கள் அருளாளர்கள். காண்பார்க்குக் காணலாம் தன்மையான பரம்பொருளை, காண்பார்க்குச் சிந்தனையுள்ளே தோன்றும் ஜோதியாய்க் கண்டவர்கள் **காரைக்கால் அம்மையார், திருமூலர், தாயுமானவர், வள்ளலார்** போன்ற அருளாளர்கள். அந்த அருளாளர் வாழையடி வாழையாம் மகரிஷி அவர்கள்.

✣ ✣ ✣

## 52. தரணி போற்றும் தனயன்

- முனைவர் J. மனுவேல்.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் இந்த உலக உயிர்களை உய்விக்க உதித்த ஒரு விடிவெள்ளி. இந்த அவனியில் ஆழியாற்றைத் தெரிந்து கொண்டு நாடி வந்த அனைவருக்கும் அருளாசி வழங்கிவரும் ஆற்றுப் படைநூல் அவர் எனக் குறிப்பிடலாம். இயற்கை எழில்மிகு மலைசூழ் வனத்தில் இறைபக்தியின் இளகிய மனதுடன், இலக்கு நோக்கி காலம் கழிக்கும் மகான் மகரிஷி மானுட குலமேயானாலும் மகத்துவங்களோ மகேஸ்வரனின் மட்டில்லா மகிமைகளே! ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ஈசனாய் வந்த அவரை ஈன்ற தாய்க்கு ஈரேழுலகமும் நன்றிக் கடனல்லவா பட்டிருக்கிறது.

மகான்களின் மௌனமே மகத்துவமாய் மலர்ந்து மணம் வீசுகின்றது. புத்தனின் மௌனத்தால் ஆசையை ஒழித்தல் என்ற வேதாந்தம் விண்ணை முட்டியது.

மகாவீரர் மௌனத்தால் உயிர்களுக்கெல்லாம் உயர்வு கொடுக்கப்பட்டது.

வியாசனின் மௌனம் கீதையாக பரிமளித்தது.

இயேசுவின் மௌனம் விவிலியமாக உருவெடுத்தது.

நபிகளின் மௌனம் திருக்குர்ரானாகத் திரண்டெழுந்தது.

தத்துவமேதை, தரணி போற்றும் தனயன், மகரிஷியின் மௌனத்தில் மலர்ந்த தாரக மந்திரமே வேதாத்திரியம்.

மனித குலத்துக்கு மகத்துவத்தை விளம்பி நின்றவைகளில் ஒன்றான வேதாத்திரியம் மொழிந்த காலம்தான் வித்தியாசமே தவிர மொழியப்பட்ட நோக்கம் ஒன்றே.

✣ ✣ ✣

## 53. ஞான வழிகாட்டி

- முனைவர். வெள்ளிங்கிரி,
உஸ்மானியர் பல்கலைக்கழகம்,
ஹைதராபாத்.

**Bill gates** - இன்றைய உலகின் முதல் பணக்காரர், அவர் 14.11.2002 அன்று ஹைதராபாத்தில் "நான் என் பணத்தை என் மூன்று பிள்ளை களுக்கும் கூட கொடுக்கமாட்டேன்; என் பணம் சமுதாயத்தினரிட மிருந்து வந்தது. அது சமுதாயத்திற்கே சென்று சேரவேண்டும்" என்று கூறினார். இவர்களைப் போன்றோர் எத்தனையோ பேர் உலகில் இதுவரை வாழ்ந்தனர். இவர்கள் பொருட்செல்வர்கள்.

இஃதே போன்று அருட்செல்வர்களும் உலகில் வழிவழியாக வந்தவர்கள் பலர். அவர்களில் ஒருவர்தான் இன்றைய மகான் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள். மகரிஷி அவர்கள் மக்கள் நலனுக்காக எத்தனையோவழிமுறைகளைத் தேர்ந்தெடுத்து உபதேசித்து வருகின்றார். அவற்றுள் மிகச்சிறந்த ஒன்று காயகல்பப் பயிற்சி முறையாகும்.

**காயகல்பப் பயிற்சி** மிகச் சிறந்த ஒன்று. அனைவரும் பின்பற்ற வேண்டியது. இதன் சிறப்பினைப் பற்றித் திருமூலரும் மற்றும் பல சித்தர்களும் வெகுவாகக் கூறியிருக்கின்றனர். திருமூலர் இதனை அமுரிதாரணை என்ற தலைப்பில் அழகுற கிண்டலாகவும், கேலி யாகவும், எளிதாகவும் அறிவிற்குகந்ததாகவும் விளக்கி இருக்கிறார்.

காயகல்பம் என்ற அரிய பெரிய சிறந்த பயிற்சி முறையை உலகுக்கு உணர்த்தி வரும் வேதாத்திரி அவர்களின் தொண்டு என்றென்றும் பாராட்டிற்குரியது.

✣ ✣ ✣

# 54. மனித நேயப் பண்பாளர்

- முனைவர். சி. சுப்பிரமணிய பிள்ளை,
கேரளப் பல்கலைக்கழகம்,
திருவனந்தபுரம்.

''செயற்கரிய செய்வார் பெரியோர்'' என்ற பொன்மொழிக்கும், புகழ்மொழிக்கும் இலக்கணமாக இவ்வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மகரிஷி எழுதிய நூல்கள் யாவும் உலகச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கியதாகவும் அவற்றோடு தனது அனுபவத்தையும் ஒரு முறையான அடித்தளத் தையும் அமைத்து உயர் தத்துவங்களையும், உன்னத இலட்சியங் களையும் உணர்த்துவனாக உள்ளன.

இவ்வுலகைப் பற்றி மகரிஷி செய்த சிந்தனைகளுக்கெல்லாம் உள்ளிருந்து வந்த விடைகள் அத்தனையும் வெளிப்பட்டு, அவற்றை உலக மக்களுக்கு உணர்த்தி கடமையைச் செய்யவேண்டும் என்ற விழைவே மனிதநேயக் கருத்தியலாக உருப்பெற்று, பதிவு பெற்றுள்ளது எனலாம்.

இவ்வுலக நலப் பண்பாடுதான் ''வேதாத்திரிய வாழ்க்கை நெறி; இது புதியதொரு வாழ்க்கைப் பண்பாடு; காலத்திற்குத் தேவையானது. மனிதகுல மேம்பாடு - மனித நேயம் என்ற தாரக மந்திரமே மகரிஷியின் வாழ்வும், வாக்கும் எனலாம்.

தனி மனிதப் பண்பாடும் வாழ்வும் சிறக்க ''ஐந்தொழுக்கப் பண்பாடு'' அதாவது தனிமனிதப் பண்பாடாகவும் இதன் வழி சமுதாயம் சிறப்புற 14 திட்டங்களடக்கிய உலகப் பொதுப் பண்பாடு - அதாவது ''வேதாத்திரியம்'' என்ற கோட்பாடாகவும் மலர்ந்துள்ளது. தனி மனிதனையும் அதுவழி சமுதாயத்தையும் இணைத்து மனிதநேயத்தை வலியுறுத்தும் வேதாத்திரியத்தின் பொதுநோக்கம் ''துன்பத்திற்குரிய செயல் களைக் களைந்து அமைதியான வாழ்வுக்கு வழிவகுத்தல்'' என்பதாகும்.

''வேதாத்திரியம்'' என்பது வாழ்க்கையைத் ''தேனாக்கும்'' முயற்சி. அதுவே ''வானகம் இங்கு தென்பட வேண்டும்'' என்று சொன்ன பாரதியின் வாக்கிற்கான பொருள்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதும் ''கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்கவும், முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் வழிகாட்டும் மகரிஷியின் கருத்தியல் - மனிதநேயக் கருத்தியலாக எக்காலத்திற்கும் ஏற்றதாக நின்று நிலவும்.

அருள்தந்தை, தத்துவஞானி யோகிராஜ் எனப் புகழப்படும் மகரிஷியின் மனிதநேயக் கருத்துக்களைக் கிரேக்க அறிவியல் சிந்தனையாளர்களான சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில் போன்றோரின் கருத்துக்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வது தேவையாகும்.

* * *

## 55. சமூக மருத்துவர்

- முனைவர். அ. அறிவுநம்பி,
புதுவைப் பல்கலைக்கழகம்

காலத்துக்கேற்ற வாழ்வியல் முறைகளை ஞானிகளும், பட்டறிவு படைத்த சான்றோர்களும், இறையருள் பெற்ற சீலர்களும், பிறரும் எடுத்தோதி வந்துள்ளனர், எடுத்தியம்பி வருகின்றனர். அவர்களுள் அருள்தந்தை அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

இந்த ஞாலத்தின் நன்மைக்காக அவரளித்துள்ள வேதாத்திரியம் உற்றுநோக்கி எண்ணுவதற்குரியது. வேதாத்திரியத்தை அணுகும் போது சமூக நிறுவனங்களான சமயம், குடும்பம் போன்றவற்றைப் பற்றிய சிந்தனைகளை நோக்குங்கால் அவருடைய நடைமுறைக் கண்ணோட்டம் புலப்படுகிறது.

பொதுவாக சமூக நிறுவனங்களை விஞ்ஞானிகள் ஒரு விதமாகவும், மெய்ஞ்ஞானிகள் ஒருவிதமாகவும் பார்க்கின்றனர். இரண்டும் பெரும்பாலும் இசைந்து போவதில்லை. ஆனால் அருள் தந்தை அவர்கள் விஞ்ஞானம் ஒரு கண்ணாகவும், மெய்ஞ்ஞானம் மற்றொரு கண்ணாகவும் கொண்டு பார்க்கின்றார்.

மனித குலத்தின் பலவீனமும் சமயமே! அருள் தந்தையவர்கள் ஓர் இனக்குழு தனக்கென்று ஏற்படுத்திக்கொண்ட சடங்குகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை கண்டிக்கிறார். வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் இவற்றின் கூட்டே பெருவெளி. இதுவே தெய்வமென்பது அவர் கூறும் கோட்பாடு.

மகரிஷி அவர்கள் அறிவுத்திருக்கோயிலில் விக்ரகமற்ற அரு-உருவ ஜோதியைத்தான் தரிசிக்க வைக்கிறார். அந்த ஜோதியை அறிவாகக் காட்டுகிறார். "சுயமாய் சிந்தித்தே தெளிவாய்" என்ற அவர் கூற்று தாயுமானவர், திருவள்ளுவர், இராமலிங்கர் அவர்களின் வழி வந்தவர் மகரிஷி என்பதை நமக்கு விளக்க வைக்கிறது.

சமூக மருத்துவரின் பணி நோயைக் கண்டறிவதும், மருந்தை எடுத்துரைப்பதும் ஆகும். **சமூக அக்கறை மிக்கவர்.** வழிகாட்டியாகவும், **சமூக மருத்துவராகவும்** அருள் தந்தை அவர்கள் திகழ்கிறார்.

✣ ✣ ✣

# 56. உன்னத மகான்

**- முனைவர். செங்கைப்பொதுவன்,**
**காசி இந்துப் பல்கலைக்கழகம்**

வாழ்க வையகம், வாழ்க வளமுடன் ''தொண்டாற்றி இன்பம் காண்போம்'' என்று கூறிய அருள் தந்தையவர்களை வியந்து நோக்கி வணங்குகிறேன். வானத்து நிலா தனக்கென்று ஒளிரும் சக்தியில்லாதது. அது எவ்வாறு சூரியனிடமிருந்து ஒளியை வாங்கிப் பிரகாசித்து உலகிற் கெல்லாம் தன்னொளி தருகிறதோ அதே போன்று அறிஞர் பெருமக்களும் பல பல்கலைக்கழகப் பேராசிரியப் பெருமக்களும் அருள் தந்தையவர் களிடமிருந்து கருத்துச் செறிவைப் பெற்று மக்களுக்கு சமர்ப்பிக்கின்றனர்.

வேதாத்திரி என்ற பெருமகனைப் பார்த்து நான் பிரமித்துப் போகிறேன். மனம் என்ற மாபெரும் மறைபொருளை அக்குவேறாக அலசி ஆராய்ந்து அதன் தன்மைகளை உணர்ந்து அதனை நம் வசப் படுத்தும் கலையை அறிந்து, அதனை இந்த உலகோருக்கும் எடுத் துரைத்த நவீன யுக மெய்ஞ்ஞானி அவர். வேதாத்திரியத்தில் முழுகி முத்தெடுக்க விழைந்த நான் ''ஞானக் களஞ்சியம்'' என்ற நூலில் கடைசி 300 பாடல்களைத் தேர்ந்து படித்தேன் என்று கூறுவதை விட அனுபவித்தேன் என்பதே சாலப் பொருந்தும்.

வேதாத்திரி என்ற பெயர் இயற்கையாய் அவருடைய பெற்றோர்கள் ஒரு துறவியின் வேண்டுகோளுக்கிணங்க வைத்த பெயர். அதன் பொருள் விளக்கம் பார்த்தோமானால், வேதம்+திரி=திரிவேதம். மூன்று வேதங்களின் சாரமாக இருக்கக்கூடியவர் என்று ஒரு பொருள் கொள்ளலாம். வேதம்+ அத்ரி = அத்ரி என்றால் குதிரை என்று பொருள் கொண்டால் குதிரை மேல் வரும் வேதம். அதாவது குதிரை மேல் இருக்கும் இறைவன் - கல்கி பகவான். இந்தக் கலியுகத்தில் மக்களை உய்விக்க வந்த அவதார புருஷன் என்று பொருள்படுகிறது.

அவர் பிரபஞ்ச ரகசிய மறைபொருள்களையெல்லாம் அகநோக்கு மூலம் உய்த்துணர்ந்து மக்களுக்கு உரைத்து **நம்மை நெறிப்படுத்தும் உன்னத மகான்.**

✣ ✣ ✣

## 57. அருட்கடல்

- முனைவர். எம். பரமசிவம்,
மலேசிய புத்ரா பல்கலைக்கழகம்.

அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஞானக் களஞ்சியமாகத் திகழும் சான்றோர். இறை குறித்தும், இறை வழிபாடு குறித்தும், மதங்கள் குறித்தும், சமுதாய அமைப்புக் குறித்தும் அப் பெருமகனார் கூறும் கருத்துரைகள் உலகோரைச் சிந்திக்க வைக்கின்றன.

சமயக் காழ்ப்புகள் மறைய, ஏற்றத்தாழ்வுகள் நீங்க, உயர்வு தாழ்வுகள் இல்லாத நிலை மலர, இறையை உணர்ந்து போற்ற அச் சான்றோர் மொழியும் அருளுரைகள் **மனித சமுதாயத்திற்குக் கிடைத்த பொற்குவியலாகும்.**

அருள் தந்தை அவர்கள் ''அவர் சொன்னார்; இவர் சொன்னார்'' என்று எதையும் நம்பும் தன்மையர் அல்லர். வழிவழி வந்த தத்துவங்கள், முன்னோர் வரையறுத்த கோட்பாடுகள் என்று தம்மை அவற்றிற்கு அடிமைப்படுத்திக் கொள்பவர் அல்லர். எதனையும் அறிவியல் நோக்கில் ஆராய்ந்து உண்மை கண்டு தெளிபவர். ஏனெனில் அவர் ஒரு **விஞ்ஞானியாவார்.**

மெய்ஞ்ஞானிகள் விஞ்ஞானத்தை ஏற்பதில்லை; விஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகள் சொல்பவற்றை ஒப்புவதில்லை. அருள் தந்தையவர்கள் அறிவியல் கற்றுத் தேர்ந்து மெய்ஞ்ஞானமும் கைவரப் பெற்ற **அருட்கடல்.** எனவேதான், உலகோரைச் சிந்திக்க வைக்கும் உயர் கருத்துக்களை அவரால் வழங்க முடிகிறது.

✣ ✣ ✣

### தமிழ் அறிஞர்கள் / ஆர்வலர்கள்

## 58. வளர்மனவள மாமுனிவர்

- சிலம்பொலி சு. செல்லப்பன்

வேதாத்திரி மகரிஷி அவர்களுடைய முக்கியப் பணியே மக்களை மனவளத்துடன் இருக்கச் செய்தலே. வளமான மனம், வளமான உடல் இருந்தால்தான் நன்மை பெருக வாய்ப்புண்டு. இவற்றின் அடிப்

படையில் நம் பெருமுனிவர் வேதாத்திரி அவர்கள் மனத்தையும், உடலையும் வளத்துடன் வைத்திருக்க அறிவியல் அடிப்படையிலான உடற்பயிற்சிகள், மூச்சுப் பயிற்சிகள், மனத்தை ஒருநிலைப்படுத்துதல், நடுநிலைப்படுத்துதல் ஆகிய பயிற்சிகளை மாந்தர் குலத்திற்கு அளித்து வருகிறார்கள்.

நம் நாட்டில் அரசியலாளர்கள் எல்லாம் இத்தகைய மன வளத்தைத் தம் தொண்டர்கட்கு ஊட்டியிருப்பார்களேயானால் நாடு இன்பபுரியாக விளங்கியிருக்கும். இம்மனவளக்கலை உலக நாடுகள் அனைத்திலும் முறையாகப் பின்பற்றப்படுமானால் நம் பெருமுனிவர் காணவிரும்புகின்ற ஓருலகம் உண்டாக ஒரு தடையும் இருக்காது.

நல்லனவே எண்ணவேண்டும்; நல்லனவே சொல்ல வேண்டும்; நல்லனவே செய்தல் வேண்டும். உன்னையும் வளர்த்துக்கொள்; ஊரையும் வளர்த்துவிடு. உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய் நினைப்பதும் செய்வதும் நித்தியக் கடன் எனும் மகரிஷியின் வாக்குப்படி ஒவ்வொருவரும் கடமையாற்றினால் எங்கும் அமைதி தவழும். இன்பம் பொங்கும்.

உலக நெறிமுறைகள் அனைத்தும் மக்களின் மனத்தைப் பொறுத்தே அமையுமாதலின், மனத்தை அலைபாயாது அடங்கச் செய்யும், நன்னெறியில் அழைத்துச் செல்லவும் பயிற்றுவித்தலில் மகரிஷி அவர்கள் தனிக்கவனம் செலுத்தி வருகிறார்கள்.

மனித குலம் அனைத்தும் அந்நிலை அடைய வேண்டும் என அயராது தொண்டாற்றுகின்றார். அந்நிலையை அடைய அவர் மக்கள் குலத்துக்குத் தந்துள்ள ஊன்றுகோலே மனவளக்கலை. மாமுனிவர் அவர்களின் மாபெரும் வழிகாட்டலால் மக்கள் தம் மனத்தை வளமாக வளர்த்திருக்கிறார்களே; இப்போதும் வளர்த்துக் கொண்டிருக் கிறார்கள். இனியும் வளர்த்துக் கொண்டேயிருப்பார்கள். **மனவளக் கலையை மகரிஷி அவர்கள் வளர் மனவளக்கலையெனும் வினைத் தொகையாக மாற்றியிருக்கிறார்கள்.** அவ்வினைத் தொகைக்கேற்ப நாம் வினையாற்றுவோம்.

✣ ✣ ✣

# 59. புது வேதம்

-மு. இராசகோபால்,
கோவை.

**''அறிவின் முழுமை நோக்கிய பயணத்தை ஊக்கப்படுத்துவதற்காக ஆங்காங்கே அந்தந்தக் கால கட்டங்களில் மகான்கள் வருவார்கள்''** என்ற சுவாமி விவேகானந்தரின் கணிப்புப்படி, இன்றைக்கு வாழும் வள்ளலாராக வீற்றிருப்பவர் மகரிஷி அவர்கள். மகரிஷியின் தத்துவங்களை உள்ளடக்கிய அவருடைய இலக்கியப் படைப்புகளில் உள்ள கருத்தாழம், இலக்கிய நயம், இலக்கிய வளம், கருத்தியல் நெறி போற்றத்தக்கதாகும்.

இன்றைய யுகம் அறிவியல் யுகம், கணினி யுகம், புற வசதிகளில் எல்லை கண்ட நாம், அகத்தின் ஆழத்தை அறிந்திடச் சிறிதேனும் அக்கறை செலுத்தவில்லை. அகத்தின் ஆழத்தை அறியாத, அறிய முயலாத குறைபாடுதான் இன்றைய மனித குலத்தின் ஒட்டுமொத்த அவலங்களுக்கும் காரணம் என்பதை மகரிஷி அவர்கள் தனது வாழ்க்கையை ஒரு தத்துவச் சோதனைக் களமாக மாற்றியதன் மூலம் உணர்ந்தவர்.

மகரிஷியின் இலக்கியங்கள் மன்பதையில் செய்த மாற்றங்கள் தான் என்ன? மற்றவர்கள் ''ஊரோடு ஒத்து வாழ்வதற்கு'' இலக்கியங்கள் தந்தபோது, மகரிஷி மட்டுமே ''உன்னோடு ஒத்து வாழ்'' என்ற தத்துவம் தந்தார்.

மற்ற தத்துவஞானிகள் ''காயமே இது பொய்; காற்றடைத்த பை'' என்றபோது, ''காயமே இது மெய்; இதில் கண்ணும் கருத்தும் வை'' என்று பேசியது வேதாத்திரியின் இலக்கியம். ''வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்'' என்ற வறட்டு வேதாந்தத்திற்கு இடையில் ''வாழ்வாவது எண்ணம், இது வளமாவது திண்ணம்'' என்ற நம்பிக்கையினை இவரது இலக்கிய வரிகள் இயம்பின. மற்ற இலக்கியங்கள் வாழ்வதற்கு வழி கூறிய போது **''வாழ்த்தினால் வாழலாம்''** என்ற கருத்தை வலியுறுத்தி ''வாழ்க வளமுடன்'' என்ற வாழ்த்து மந்திரத்தை அனைவர்க்கும் எடுத்துக் கூறி வாழ்த்தும் முறையினையும் வகைப்படுத்திக் காண்பித்தார்.

மற்ற இலக்கியங்கள் மனிதனை மனிதனாக மாற்றுவதில் தோல்வி அடைந்து கொண்டிருக்கும்போது, நடைமுறைப் பயிற்சியினால், தவத்தால், அகத்தாய்வால் மனிதனைப் புனிதனாக மாற்றிட முடியும் என்று சூத்திரம் தருகின்றனர். வாழக்கை சோதனை நிறைந்தது

என்று வேதனையாகப் பிற இலக்கியங்கள் பிறந்து கொண்டிருக்கும் போது, வாழ்வின் சோதனைகளைச் சாதனையாக மாற்றிட முடியும் என்று **புது வேதம்** தருவது வேதாத்திரிய இலக்கியங்கள்.

✣ ✣ ✣

# 60. கலங்கரை விளக்கம்

- முரசு நெடுமாறன்,
மலேசியா.

உலக உயர்வுக்கு வழிகாட்டி வந்தோரில் அறிவியல் கற்ற விஞ்ஞானிகள் உளர்; மெய்யியல் கற்ற மெய்ஞ்ஞானிகள் உளர்; சமயச் சான்றோர் உளர்; அரசியல் அறிஞர் உளர்; இலக்கியச் செல்வர் உளர். அவரவரும் அவரவர் வழியில் கருத்துச் செல்வங்களை வழங்கி விட்டுச் சென்றுள்ளனர். இவ்வரிசையில் **அருள்தந்தை அவர்கள் மாறுபட்டுத் திகழ்கிறார்கள்.**

உலகில் விஞ்ஞானிகள் சொல்வதை மெய்ஞ்ஞானிகள் ஏற்பதில்லை; மெய்ஞ்ஞானிகளின் கருத்து விஞ்ஞானிகளுக்கு வேடிக்கையாகத் தோன்றும். இலக்கியம்வல்லார் வழிமுறைகள் அரசியல்வல்லார்க்கு ஏற்புடையனவாய் இரா. **அருள்தந்தை அவர்கள் அறிவியல் கற்ற விஞ்ஞானியாகவும், அறிவியல், சமய, ஆன்மீகவியல் கற்ற மெய்ஞ் ஞானியாகவும், அரசியல் பேரறிவும், இலக்கியப் புலமையும், படைப் பாற்றல் திறனும், ஒருங்கே கூடியவராகவும் விளங்குகிறார்.** மேலும் பலதெய்வ வழிபாட்டை சமயத் திருவிழாக்களை ஒப்பாதவர் எனினும், இறைமறுப்பாளராய் இல்லை. உலகை நடத்தும் ஓர் ஆற்றலை நம்பு பவராகவும் உள்ளார் அச்சான்றோர். அதனால், அனைத்தையும் ஆராய்ந்து தெளிந்து உலகிற்குப் புதுவழி காட்டமுடிகிறது.

இதுவரை சான்றோர்கள் பல்வேறு காலங்களில் கூறிவந்த கருத்துக்களின் சாரமாக, புதிய **ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமாக அருள்தந்தை** வகுத்துள்ள நெறிகள் விளங்குகின்றன.

✣ ✣ ✣

# 61. பன்முகச் சிந்தனையாளர்

- திரு. மு.ஐ. வரதராசன்,
நாமக்கல்.

நிகழ்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் போற்றப் படுவதுதான் இலக்கியம். அந்த முறையில் வேதாத்திரி மகரிஷி அவர் களின் நூல்கள் இன்று மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கப்படுகின்றன

தன்னைப் பற்றி, தன் தேவையைப் பற்றி, தன் செயலின் விளைவைப் பற்றி, தன் தகுதியைப் பற்றி, தன் மதிப்பைப் பற்றி ஆராய்ந்து தற்சோதனை செய்யுங்கள் என்கிறார். ஒரு எண்ணம் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவுக்கோ, மனதிற்கோ, உடல் உணர்ச்சிக்கோ ஊறு விளைவிக்காமல் இருக்க வேண்டும் என்கிறார். இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தைத் தொடங்கும்போது திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும் என்று இயற்கையை வாழ்த்தித் தொடங்குகிறார்.

ஞானசம்பந்தப் பெருமான் தனது கோளறு பதிகத்தில் சிவனை வேண்டும்போது "ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி பாம்பிரண்டுடனே ஆசறு நல்ல நல்ல, அவை நல்ல நல்ல அடியார் அவர்க்குமிகவே" என்று நவகோள்கள் இடத்தும் அடுத்த பாடலில் நட்சத்திரங்கள் இடத்தில் இருந்தும் பாதுகாப்பு வேண்டும் என்கிறார்.

மகரிஷி அவர்களோ பஞ்சபூத நவக்கிரக தவம் கற்றுத் தருகிறார். அவற்றையே நினைந்து நினைந்து அவற்றுடன் உயிர்க் கலப்பு பெறுங்கள். எல்லாம் நல்லதாய் முடியும். எண்ணத்திற்கே வலு அதிகம் என்கிறார்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் தமிழ் இலக்கியத்தில் நன்கு தோய்ந்தவர். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல, எழுத்தாளர், சிந்தனை யாளரும்கூட. நமக்கெல்லாம் அறிவை அறிவால் அறிய வைக்கும் அறிஞர் பெருமான் அவர்.

✣ ✣ ✣

# 62. வள்ளலாரின் வாரிசு

- மரு. மு. தணிகாசலம்,
காங்கேயம்.

சித்தர்கள் தாங்கள் கண்ட மெய்யறிவினை அழகிய பாடல்களாக எழுதி வைத்துள்ளார்கள். அவைகளில் யோகம், ஞானம், இரசவாதம், வைத்தியம், ஜோதிடம், பஞ்சபட்சி, மூச்சுப்பயிற்சி என்னும் சரநூல், வர்மம், சாமுத்திரிகா இலட்சணம், மனையடி சாத்திரம், வானியல் போன்ற எண்ணற்ற அறிவார்த்த செய்திகளைச் சித்தர் நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டுச் சித்தர்களை நவகோடி சித்தர்கள் என்றும், நவகோடி சித்தர்கள் மரபு என்றும் கூறுவர். சித்தர்கள் என்றால் சித்தி பெற்றவர்கள், பேரறிவாளர்கள், மெய்யறிவாளர்கள் எனச் சங்க இலக்கியங்களில் குறிப்பு உள்ளது. சித்தர்கள் வாழ்ந்ததால் தமிழ் நாட்டை அறிவன் தேயம் என இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்ச் சித்தர்கள் மரபில் தொடர்ந்து தோன்றியவர்களில் திரு அருள் ஒளி வள்ளலார் அவர்கள், சன்மார்க்க நெறிகளைப் பரப்ப சங்கம் கண்டதுடன் ஆறு திருமுறைகளிலும் அவரது சீரிய கருத்துக் களைப் பாடல்களாகத் தொகுத்தளித்துள்ளார்கள். சித்தர் மரபில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும்போது வாழ்கின்ற சித்தராக நமது அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் வள்ளலாரின் வாரிசாக வாழ்ந்து அருள் தொண்டாற்றி வருகிறார்கள்.

உலக அமைதிக்காக உலக சமுதாய சேவா சங்கத்தை நிறுவி, போரில்லா உலகம் காண வேண்டி, உலகம் முழுவதும் அறிவுத் திருக் கோவில், மனவளக்கலை என்ற அறக்கட்டளை மூலம் தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூக அமைதி, உலக அமைதி என்ற உயரிய குறிக்கோள்களோடு இலட்சக்கணக்கான சீடர்களை உருவாக்கி வருகிறார்கள்.

✣ ✣ ✣

# 63. பொதுநலத் தொண்டர்

- எஸ்.7 நடராஜன்,
தேவகோட்டை

மகரிஷி ஓர் சாதாரண மனிதரல்ல. வெந்ததைத் தின்று விதி வந்தால் ஏற்கும் மிகச் சாதாரண மனிதர்களைப் பற்றி நாளும் சிந்திக்கும் தன்மையுடையவர். தமது சிந்தனையில் உருவான செம்மொழி கலந்த அறிவின் முழுமையால் எண்ணம், சொல், செயல் என்ற அடிப்படையான தாரக மந்திரத்தை எளிமையான மனவளக்கலைப் பயிற்சியின் மூலம் உலக மக்களுடன் நாளும் பகிர்ந்து கொண்டு வரும் ஒரு மனம் நிறைவான ''பொதுநலத் தொண்டன்''.

மகரிஷியின் படைப்புகள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கை என்னும் படகை மிக எளிமையாகச் சிக்கலின்றி கரையைக் கடக்கும் நல்ல பண்புகள் நிறைந்தவை. குறைந்த படிப்பறிவு உள்ளவர்களும், படிப்பறிவே இல்லாத கேள்வி ஞானமுடையவர்களும் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்க்கை நலங்களை அறிந்து நன்மை அடையலாம்.

மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக கீதை, பைபிள், குர்ரான் போன்றவற்றை உருவாக்கிய மகான்களைப் போல், உலகப் பொது மறை என்று கூறப்படும் ''திருக்குறள்'' அதை உருவாக்கிய திருவள்ளு வரைப் போல நாடு, மதம், இனம் கடந்த நிலையில் தம்முடைய சிந்தனைகளை அறிவுப்பூர்வமாக உலக வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து நிலைகளிலும் எழுத்தால் கருத்தாக, கவியாக, எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார் மெய்ஞ்ஞானமும் கலந்த நிலையில்.

தெளிவான சிந்தனைகளைத் தந்து மக்களை நல்வழிப்படுத்த இன்றும் நாளெல்லாம் பாடுபட்டுக்கொண்டிருக்கும் மகரிஷி அவர்களின் சிந்தனையில் தோன்றியது வேதாத்திரியம்.

✣ ✣ ✣

# 64. உளவியல் ஆராய்ச்சியாளர்

- ம. சாந்தி, அம்மாப்பேட்டை

மகரிஷி அவர்கள் இயற்கை அற்புதம் அத்தனையும் ஆராய்ந்து, அற்புத, ஆக்கபூர்வ படைப்புகளாக மனித சமுதாயத்திற்கு அர்ப் பணித்துள்ளார்.

அவரின் ஆராய்ச்சியில் சிறு புல் முதல் பரந்த விண் வரை, அத்தனையும் அத்துப்படி, அத்தனையும் அபூர்வம், அத்தனையும் உண்மை.

மனித வாழ்வே - சமுதாயம், மொழி, சமயம், உலகம், இன்பம், துன்பம் என்பதை உணர்ந்த இவர் விலங்கிலிருந்து தோன்றிய மனிதனை விலங்கினப் பதிவுகளில் இருந்து மீட்க, மிகப்பெரிய போராட்டம் நடத்தியுள்ளார். எப்போதுமே ஆராய்ச்சியின் நல்ல முடிவுகளை, தத்துவங்களை, மக்கள் உடனே ஏற்றுக்கொண்டதில்லை. மக்களால் ஏற்றுக் கொண்ட முடிவுகள் மனித இனம் மறையும் வரை வாழ்ந்து கொண்டிருக்கும். இது உலக உண்மை, மகரிஷியின் மனவளக் கலையும் அப்படித்தான்.

அவருடைய இதயத்தில் மனித சமுதாயத்தைப் பற்றி எத்தனையோ கனவுகள், கற்பனைகள்.

கடல் போன்ற அவரின் படைப்புகளில் முற்போக்குச் சிந்தனைகள் ஏராளமாக உள்ளன.

இன்று மனித சமுதாயத்தின் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் காணப்படும் குறைகளுக்கெல்லாம் அடிப்படையான காரணம் மனித மனம்.

மனதைப் புரிந்துகொள்ளாவிட்டால், முரண்பாடுகளும், குழப்பங்களும், மோதல்களும், வறுமையும், அறியாமையுமே சமுதாயமாக மாறும் என்பதை உணர்ந்த மகரிஷி, அவன் வாழும் குடும்பத்திற்கும், கிராமத்திற்கும், நகரத்திற்கும், நாட்டிற்கும் நிலையான அமைதியும், வளமான வாழ்வும் கிடைக்க வேண்டும் என்று எண்ணினார்.

உளவியல் ஆராய்ச்சியாளராக மாறி மனதை ஆராய்ந்து, உடலில் உற்பத்தியாகும் ஜீவகாந்தம் மன அலைகளாக மாற்றம் பெறுகிறது என்பதை, ''மனமென்றும் புதினமது ஜீவகாந்த அலை தான் மனிதனிடம் புலன் உணர்வில் அது விரைவு கொண்டு.....'' என்று எளிமையாக பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கியுள்ளார்.

✣ ✣ ✣

# 65. பாமர மக்களின் தத்துவஞானி

- வி. கலிய பெருமாள்,
தஞ்சாவூர்

பல தத்துவஞானிகள் சொன்னவைகளைச் சாதாரண மனிதன் புரிந்துகொள்ள முடியாமல் தவித்து வந்தான். ஆனால், அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் அவற்றைச் சுருக்கி எளிமையாக்கி நமக்கு அளித்துள்ளார்கள்.

உடற்பயிற்சி, யோகா ஆசனங்கள் பலவகைப்படும். பதஞ்சலி யோகம், திருமூலர் இயற்றிய திருமந்திரம், மற்றும் பலவிதமான சித்தர்கள் நமக்கு அளித்துள்ள யோகாசனங்கள், அவைகளின் பயிற்சி முறைகளைச் சாதாரண மனிதன் அதிகம் பயன்படுத்த முடியவில்லை. அப்படியே பயன்படுத்தினாலும் அதன் முழுமையான பயன் கிட்டுவதில்லை.

ஆனால், அருட்தந்தை அவர்கள் இவற்றைச் சுருக்கி, எளிமையாக்கி, சாதாரண மனிதனும் பயன்படுத்தும் வண்ணம், அதிகம் உடலை வருத்தா மலும், மனதை முழுமையாகவும், அதன் ஆற்றல்கள் வெளிப்படும் வண்ணம் சுயமாகவும் சிந்தித்துச் செயல்பட, தியானம் மற்றும் அகத்தாய்வுப் பயிற்சிகளை முறையாக அளித்துள்ளார்கள்.

இது பற்றிக் காலங்காலமாக நமது முன்னோர்கள் கூறி வந்தாலும், சாதாரண மனிதனுக்கு இது பற்றிய ஞானம் கிடைக்கவில்லை. பல சித்தர் பாடல்களில் இவை உள்ளன. அருட்தந்தை அவர்கள் தமக்குக் கிடைத்த பாடல்களிலிருந்து காயகல்பத்தின் உண்மையான பொருளைக் கொண்டு பல ஆண்டுகள் தான் பயிற்சி செய்து, முழுமை யாக உணர்ந்த பின்பே நமது பார்வைக்கும் அதன் மூலமும் உலகத்தில் உள்ள அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் மிக எளிமையாகவும் இந்தப் பயிற்சியைச் செய்யலாம் எனக் கூறியுள்ளார். இதன் மூலம் வாழ்நாள் நீடிக்கும், ஞாபக சக்தி அதிகரிக்கும், மனக்கட்டுப்பாடும் கிடைக்கும்.

தற்போது சாதாரண படிக்காத மனிதர்களும் இறைநிலையை அடைய எளிய முறையில் தியானம் மற்றும் உடற்பயிற்சி, அகத்தாய்வு பயிற்சிகள் கொடுத்து மக்களை நல் வழிப்படுத்தி சமுதாயத்திற்கும், உலகத்திற்கும் அரிய தொண்டு புரிந்துள்ளார். அவரைப் பின்பற்றி நாமும், நமது சமுதாயமும் சிறந்தோங்கி வாழ வழிவகை செய்வோம்.

✣ ✣ ✣

# 66. மகரிஷியின் பெருமை

- தமிழருவி மணியன்.

வேதாத்திரி மகரிஷியின் பெருமைகளில் ஒன்றைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். ஒரு கோணத்தில் மகரிஷியின் தத்துவங்களில் பெரியார் சாயல் தெரியும். இன்னொரு கோணத்தில் மகாத்மாகாந்தியின் சாயல் தெரியும். விவேகானந்தர் சாயல் தெரியும். இப்படி மனிதன் ஒரே நேரத்தில் பல்வேறு வடிவங்களை சமூகத்தில் காட்டுவது என்பது எல்லோருக்கும் இயலாது.

மகரிஷி அவர்கள் உள்முகமாக, தான் அனுபவித்துத் தெளிந்து அதன் பிறகு தத்துவங்களை நமக்கு வழங்கியிருக்கிறார். அந்த அனுபவம்தான் மிக அற்புதமானது.

இறைவழிபாடு, உயிர்வழிபாடு இணைந்தால்தான் ஆன்மீக வழிபாடு என்று மகரிஷி ஒரே வரியில் சொல்கிறார்.

மகரிஷியின் வாழ்க்கையை முற்றாகப் பின்பற்றியவர்கள் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழமுடியும். உடல் நலனையும், மன நலனையும் சேர்த்துச் சிந்தித்து இரண்டின்பால் மனித சமுதாயத்தைக் கொண்டுவந்து சேர்ப்பதற்காக ஒரு மாபெரும் தவத்தை நடத்தியுள்ளார்கள் வேதாத்திரி சுவாமிகள்.

✣ ✣ ✣

# 67. பிரம்மரிஷி

- ஏ.பி. இராஜேஸ்வரி,
சென்னை.

வேதாத்திரி மகரிஷி அவர்கள், 20, 21-ம் நூற்றாண்டுகளில் வாழ்கின்ற தலைசிறந்த அறிவு ஞானியாகவும், ஆன்மீக மேதை யாகவும் இணையற்ற **அறிவியல் ஆன்மீகச் சித்தராகவும், சிறந்த மகானாகவும், அருள் வள்ளலாகவும், பிரம்ம ரிஷியாகவும், தத்துவ ஞானியாகவும்** வாழ்ந்து வருகிறார்கள்.

அருட்தந்தை அவர்கள் அகத்தவத்தின் பயனாகத் தாம் உள்ளுணர்வாகப் பெற்ற தத்துவக் கருத்துக்களையும், விஞ்ஞான அனுபவ நுட்பங்களையும், தமது அனுபவ விளைவாகப் பெற்ற

வாழ்க்கை நெறிகளையும் உரையிலும், கவிதையிலுமாக எழுபதிற்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்கள். மகரிஷிதரும்கல்வி, போதனைமார்க்கமல்ல, அது சாதனைமுறையே ஆகும்.

திருவள்ளுவரும் வேதாத்திரியும் இருவருமே சிறந்த மெய்ஞ் ஞானிகள் ஆவர். இருவரின் கருத்துகளிலுமே அறிவியல் சிந்தனைகள் மிகுதியுண்டு. இருவருமே வற்புறுத்துவது உலக அமைதி ஆகும். உலக அமைதியே மனித குலத்தின் சன்மார்க்கமாகும்.

தெய்வப்புலவரும், மகரிஷியும் கண்டது அறிவியல் மட்டு மில்லை குன்றாத அறிவியலும் ஆகும்.

*அன்று தெய்வப் புலவர்! இன்று அருட்தந்தை!*

✣ ✣ ✣

தொழில் அதிபர்கள்

# 68. உண்மை சன்மார்க்கி

**- பொள்ளாச்சி மகாலிங்கம்**

வேதாத்திரி மகரிஷி அவர்கள் இந்த நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் அருளாளர்களில் குறிப்பிடத்தக்கவர். ஆயிரக்கணக் கான அருள் நிதியர்களைத் தமது தொண்டர்களாக உருவாக்கி, அவர்கள் அனைவராலும் 'அருள்தந்தை' என்று போற்றப்படுகிறார்கள். அருள் தந்தை அவர்களின் உலக சமுதாய சேவா சங்கம், அருட் பிரகாச வள்ளற் பெருமானின் சன்மார்க்க சங்கத்தின் ஒரு பரிணாம வளர்ச்சி யாகவே வளர்ந்தோங்கியுள்ளது.

வள்ளற் பெருமான், புறத்தில் அமைந்த ஞான சபையை அநேகமாக தன்னுள்ளே காணுகின்றவர்தான் சன்மார்க்கி என்றார். ஞானசபையைத்தான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் வள்ளற் பெருமானின் சன்மார்க்க கொள்கைகள் பலவற்றை உலக சமுதாய சேவா சங்கத்திற்கு வழிகாட்டி நெறிகளாக வைத்து அமைத்து இருக்கிறார்கள்.

காந்த தத்துவம், மனவளக்கலை, குண்டலினி சக்தி, காயகல்பம், அகத்தவம், உலக சமாதானம் ஆகிய அனைத்தையும் பற்றி சுவாமிகள் மிக ஆழமாகவும், தெளிவாகவும் தமது சொந்த சுய முயற்சியில் கற்று உணர்ந்தவைகளை நூல்களாகவும், கவிதைகளாகவும் எழுதி

யுள்ளார்கள். சுவாமிகளின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பது அவர் அடிப்படையில் ஒரு அருட்கவியாக இருப்பதுதான். ஒரு கவிஞரின் உள்ளம் வானத்தையும்விட விசாலமானது, வார்த்தைகளோ அனைத்தும் மந்திரங்கள். ஏனெனில் கவிஞனின் வாழ்வே ஒரு தரிசனமாக இருப்பதுதான் வேதாத்திரி மகரிஷி அவர்களின் கவிதைகள் காலத்தை வெல்லும் வல்லமையுடையவை. 'பாமர மக்களின் ஞானி' என்ற பாராட்டுக்குரிய மகரிஷி அவர்களின் வாழ்வும், வாக்கும் என்றும் நின்று நிலைக்கும்.

✤ ✤ ✤

# 69. நம்மோடு வாழ்ந்த மகான்

- மு. வேலாயுதம்,
விஜயா பதிப்பகம், கோவை.

மனிதகுலம் கண்ட மகான்களின் மறுபதிப்பாக மெய்ஞ்ஞானப் பார்வை கொண்ட அருளாளராக விஞ்ஞானப் பார்வை கொண்ட தத்துவஞானியாக, தீர்க்க தரிசனம் கொண்ட தீர்க்க தரிசியாக, உலகநலத் தொண்டராக, நம்மோடு வாழ்ந்த மகானாக இந்த நூற்றாண்டு தந்த மகான் வேதாத்திரி மகரிஷியின் வாழ்க்கை வரலாறு மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டும் வரலாறாகும்.

தான் உணர்ந்ததையெல்லாம் முழுமையாகச் சொன்ன மகான்கள் மிகச்சிலரே. இராமனுஜரைப் போல், தன் வலிமையால் உணர்ந்த இரகசியங்களையெல்லாம் ஒன்று விடாமல் மானுடத்திற்கு மகரிஷி தந்துள்ளார்கள்.

மனவளக்கலை மூலம் சமுதாயத்தில் ஒரு எழுச்சியை விதைத்த மகரிஷி, உலக சமுதாயத்திற்கு வாழ்க வையகம், வாழ்க வளமுடன் என்ற தாரக மந்திரத்தை தந்துள்ளார்கள். எத்தனை நூற்றாண்டுகள் கழிந்தாலும், இம்மந்திரம் உலகில் நிலை பெற்றிருக்கும்.

✤ ✤ ✤

## விஞ்ஞானி

# 70. ஞானப் பறவை

- டாக்டர். அழகர். இராமானுஜம்

ஒரு தனி மனிதர் இத்தரணி போற்றும் மகானாகிறார். வேதத்தின் வேர்களைத் தொட்டவர் வேதாத்திரி. சித்தர்கள் வழியில் புத்தரைப் போதிக்கிறவர். இவர், ஆதியில் பிறந்த ஆதி சங்கரர் மட்டுமல்லர்; வருகிற நூற்றாண்டின் வள்ளலாரும் கூட. சன்மார்க்கப் பாதையில் சகல மதங்களையும் இணைத்தவர். சறுக்குகிற விஞ்ஞானத்திற்குச் சாரத்தையும் கட்டியவர்.

இந்தப் பிரபஞ்சத்தில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாடம் கற்றார். தாயிடமும், தந்தையிடமும் சுருதிகளைக் கேட்டதுண்டு; கேட்ட சுருதியோடு தனது யுக்தியையும் சேர்த்ததுண்டு, வழிகாட்டத் துணையில்லாமல் வழியெல்லாம் நடந்ததுண்டு; நலம் தரும் வழிகண்டு, இந்த நானிலத்திற்கு அதைத் தந்ததுமுண்டு.

தட்டுத் தடுமாறித் தமிழைப் படிக்கும் முன், தந்தை தாய்க்கு உதவ, பள்ளிப் படிப்பை எட்டு வயதில் முடித்துக்கொண்ட இவர், தானாகப் படித்து, தரணி போற்றும் பல நூல்கள் எழுதினார்.

எட்டுவயதில் தன்னைத் தறியில் அடகு வைத்து அன்றாடம் பிழைப்புக்கு வழி தேடியதும் உண்டு; அமெரிக்க நாட்டில் ஐ.நா.வாளா கத்தில் அறிஞர்களிடையே உரை நிகழ்த்தியதும் உண்டு.

இரண்டு கார்கள் வீட்டில் நிற்க வாழ்ந்ததும் உண்டு; பசி வயிற்றைக் கிள்ள, மதிய சாப்பிட்டிற்கு 5 அணா இருக்குமா என்று பையைத் தொட்டபோது 1½ அணா மட்டுமேயிருந்த ஏழ்மையுண்டு.

உறவைத் துறந்து ஊரைப் பிரிந்து உலகுக்கு வந்ததுமுண்டு; ஊரும் உறவும் உதவியைக் கேட்டபோது, உவப்புடன் தந்ததும் உண்டு.

பரஞ்சோதி மகானிடம் பாடம் கற்றதுண்டு; கற்ற பாடத்திற்குத் தனது யுக்தியால் மெருகேற்றியதும் உண்டு.

சுத்தவெளியே ஆதி, இறையெனக் கண்டு கொண்டதும் உண்டு; அந்த வெளியே சிவமென்றும், பிரம்மமென்றும் உலகுக்கு உணர்த்திய பெருமையுமுண்டு.

வாழ்வின் வசதியையெல்லாம் இழந்து, புட்டுச் சுட்டு விற்று, தன் வயிற்றைக் கழுவியதும் உண்டு; அகிலமெல்லாம் சென்று அயராது ஆன்மீக ஒளிபரப்பி வாழ்க்கை வளங்களைப் பிறருக்கு வாரி வாரி வழங்கியதுமுண்டு.

வாழ்க்கையின் இருதுருவ எல்லைகளைத் தொட்ட ஒரு மனிதர் இன்று ஒரு அசாதாரண மகானாகிறார். இவர், ஒரு கூட்டில் அடை பட்டது கூடுவாஞ்சேரியில், மலர்ந்தது அன்றைய மதராஸில், மலர்ந்து மணம் பரப்பியது இந்த மண்ணுலகமெல்லாம். இறையைத் தேடியது பிரபஞ்ச வீதியில், இணைந்து கொண்டது பிரம்ம ஞானத்தில். இயக்கத்தை உணர்ந்தது காந்தத் தத்துவத்தில். உறவை உயர்த்தியது புதியதொரு பண்பாட்டில். இவரது வாழ்க்கை, வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு அன்று; மானுடம் வியக்கும் ஓர் இனிய காவியமே.

அகத்தவத்தின் மூலம் அறிவை அறிந்தவர். அனைத்தையும் அணுக்களின் கூட்டாக உணர்ந்தவர், மனத்தின் புதினத்தை மாந்தருக்குத் தெளிவாக்கியவர். சினத்தைத் தவிர்த்த சித்தர். வெட்டவெளியில் வேகின்ற பிரபஞ்சப் பொங்கலைப் பொதுவுடைமையாக்க விரும்புகிற புனிதர். பெண்ணின் பெருமைக்குப் பெருமை சேர்த்தவர்.

இனிய தமிழில் பல இலக்கியங்கள் தந்தவர். விஞ்ஞானத்தை விரிவாக்கி மெய்ஞ்ஞானத்தில் இணைந்தவர். குடும்ப நலனுக்குக் குண்டலினி யோகம் கொடுத்தவர் இல்லறத்தில் துறவறத்தை இணைத்த இனிய மனிதர். உலக அமைதிக்கு வழிகாட்டும் உத்தமர். சரித்திரத்தின் ஒரு பகுதி அன்று இவரது வாழ்க்கை; இவரது வாழ்க்கையே ஒரு மாபெரும் சரித்திரம்.

இவரது பார்வை உலகளாவிய விரிந்த பார்வை. ஊர், மாநிலம், தேசம், உலகம் என்று சிறிது சிறிதாக எல்லையைத் தாண்டி இறகை விரித்த ஞானப் பறவை இவர்.

இவர் இந்தக் காலத்தின் கட்டாயம்: அடுத்த நூற்றாண்டின் அச்சாரம்.

✣ ✣ ✣

## இதழ்கள்

# 71. மகரிஷி கண்ட பெண்மை

- வேத ஒளி

பூத்துக் குலுங்கவே துடிக்கின்றன பூவரச மரங்கள். இறை ஞானத்திற்கு பிரம்மச்சர்யமே உன்னத மார்க்கம் என்பவர்கள் பலர் இருந்தாலும், இல்லறத்தில் நின்று முழுமையான இறைஞானம் பெறலாம் என்பது வேதாத்திரியக் கூற்று, புத்தர், நபிகள் போன்ற மகான்கள் இல்லறத்தில் இருந்தவர்கள்தானே!

ஞானத்திலிருந்து பெண்மையை ஒதுக்குவது முறையல்ல என்பதை உணர்ந்து, ஞானத்தைத் தொடக்கூடாதென்று யார், யாரையெல்லாம் அன்றைய சமுதாயம் ஒதுக்கியதோ, அவர்களும் ஞானத்தைத் தொடலாம், முக்தி பெறலாம் என்பதை வலியுறுத்திய பெருமை வியாசரைச் சாரும்.

ஞானம் எல்லோருக்கும் பொதுவானது எனும் அவரது கருத்தை வேறு யார் மூலமாகவும் சொன்னால் அது எடுபடாது என்று நினைத்து, ''பெண் பாலர், வைசியர், சூத்திரர் ஆகியவரும் என்னைச் சேர்கின்றனர் என்பதை,

''மாம் ஹி பார்த்தி வ்யபாசரித்யமே அபிஸ்யு: பாபயோனை:

ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா சூத்ராஸ்தே அபி யாந்திரபரம்கதிம்'' (பகவத் கீதை 9.32) என்ற சுலோகத்தில் சாட்சாத் கிருஷ்ணன் கூறு வதாகவே அமைத்தார் வியாசர். கிருஷ்ணனே கூறிவிட்டால் அதற்கு அப்பீல் ஏது? புரட்சிகரமான ஒரு கருத்தை பகவத் கீதையின் மூலமாக உணர்த்திய பெருமை வியாசரைச் சாரும்.

வியாசரின் கருத்து பெண்மைக்கு ஒரு விடியலாக வந்தாலும், பிற்காலத்தில் மதங்களும், சமயங்களும் பெண்மைக்கு இழைத்த தீங்குகள் கொஞ்ச நஞ்சமல்ல என்பதை உலகறியும்.

பெண்மைக்கு எதிராக நடந்த ''சதி'' எனும் தீயை நாம் சடுதியில் மறக்க முடியுமா? வழிவழியாக வந்த சமுதாயம் பெண்மையை ஞானத்திலிருந்து ஒதுக்கி வைத்தாலும், அவ்வப்போது பெண்மைக் காகக் குரல் கொடுத்த மகான்கள் நமது பாரத பூமியில் வந்த வண்ண மாகவே இருக்கின்றனர்

இந்த மகான்களின் வரிசையில் இன்று நாம் அருள்தந்தையைப் பார்க்கிறோம்.

தத்துவரீதியாகவும், சமுதாய ரீதியாகவும், தனிமனித குடும்பத்து அளவிலும் பெண்மையின் உயர்வையும் சுட்டிக்காட்டி, திரு.வி.க. கண்ட பெண்மையையும், பாரதி பாடிய பெண்மையையும் நமது ஆன்மாவில் ஆழப் பதிய வைக்கிறது வேதாத்திரியம்.

✣ ✣ ✣

## 72. காலத்துக்கேற்றவர்

– இலங்கை ஈழக்கேசரி

''அணுகுண்டும், சலவாயுக் குண்டும் உலகைப் பயமுறுத்தும் இந்நாளில் உலக சமாதானம் பற்றி நினையாத நெஞ்சில்லை. ஆனால் சமாதானத்தை நிலைநாட்டும் மார்க்கந்தான் புலப்படவில்லை. உலக சமாதான நூல் உலக சமாதானம் பற்றிய ஆராய்ச்சியையும், அதற்கான திட்டங்களையும், தத்துவ விளக்கத்தையும் பலப்பல தலைப்புகளின் கீழ் விரிவாக ஆராய முயலுகிறது.

மனித சமுதாயத்துக்கு அவசியமான வாழ்க்கைத் தேவைகளைக் கூட்டுறவு மூலம் உற்பத்தி செய்து அனுபவித்து ஒற்றுமையாக வாழ வேண்டிய அவசியம் உலக சமாதான நூலில் வலியுறுத்தப் படுகிறது. காலத்துக்கேற்ற நூல், புதுத் துறையிலே துணிவுடன் பிரவேசித்து கணிசமான அளவு வெற்றி ஈட்டியுள்ள ஆசிரியரைப் பாராட்ட வேண்டும்''.

✣ ✣ ✣

## 73. பாராட்டத்தான் வேண்டும்

– தினமலர்

வாழ்க வையகம். வாழ்க வளமுடன் என்ற வாசகங்களுடன் இன்றைக்கு கிராமங்கள் தோறும் மனவளக்கலை மன்றங்கள் 'பெருகி வருகின்றன. ஆன்மீகம்... சிந்தனை ...., தியானம் ..... இவற்றுடன் மனநலம் மட்டுமல்லாது உடல் நலத்தையும் பேணிப் பிரச்சாரம் செய்து போதனை செய்கின்ற இவர்களின் முயற்சிகளைப் பாராட்டத்தான் வேண்டும்.

இவர்கள் கிராமங்களில் ஆங்காங்கு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு மனவளக்கலை மன்றங்களை 'தவ மையம்' என்னும் பெயரில் துவங்குகிறார்கள். உலக அமைதி... ஆன்மீக.... அறிவு மேம்படுதல், தியானம் ... யோகாசனம் முதலியவற்றையும் புலமை பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு போதனை செய்கிறார்கள்.

இவர்களின் குருவாகிய அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களின் அருளுரைகள் ... தத்துவங்கள்... ஞானமொழி களையும், புத்தகங்களையும் வாசித்து பின்பு மனிதர்களை நேசிக்க கற்றுக் கொடுக்கின்றனர். அறிவுத்திறனுடன் கூடிய இவர்களின் ஆன்மீக வழிகாட்டுதல்கள் கிராமப்புற மக்களை எளிதில் கவர்ந்து இவர்களின் தவமையங்களில் உறுப்பினர் ஆக்குகிறார்கள். அத்தகைய உறுப்பினர் ஆனவர்களிடம் மிகப்பெரிய மாறுதல்கள் நிகழ ஆரம்பிக்கின்றன. அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஐந்து ஒழுக்கப் பண்பு களை நெறி தவறாமல் கடைப்பிடிக்க கற்றுக் கொடுக்கிறார்கள்.

மரணத்தைத் தடுக்க, விந்து சக்தியைப் பதங்கமாக்கி அதன் உற்பத்தி நிலையத்தோடு இணைக்க வேண்டும். இந்த இரண்டு பயிற்சிகளும் இணைந்ததே காயகல்பப் பயிற்சி என்கிறார்கள். இப்பயிற்சியினால் உடல் நலமும், மனவளமும் நன்றாக இருக்கும். ஆண்மை ஓங்கும், உடல் உறவு விருப்பம் எப்பொழுதும் மனதுக்குக் கட்டுப்பட்டிருக்கும். தானே விரும்பும்படி குழந்தை பெற்றுக் கொள்வதோ, தடுத்துக் கொள்வதோ இயல்பாக முடியும். கிராமங்களில் உடல் ஒழுக்கம், மனிதநேயம், சிந்தனை, தியானம் இவற்றை வளர்க்கப் பாடுபடும் மனவளக்கலை மன்றங்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

✣ ✣ ✣

## 74. கருத்தாழமுடைய சொற்கள்

- சுதேசமித்திரன்

உலக மக்கள், வறுமை, பட்டினி, நோய், வேலையில்லாத் திண்டாட்டம், கல்லாமை, அறியாமை ஆகியவைகளினின்று விடுபட்டு, ஜாதி, சமயம், நாடு எனும் பிரிவு மனப்பான்மையற்று நல்வாழ்வு வாழ உலகப் பொது ஆட்சி அவசியம் என்பதை விளக்கும் முப்பது பாக்களைக் கொண்டது வேதாத்திரியின் உலக சமாதானம் நூல். புத்தகத்திலுள்ள விஷயங்கள் ஆராய்ச்சி, திட்டம், தத்துவ விளக்கம்

என்ற மூன்று பாகங்களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பாடல்களின் நடை யாவரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய வகையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உலக சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக ஆசிரியர் வகுத்துள்ள பல திட்டங்களில் அங்கீகரிக்கக் கூடியவையும் கருத்து வேறுபாடு கொள்ளக் கூடியவையும் விரவியே இருக்கின்றன. உதாரணமாக வறுமை ஒழிய, கல்வி பெருக, தொழிலறிவு வளர, இல்லறம் போன்ற பல பகுதிகளை அனைவரும் வரவேற்பார்கள். மோதிரங்கள் மாற்றிக் கொள்ளும் விவாகம், ரத்து செய்து கொண்டு, திரும்பவும் வாழ்க்கைத் துணை தேடி மணக்கும் வாய்ப்பு, குழந்தைகளைப் பெற்றோர்களிட மிருந்து பிரித்து வளர்த்தல், தனிச் சொத்துரிமை ஒழிப்பு, பற்றற்ற வாழ்வு, கருத்தடை போன்றவற்றை யாவரும் வரவேற்பது எளிதன்று.

மூன்று பாகங்களிலும் உள்ள பாடல்களுக்கும் கருத்தாழமுடைய சொற்களைக் கொண்டு ஆசிரியர் விளக்க உரையும் தந்துள்ளார். பல நாட்டு மக்களும் ஒரு குலத்தவர்களாக வாழ வேண்டுமெனும் பெரு நோக்கத்தோடு பிரசுரமாகியிருக்கும் இந்நூல், பல திறத்தவரும் படித்துச் சிந்திக்கக் கூடியதாகும்''.

✣ ✣ ✣

# 75. ஞானச் சுரங்கம்

**- ஞான ஒளி**

இன்றைக்கு அறிவார்ந்த தமிழ் மக்களிடையே ஒலிக்கும் ஓர் அற்புதமான மந்திர வாக்கியம்தான் 'வாழ்க வளமுடன்'.

நல்லதை எண்ணினால், நல்லதே நடக்கும். இது வேத காலத்திலிருந்து நமது ஆன்றோர்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வரும் நற்பண்புகளில் ஒன்று. இதையே மக்களுக்குப் பயன் தரும் வகையில் எளிய கோஷமாக மாற்றித் தந்திருக்கிறார், அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி.

எளிமையான உடையணிந்து, கம்பீரமான வேதகால மகரிஷியைப் போல வீற்றிருக்கிறார். மகரிஷி எவ்விதமான போலி ஆடம்பரங்கள் இல்லாதவர்.

மாயப் பேச்சோ - மயக்குப் பேச்சோ - வெற்று உபதேசங்களோ - மிகைப்பட்ட ஜாலக்குகளோ ஒன்றுகூட இவரிடம் காணமுடியாது.

வேதாத்திரி மகரிஷியைச் சாதாரண சாமியார்களோடு ஒப்பிடவே மனம் நாணுகிறது. அவர் தமிழர் குடும்பங்களில் அந்தக் காலங்களில் இருந்த அறிவார்ந்த முதியவர்களில் ஒருவர் போலவே காணப்படுகிறார். ஒரு பேராசிரியரைப் பார்க்கின்ற மரியாதை கலந்த அச்ச உணர்வே நம்முள் எழுகிறது. கருணை உள்ள கண்டிப்பான தந்தையாகவே அவர் சகல விஷயங்களையும் பேசுகிறார்.

சுவாமிகள் இல்லறத்தை வெறுத்து, காட்டுக்குள் ஓடிய துறவி அல்லர். இல்லறத்தை ஏற்று, அதன் பணிகளை ஒரு வரையறைக்கு உட்படுத்தியே செயல்பட்டு, துறவற மனப்பான்மையினையும் வளர்த்துத் தம்மை அருள் நெறியில் நிலைநிறுத்திக் கொண்டவர்.

அருள் தந்தை வேதாத்திரி மகரிஷியின் புத்தகங்கள் அனைத்தும் ஞானப் பேழைகள். அதே சமயம் கடினமான ஒரு பதம் கூட கிடையாது. இவ்வளவு எளிமையான ஞான ரகசியங்களை - யோக நுட்பங்களை நமக்கு எடுத்துச் சொல்பவர் இன்று உலகிலேயே யாருமில்லை என்று துணிந்து கூறலாம்.

எத்தனையோ ஞான மேதைகள் இருக்கலாம். அவர்கள் நமக்கு அகப்பட வேண்டுமே!

இதோ இருக்கிறார், எளியவர்களின் ஞான வழிகாட்டி! மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் மறுக்க முடியாத வகையிலான அறிவார்ந்த உண்மைகளை எளிமையாக எடுத்துச் சொல்லி, யோகங் களையும் பழக்கித் தரும் ஒரு மாமனிதரை அணுகாமல் வாழ்நாளை வீணாக்குவது தகுமா .. கூறுங்கள்!

வாழ்வது ஒரு கலை. அதைப் பயிற்றுவிக்க சரியான ஞான ஆசான்கள் இல்லாததாலேயே சமுதாயத்தில் கெட்ட மதப்போரும், மன மாச்சர்யங்களால் ஏற்படுகின்றன. உலகையே நரகமாக்கி, நாமும் அந்த நரகத்தில் கிடந்து உழன்று, நம் வாழ்வைப் பாழடித்துக் கொள்வதால் என்ன பயன் இருக்க முடியும் ... சொல்லுங்கள்? வாழ்வது கொஞ்ச நாள். அதையும் வகையாக - நிம்மதியாக அனுபவித்தால் - அதைவிட சொர்க்கம் உண்டா .. சொல்லுங்கள்?

அந்தச் சொர்க்கத்தைத்தான் நமக்கு மிக எளிமையாக - புரிகிற விதமாகத் திறந்து காட்டுகிறார் நம் அருள் தந்தை - யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

அவரது கரம் பற்றிக் கொண்டு நடந்தால் மனித சமுதாயம் உலகையே இன்பப் பூங்காவாக மாற்றி அமைத்துவிட முடியும்.

✣ ✣ ✣

## மாநில / மத்திய அதிகாரிகள்

# 76. அருள் ஒளி

**- C. சேகர், M.A., H.D.C**
**இணைப் பதிவாளர்.**

*இரண்டாவது முறையாக ஆழியார் சென்றேன். ''சுவாமிஜியை சில நிமிடங்கள் பார்க்க முடியுமா?'' நாம் சொல்லி முடிப்பதற்குள்,*

*''வாருங்கள் இப்போதே பார்க்கலாம்'' என்று நம்மை பிரார்த்தனை மண்டபத்திற்குள் அழைத்துச் சென்றனர். ஸ்வாமிஜியிடம் அறிமுகம் செய்து கொண்டேன். அந்தத் தெய்வீக முகத்தைப் பார்க்கும் போதே மெய்சிலிர்க்கும் உணர்வு ஏற்படுகிறது. வெண்ணிற உடையில், அறிவு ஒளி வீசும் காந்தப் பார்வையுமாக சுவாமிஜியைப் பார்த்தவுடன் என்ன காரணத்தினாலோ மனதில் உற்சாகப் பிரவாகம் ஏற்படும் அதிசயம். அப்படியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்ததும், ஸ்வாமிஜி தன் இரு கைகளையும் உயரே தூக்கி ஆசிர்வாதம் செய்தார். அடுத்து எனக்கு எதுவுமே பேசமுடியாத நிலை, மீண்டும் வணங்கியபடி அப்படியே வெளியே வந்தேன்.*

*1993-ம் வருடம் சுவாமிஜியை நான் முதன் முதலில் பார்த்த சம்பவம் வேகமாக நினைவுக்கு வந்தது.*

*'இறையுணர்வு, தியானம், சாந்தம் இவற்றுடன் எல்லோருக்கும் உதவி செய்து, உயிர் அறிவுடன் சீர்திருத்த வாழ்வு வாழுங்கள்'' என்ற சுவாமிஜியின் அறிவுரை பெற்றது இப்போது நினைவுக்கு வந்தது.*

*இந்தப் புண்ணிய பூமியில் எத்தனையோ மகான்கள், மகரிஷிகள், அவதார புருஷர்கள், தெய்வ மனிதர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களுடைய அருள் ஒளியானது எங்கும் பரவி, நிலைத்து நின்று மக்களைத் தூய்மைப்படுத்தி பரிபாலித்து வருகிறது. வேதாத்திரி மகரிஷியின் **அருள் ஒளியும்** என்றென்னைக்கும் இந்த நாட்டைப் புனிதப்படுத்திக் கொண்டே இருக்கும்.*

✣ ✣ ✣

# 77. மனிதநேயம் போற்றும் மகான்

- மு. கருணாநிதி,
கூடுதல் பதிவாளர்.

அறிவியல் விந்தைகளும் கண்டுபிடிப்புகளும் நிறைந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற **மாமுனிவர் வேதாத்திரி** அவர்கள். இவரது ஆன்மீகத் தேடல்கள் அற்புத அறிவியலையும் அலசிக் கொண்டு அல்லலுறும் மனித குலத்தை அமைதியோடும், மகிழ்ச்சியோடும் வாழ வைக்க வேண்டும் என்ற தாகத்தோடும் வேகத்தோடும் அயராது பாடுபட்டு உழைத்து சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களது தேடல் பொதுநல நோக்குடையது. தனி நலம் தவிர்த்துப் பொதுநலம் பூத்து ஆன்மநேயக் கனியை ஈந்து அனைவரும் உண்டு பயனுறும் வகையில் அமைக்கப்பட்ட உலக நல சேவா சங்கத்தை உருவாக்கிய நிறுவனர்.

வேதாத்திரி மகரிஷி அவர்களது படைப்புகள் யாவும் திருமூலர் தொடங்கி திருவள்ளுவர் கன்பூசியஸ் சிந்தனைகளைத் தொட்டு, சாக்ரட்டீஸ் - அரிஸ்டாட்டில் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு ஏசுபிரான், முகமது நபி, இராமலிங்க அடிகள், தாயுமானவ சுவாமிகள் போன்றோர்களது மனிதநேயம் வரை தமது பாதைகளாக்கி, சுவாமி விவேகானந்தர், காரல்மார்க்ஸ், பாரதியார், பாரதிதாசன், தந்தை பெரியார் போன்ற பகுத்தறிவாளர்களின் புரட்சிக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு இந்த நூற்றாண்டின் சிறந்த பெண்மணி **அன்னை தெரசா** போன்றவர்களின் இரக்க சிந்தனைகளையும் ஏற்று நடைமுறைப் படுத்தி, உலக சமாதான சேவை சங்கத்தின் மூலம், உலகிலுள்ள மக்கள் மீது மனித நேயம் மலரவும், மணம் பரப்பவும், மனித குலம் ஆன்ம நேயம் பெற்று உய்யவும் தொண்டாற்றி வருகின்றார்கள்.

✣ ✣ ✣

# 78. விஞ்ஞான மெய்ஞ்ஞானி

- திரு. D.R. கார்த்திகேயன்

நான் என் அரசுப் பொறுப்பிலிருந்து விடுபட்டவுடன் முதலில் சென்றது ஆழியாறுதான். அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்தேன்.

நான் பல இயக்கங்களில் ஈடுபட்டு இருந்தாலும் என்னை மிகவும் கவர்ந்தது இந்த மனவளக்கலை இயக்கம். இதனால் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் பயன்பெற்று இருக்கிறார்கள் என்பதை யான் அறிவேன்.

அருள் தந்தை அவர்கள் **Spiritual Scientist** அதாவது மெய்ஞ்ஞான விஞ்ஞானி என்று சொல்லலாம். மெய்ஞ்ஞானத்தில் அவர்கள் கண்ட உண்மைகளை ஆராய்ந்து எளிமைப்படுத்தி மக்களுக்கு ஏற்ற வகையில் விஞ்ஞானம் கலந்து வடிவமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள்.

மகரிஷி அவர்கள் வாழ்க்கைக் கலையைச் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள். நமது எண்ணங்களைப் பொறுத்தவாறுதான் நம் வாழ்க்கை அமைகிறது. நாம் கட்டுப்படுத்த முடியாத ஒன்று இந்த உலகத்தில் உள்ளது என்றால் அது எண்ணங்கள்தான். அதே போன்று ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், நான் யார் என்று உணர்தல் போன்ற நல்ல வாழ்க்கைக் கலையைக் கொடுத்துள்ளார்கள்.

நான் மன்றத்தில் உள்ள பல அன்பர்களைச் சந்திக்கும்போது இதனால் உங்களுக்கு என்ன நன்மை என்று கேட்கிறேன். அவர்கள் அனைவரும் இப்பயிற்சியினாலே குறிப்பாகச் சினம் தவிர்த்தலால் சினப்படாது இருப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொண்டோம். இதனால் மனதில் அமைதியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிறைந்து இருப்பதை உணர்கிறோம். உடல் ஆரோக்கியம் அதிகமாகியது. பணி செய்யும் இடத்தில் திறமையை வெளிப்படுத்தி வெற்றி கொள்ள முடிகிறது என்கிறார்கள். மகரிஷி அவர்கள் இந்த ஆன்மீக இயக்கத்தின் மூலம் ஒரு புரட்சியை ஏற்படுத்தி வருகிறார்.

✤ ✤ ✤

# 79. என் குருநாதர்

- **V.** குமார், **M.A., H.D.C.,**
**துணைப்பதிவாளர்.**

பால்ய வயதிலிருந்தே எனக்குள் ஒரு தேடல் இருந்து வந்தது. பாட்டியும், தாயாரும் பக்தியை இரத்தத்தில் ஊட்டி வளர்த்தார்கள். பல கோயில்களையும், ஆன்மீகவாதிகளையும், அறிஞர்களையும் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது.

திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண தபோவனமும், சுவாமி சித்பவானந்தர் நூல்களும் எனக்கு வேடந்தாங்கல். இருப்பினும் தியானம் முழுமையாகப் பழக வேண்டும் என்னை அறிய வேண்டும் என்ற தேடுதல் தொடர்ந்தது.

கும்பகோணத்தில் பணியாற்றியபோது நண்பர் ஒருவர் வலுக்கட்டாயமாக என்னை டவுன்ஹாலில் நடைபெற்ற ஒரு சொற்பொழிவுக்கு அழைத்துச் சென்றார். வித்தியாசமான முறையில் வெள்ளை உடையில் வெண்தாடி வேந்தர் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவரது கண்களில் அருள் பொழிந்து கொண்டிருந்தது. வார்த்தைகள் உள்ளே சென்று குடைந்தன.

மனம் அமைதியடைய ஆரம்பித்தது. தியானத்தை உணர முடிந்தது. அவரது ''நான் யார்'' என்ற தத்துவ விளக்கம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மனதைப் பதப்படுத்திக் கொண்டேன். உண்மை, ஆச்சரியம், அதிசயம், மகிழ்ச்சி, ரகசியம், தத்துவம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் இவையனைத்தும் ஒரே நேரத்தில் விடுவிக்கப்பட்டது. விளக்கப்பட்டது. மனம் ஆனந்தக் கூத்தாடியது.

குரு என்னைத் தேடி வந்தார். சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். சங்கல்பத்தில் கேட்ட உடல் நலத்தோடு, நீளாயுளோடு, நிறை செல்வத்தோடு உயர்புகழையும் எனக்கு வழங்கி வருகிறார்.

அரசில் உயர் அதிகாரியாகவும், எழுத்தாளராகவும், வாசகர்கள் மிகுந்த படைப்பாளியாகவும், பதிப்பாளராகவும், பத்திரிக்கையாள ராகவும் பரிணமிக்க அருள் பொழிந்து வருகிறார்.

வேதத்தின் கூற்றான **"ஆச்சார்யோ தேவா பவ"** அதாவது தெய்வமே குரு வடிவத்தில் என் குருநாதராக வந்துள்ளது என் பிறவிப் பயனாகும்.

✤ ✤ ✤

**துணை வேந்தர்கள்**

# 80. புத்துலகம் படைத்தவர்

**- அருட்தந்தை ச. இன்னாசிமுத்து, சே.ச.**

''மதமும் மனிதனும்'' என்ற தலைப்பில் உலக நலத் தொண்டர் வேதாத்திரி சுவாமிகள் எழுதியுள்ள இந்நூல் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டுள்ளது. அவரை நான் மிகவும் பாராட்டுகிறேன். மிக

எளிய முறையில் அனைவரும் புரிந்துகொள்ளும் நடையில் உலக மக்களின் வாழ்க்கை வளங்களைப் பாதுகாத்து, பிரிவினை மாய்த்து, பலரும் கூடிப் பகிர்ந்துண்டு வாழ்ந்து, நீதியின்படி நடந்து, மதத்தின் பெயரால் ஒருவரையொருவர் அழித்துக் கொள்ளாமல், இறைவனின் பெயரால் ஒருங்கிணைந்து வாழ்ந்து புத்துலகம் படைக்க இந்நூலின் வழியாக நம்மை அழைக்கின்றார் வேதாத்திரி சுவாமிகள்.

உலக மக்களின் வாழ்க்கை நலத்தை மையமாகக் கொண்டது தான் இந்நூல். மனித குலம் மன நிறைவோடும், அமைதியோடும் வாழ வேண்டும்; அதற்கேற்றவாறு மனித குலம் ஒன்றுபட்டு சிந்தித்து நல்லதோர் சீர்திருத்த முறையை உருவாக்கி அதன்படி வாழ வேண்டும் என்று இந்நூல் நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

இயற்கையோடு இணைந்த வாழ்வுதான் சிறந்த வாழ்வாக இருக்க முடியும். தன் முனைப்போடு மனிதன் வாழ முற்படும் பொழுது, சீரிய பாதையிலிருந்து விலகி, அறநெறி வாழ்விலிருந்து அகன்று சென்று, இறை அனுபவத்திலிருந்து விடுபட்டு, இருளில் சிக்கித் தவிக்கின்றான். இப்படிப்பட்ட வாழ்விலிருந்து மனிதனை நெறிப் படுத்த உதித்ததுதான் மதம். மதம் என்பது நல்வாழ்வு வாழ வகுக்கப் பட்ட ஒரு பாதை. அறநெறி வழி நடந்து செல்ல உதவும் கருவி.

அனைத்து மதங்களும் கூறுவது ஒன்றுதான். இறை சார்ந்த அறநெறி வாழ்வு. எனவே மதத்தின் பெயரால் பிரிவினையையும், வெறுப்பையும் வளர்க்காமல், மக்களிடையே ஒற்றுமையையும், அன்பையும் பரப்ப வேண்டும்.

உலகில் உள்ள மதத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, ஒரே மதம், ஒரே கடவுள் என்ற நியதியின்படி கலந்தாலோசித்து ஆய்வு செய்து மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், அன்போடும் வாழ நல்லதொரு முடிவு எடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார்.

இதே போன்று ''அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துக் காக்கும் உலகப் பேரரசு வேண்டும்; மனித குல நன்மையைப் பாதுகாக்கின்ற அறநெறி சார்ந்த ஒரே ஆட்சி முறை வேண்டும்; கட்சி ஆட்சி முறையை ஒழித்து மனித உரிமை சாசனத்தின்படி ஆட்சி முறை அமைத்திட வேண்டும்'' என்று அறைகூவல் விடுகின்றார்.

✣ ✣ ✣

# 81. வரலாற்றுப் புருஷர்

- முனைவர் சி. தங்கமுத்து,
துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

தலைமைப் பண்புகளில் மிகச் சிறந்த பண்பு எது? தலைவன் இல்லாதபோதும் ஓர் இயக்கம் கொஞ்சம் கூட தொய்வு இல்லாமல் மிக வெற்றிகரமாக தொடர்ந்து, தலைவன் இருந்த போது இருந்ததை விட மிகச் சிறப்பாக, வீறும், வெற்றி நடையோடும் தொடர்ந்தால் அது மிகச் சிறந்த தலைமைப் பண்பு.

வேதாத்திரி மகரிஷி இருந்தபோது இயக்கம் இருந்ததைவிட இன்று மிகப்பெரிய மாற்றங்களோடு வெற்றிகளோடு, அடுத்த தலைவர் யார் என்று அவர் அடையாளம் காட்டாத போதும்கூட, அடுத்த தலைவர் யார் என்று இங்கு யாரும் நினைக்காமல் - எல்லோருமே தலைவர்கள் என்ற ஓர் உணர்வை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார் அல்லவா? அதுதான் மிகப்பெரிய தலைமைப் பண்பு.

இன்று மகரிஷி அவர்கள் இருக்கிறார்கள் என்றோ, அவர்களிடம் ஆசி பெறுவதால் நமக்கு ஆஸ்தி பெருகும் என்றோ யாரும் இந்த இயக்கத்தில் சேர்ந்தார் இல்லை.

பொதுவாக இம்மாதிரியாக அடிகளார் பலர் ஆரம்பித்த இயக்கங்கள் பல. ஆனால் எனக்குத் தெரியும். அப்படி ஆரம்பித்த அந்த இயக்கங்களில் சேர்ந்தவர்கள் எதை எதையோ எதிர்பார்த்து ஏமாற்றமே பெற்றனர்.

ஆனால், மகரிஷியவர்கள் தம்மிடம் ஆசி பெற்றால் நமக்குத் துன்பம் குறையும் என்றோ, கொஞ்சம் செல்வம் பெருகும் என்றோ, நாம் நினைத்தது நடக்கும் என்றோ, இப்படி எந்தவித மாந்திரீகத்தையும், மாயத்தையும் நம்முன் விளைவிக்காமல், வெறும் கருத்தினால் அறிவுப்பூர்வமாக நமது நெஞ்சத்தைத் தொட்டாரே வேதாத்திரி மகரிஷி அவர்கள். அவர் மிகப்பெரிய வரலாற்றுப் புருஷர் என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும்.

அறிவுக்கு ஒரு திருக்கோயில். உலகெங்கும் நான் தேடிப் பார்த்தேன். கோயிலும் அறிவும் முரண்பட்டது என்று நான் நீண்ட நாட்களாக நினைத்துக் கொண்டிருந்தேன். இவையிரண்டும் ஒன்றாக முடியும் என்று காண்பித்த முதல் சிந்தனையாளர் வேதாத்திரி மகரிஷி அவர்கள்தான்.

# 82. நம்பிக்கை நட்சத்திரம்

- டாக்டர் ந. மார்க்கண்டன்,
முன்னாள் துணைவேந்தர்,
காந்திகிராம் நிகர்நிலைப் பல்கலைக் கழகம்.

புத்தர், அருள் ஜோதி வள்ளல் ராமலிங்க சுவாமிகள், காந்தியடிகள் போன்றோர் அவதரித்து உலகுக்கு வழிகாட்டிய இப்புண்ணிய பூமியில் அவர்கள் வழியில் இன்று நமக்கு வழிகாட்டி வருகிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

மகரிஷி அவர்களின் இந்த ''அணு விஷம்'' என்னும் நாடக வடிவில் அமைந்த நூல், எனக்குத் தெரிந்த வரையில் அணு சக்தி குறித்து தமிழில் வெளிவந்த முதல் நூல் ஆகும்.

அணு உலைகளை அமைப்பதற்கும், அணு குண்டுகளைத் தயாரிப்பதற்கும் இடையில் உள்ள உறவை தெளிவுபடுத்தும் நூல் இது. இந்நூல் அணு உலைகளாலும், அணுயுத்தத்தினாலும் மனித குலத்திற்கு ஏற்படும் அதீத விளைவுகளை முன் வைக்கிறது. அணு யுத்தம் ஒன்று வந்தால் மானிட குலம் எவ்வாறு பாதிக்கப்படும் என்பது விளக்கமாகக் கூறப்படுகிறது.

நாடுகளுக்கிடையில் யுத்தம் நடக்கக் கூடாது என்பதை முன் வைத்து அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதற்கு மிகச் சிறந்த திட்டமொன்றை மகரிஷி அவர்கள் இந்நூலின் வாயிலாக உலக நாடுகளின் அரசுகளுக்கு அளிக்கின்றார்கள். மனிதனின் வாழ்வையும், அவரின் அகம் மற்றும் புறத்தையும் செழுமையாக்கும் யுக்திகளை முன் வைக்கும் தத்துவ நூல் இது.

விஞ்ஞான உலகுக்கு அணுசக்தி சூத்திரத்தை அளித்த அறிவியல் மேதை **ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்** 1947-ம் ஆண்டில் பின்வருமாறு எழுதினார்.

''அணுசக்தி என்பதை வெளிக் கொண்டு வந்திருப்பதன் மூலம் கற்கால வரலாற்றில் கண்டுபிடிக்கப்பட்ட நெருப்புக்கு இணையான தொரு புரட்சிகர சக்தியை நம் சந்ததியினர் இந்த பூமிக்கு அளித்திருக்கின்றனர். இது பிரபஞ்சத்தின் அடிப்படை சக்தி. இதைக் குறுகிய தேசியவாத கருத்தாக்கங்களுக்குள் அடைத்துவிட முடியாது. இது குறித்த மக்களின் புரிதலும், கோரிக்கைகளுமே இந்தச் சக்தியை

கட்டுக்குள் வைக்க முடியும் என்பதில் ரகசியம் எதுவும் இருக்க முடியாது. இதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள வேறு மார்க்கம் இல்லை என்பதையும் நான் இங்கு கூறியே ஆக வேண்டும்.

அணுசக்தி குறித்த எளிமையான கருத்துக்களையும் குறித்த அறிதலை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய தப்ப முடியாத கட்டாயத்தில் விஞ்ஞானிகளான நாம் இருக்கிறோம் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. அணுசக்தி குறித்த அறிவைப் பெற்ற மக்கள் கூட்டத்தால் வாழ்வை நோக்கி மட்டுமே செயல்பட முடியாது என்பதே நம் நம்பிக்கை. இந்த நம்பிக்கையைச் செயல் படுத்துவதில்தான் நமது பாதுகாப்பு அடங்கியிருக்கிறது.''

யுத்தமும், பயங்கரவாதமும், அணு ஆயுதங்களைப் பயன்படுத்து வோம் என்ற அச்சுறுத்தலும் உலக மக்களையெல்லாம் கவலையில் ஆழ்த்தியிருக்கும் இச்சூழலில் மகரிஷி அவர்களின் வாழ்வும் வாக்கும் நமக்கெல்லாம் நம்பிக்கையூட்டுகிறது.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

✣ ✣ ✣

## 83. ஞானத் தந்தை

- முனைவர். கே. குழந்தைவேல், வேந்தர்,
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்.

புத்தர் வாழ்ந்த புண்ணிய பூமியைத் தரிசிக்க வந்த யாவூயாகான், யுவான் சுவாங் என்ற சீன யாத்திரிகர்கள் நாடு திரும்பிய பிறகு ''இந்தியா வளம் மிக்க அமைதியான, அருமையான கலாச்சாரம் மிக்க நாடு அங்கே பயமில்லாமல் வாழலாம்'' என்று வரலாற்றில் பொறித்தனர்.

ஆனால் இன்று பத்திரிக்கைகளை எடுத்தால் வருகின்ற செய்திகளைப் பார்த்தால் அக்குற்றங்களை, படிக்காத பாமரர் செய்யவில்லை. படித்த மக்கள் செய்கிறான். இதுவா வாழ்வியல்? இதுவா நாகரிகம்?

இது மாற வேண்டும். இதற்கெனவே அவதரித்த அருள் தந்தை யவர்கள் அல்லும் பகலும் தம் சிந்தனையைச் செலுத்தி வையகம் வளமாக, உண்மையாக நாகரிகம் அடைந்து வாழ வழிமுறைகள் வேண்டித் திட்டம் வகுத்துள்ளார். உடல், மனம், ஆன்மா மூன்றும் சேர்ந்தவன் தான் மனிதன். உடல் நன்றாக இருக்க மனம் நன்றாக இருக்கும்.

மனம் நன்றாக இருக்க வேண்டுமானால், மனத்தெளிவு இருக்க வேண்டும் என்பார்கள் அருள் தந்தையவர்கள். அப்பொழுதுதான் ஆன்மா பரிசுத்தமாக இருக்கும்.

எனவேதான் உடற்பயிற்சிகளையும், காயகல்ப பயிற்சியையும், அகநோக்குப் பயிற்சிகளையும், தவப்பயிற்சிகளையும் அளித்துள்ளார்கள். அறிவார்ந்த ஆள்வினை நன்றாக இருந்தால் அனைவரும் நலமாக வாழலாம் என்று ஞாலத்திற்கே வழி காட்டுகிறார்கள் ஞானத் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

✣ ✣ ✣

# 84. ஞான ஒளி விளக்கு

- முனைவர் இ. சுந்தரமூர்த்தி,
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தத்துவத்திலும் அறிவியலிலும் சிறந்து விளங்கும் அருள் தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகம் எங்கும் தம் அருட் சிந்தனைகளை வாரி வழங்கி மக்கள் பயனுற வாழ வேண்டும் என்பதில் பெரிதும் ஈடுபாடு உடையவர்களாக விளங்குகின்றார்.

இயற்கையின் ஆற்றலையும் இறைநெறியின் ஆற்றலையும் இணைத்துத் தம் ஆன்மீக அறிவியல் சிந்தனைகள் மூலம் அரிய கருத்துக் களை வழங்கி வருகிறார்கள்.

மானுடம் வென்று, மனித நேயம் மக்கட்கு உரியதாகி, மக்கள் அனைவரும் மதிப்புறு வாழ்க்கையைப் பெறுவதற்கு அருள் தந்தையின் பதினான்கு திட்டங்கள் வாழ்வின் படிமுறை வளர்ச்சி நிலைகள் எனலாம். இப்படிகள் நம்மை உயர்ந்த படி நிலைக்கு இட்டுச் செல்லும்.

உலக சமுதாய வாழ்க்கை நெறி உலகப் பொது அருள் நெறி சார்ந்த சமயத்தை உண்டாக்கும்.

உலக நலம் பேணும் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷியின் உயர் சிந்தனைகள் நம் உள்ளத்தில் தூய்மை கூட்டும். மானுடம் மேன்மேலும் வளரட்டும்.

அருள்தந்தையின் நூற்றாண்டு வாழ் நெறி இன்றைய உலகச் சூழலுக்கு ஏற்ற உயர்ந்த சிந்தனைகள். அவர்தம் வழிநின்று உலக மானுட சமுதாயத்தை உருவாக்குவோம்.

# 85. புரட்சிகர தத்துவஞானி

-Dr.L.B.வெங்கட்ரங்கன்,துணைவேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம்.

*பிரபஞ்ச சரித்திரமும் உயிரின வரலாறும் என்ற மகரிஷியின் புத்தகத்தின் முதல் பாகத்தில் இறை என்பது பேராற்றல், பேரறிவு, வற்றாயிருப்பு, காலம் என நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே என்பது தெளிவுடனும், எளிமையாகவும், விஞ்ஞானப் பூர்வமாகவும் எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது. வானியல் என்ற பாகத்தில் கோள்கள் உருவாகும் விதம், காந்தம் என்ற அலை, வான்காந்தம், காந்தக் கடல் இதற்கு மூலமாக உள்ளது இறைநிலையே என்று அனைவருக்கும் மகரிஷி புரிய வைத்துள்ளார்கள்.*

*மூன்றாம் பகுதியில் உயிரினங்களின் தோற்றம் பற்றி ஆராய்ந்து கூறியுள்ளார். அணுக்களின் கூட்டுதான், எல்லாப் பருப்பொருள் தோற்றங்கள் என்றும், ஒரு சிற்றுயிர் தோன்றியது முதல் படிப்படியாக உடல் மாற்றம் பெற்று, பல கோடி ஜீவ இனங்களாக இறையே தன்மாற்றம் அடைந் திருப்பதை கவி மூலமாகவும் விளக்கியுள்ளார்.*

*மனித இனப்பண்பாடு என்ற தலைப்பில் அமைந்துள்ள அரசியல், பொருளாதாரம், உலகம் முழுவதும் ஒருங்கிணைந்த வாழ்க்கை முறை, பல மதங்களும் ஒன்றிணைந்த ஒரே உலக மதத்தை உருவாக்க வழிமுறைகள், ஒரே ஆட்சி, கல்வித்துறையில் சீர்திருத்தங்கள், வேலை யின்மை எனும் வறுமை போக்க வழிகள், பெண்மைக்கு மதிப்பளிப் போம் போன்ற பலவாறான கருத்துக்களை படிக்கும்போது மகரிஷி* **புரட்சிகர தத்துவஞானியாக** *வெளிப்படுகிறார்.*

✣ ✣ ✣

# 86. மெய்ஞ்ஞான போதகர்

- பேராசிரியர்.டாக்டர். சி.வி. பிரம்மானந்தம்,
துணைவேந்தர்,
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்
பல்கலைக் கழகம், சென்னை.

*வாழ்க வையகம்! என்னும் தாரக மந்திரத்தை உலக மக்கள் அனைவரும் உச்சரிக்கச் செய்த உத்தமர்! வையகத்தோர் அனைவரும்*

உய்வதற்குரிய வழிமுறைகளை வகுத்துச் சொன்ன தத்துவ வித்தகர்! விஞ்ஞானத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் இணைத்துக் கூறுவதில் தனக்கெனத் தனியொரு இடத்தைப் பிடித்துள்ள **மெய்ஞ்ஞான போதகர்!** உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் என்றும் நின்றொளிரும் **வேத விற்பன்னர்!** பாமரர் முதல் ஞானிகள் வரை அனைவரும் ஏற்றிப் போற்றும் **ஞானச் சுடர்!** வாழும்போதே வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் **கருணை வள்ளல்!** இத்தனைச் சிறப்புகளையும் ஒருங்கே பெற்றவர்தான் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள்! அவர்தம் ஆய்விலும், தோய்விலும், ஓய்விலாத் தேடலிலும் கிடைத்த நன்முத்துதான் 'கடவுளும் கருமையமும்' என்னும் அரிய இந்நூல்!

எளிய நடை; இனிய தமிழ்! புதிய பொருள்; அரிய கருத்து! அனைவரையும் ஈர்த்து இசைவிக்கும் தெளிந்த நீரோடை! கற்பனை வளமும், கருத்துச் செறிவும் அற்புதமாக இழைந்தோடும் ஞானப் பேழை! மானுடத்தின் மகத்துவத்தைப் பறைசாற்றும் சொல்லோவியச் சோலை! உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவையும், உயிர்ப்புமிக்க உயிரோவியம்! தேடுதல், தெளிதல், வளமோடு வாழ்தல் ஆகிய மூன்று பகுதிகளில் 'கடவுளும் கருமையமும்' என்னும் இந்நூலில் அனைத்து உண்மைப் பொருள் களையும் காரண காரியத்துடன், சிந்தையைச் சிலிர்க்கச் செய்யும் வண்ணம் எழுதியுள்ளார் தத்துவஞானி.

உலகத்தில் சான்றோர்கள் குறிப்பாக வாழும்போதே வரலாறு படைத்துக் கொண்டு, மனித குலம் மாண்புறுவதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி போன்ற ஆன்றவித்த கொள்கைச் சான்றோர்களின் அறிவுரைப் படி வல்லுநர்களும், பல்துறை அறிஞர்களும், கல்வியாளர்களும், மதத் தலைவர்களும், சமூக நலத்தொண்டர்களும், அனைத்து மக்களும் உணர்ந்து செயல்படுத்தினால் நம் அனைவரின் அறிவும் விரிவடையும்! வளம் பெருகும்! மகிழ்ச்சி பொங்கும்! அனைத்துயிர்களும் நலமும் வளமும் பெற்றோங்கித் திகழும்! உலகம் உவந்து உய்யும்!

✣ ✣ ✣

# 87. அறிவியல் பெட்டகம்

- முனைவர். துரை. விசுவநாதன்,
துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம்.

அருள்தந்தையின் அருளுரையை நாம் கேட்கும் / படிக்கும் சமயம் நமக்குத் தோன்றுவது எல்லாம், உலகின் மிகப்பெரிய

தத்துவக் கோட்பாடுகளை, யார் மனதும் புண்படாமல் எளிய பதங்கள் மற்றும் சொல் அமைப்பைக் கொண்டு அருள்தந்தை தனது கொள்கை களைத் தெளிவாகவும், சொல்ல வேண்டிய கருத்துக்களை புதிய அணுகு முறையோடும், உரைநடையிலும், கவிதை நடையிலும், சொல்லியிருக்கும் முறை உலகத் தமிழ் மக்களை வியப்பில் ஆழ்த்தும்.

வரலாறு, மொழி, கலாச்சாரம், பூகோளம் இவைகள் வந்து கோடுகள் கிழித்திராவிட்டால் நாடுகள் இல்லை. 'யாதும் ஊரே! யாவரும் கேளீர்!'' என்றவனைத் தோண்டியெடுத்துத் துடைத்து மாலை போட வேண்டும். அருள்தந்தை அறிவியல் சார்ந்த மெய்ஞ்ஞான கருத்துக் களைத் தனிமனிதனை மேம்படுத்தும் உயரிய தத்துவங்கள் ஆகவும் உலக சமுதாயத்தைக் கருத்தில் கொண்டு, பிரபஞ்சங்கள் அமைதியுறவும், தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் உள்ள இடைவெளியைப் பெரு மளவுக்குக் குறைத்து அவர் வழங்கி உள்ள சிந்தனைகள் அருள் தந்தையின் ஏழாவது அறிவும் மூன்றாவதாகச் செயல்படும் ஞானக்கண் கொண்டவர்களால் மட்டுமே முடியும்.

மெய்ஞ்ஞான அறிவுகொண்ட அருள்தந்தை மிகத் துல்லியமாக ''பேரறிஞர்களுடைய அறிவின் தொண்டுதான் இன்று உலகில் நாம் மக்களிடம் காணும் அறிவின் ஒளியாகும்'' என்னும் தீர்க்கத்தை, அதே சமயம் அவரின் அவையடக்கத்தையும் கண்டு எண்ணற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கண்ணாடியைக் காயப்படுத்தாத பிம்பம் மாதிரி தன்னுடைய மெய்யாற்றல் சிந்தனைகளை அவர் சொல் ஓவியமாகத் தரும் காட்சி ஐம்புலன்களையும் நெகிழ வைக்கும் இடமாக நான் கருதுகின்றேன்.

ஏமாற்றமில்லாமல் பயன் தரக்கூடியதுதான். செயல், விளைவு, நீதி என்னும் உயரிய கருத்தை உலக மக்களுக்குப் பயன்தரும் வகையில் கையாண்டுள்ளார்.

தன்னுடைய தன்மாற்ற சிறப்புகளை ஒரு சரித்திரமாக்கி, மனிதகுலம் மேம்படவும், மனித நேயத்திற்கு விளக்கமாகவும், அறிவியல் வல்லுநர்களின் சிந்தனைக்கு உரமிட்டும், சமூக, பொருளாதார, அறிவியல் மேதைகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்.

வாழ்க வளமுடன்!

✣ ✣ ✣

# 88. சித்தர் வேதாத்திரி மகரிஷி

- முனைவர் மு. தங்கராசு,
துணைவேந்தர்,
பெரியார் பல்கலைக் கழகம்.

நம் நாட்டில் தோன்றியவர்தான் உலகப் பொது மறை தந்த திருவள்ளுவர். நம் நாட்டில் தோன்றியவர்தான் உலகத்திற்கு ஒரே கடவுள் என்று சொன்ன திருமூலர். இவ்வழியில் தோன்றியவர் தான் சித்தர் வேதாத்திரி மகரிஷி.

மகரிஷி அவர்கள் வலியுறுத்துவது தேர்த்திருவிழா போன்ற இறைவழிபாடு ஆகாது. ஆடம்பரச் செலவு, ஆடம்பர விழாக்களை கைவிடுங்கள் என்பது. அவர் சொல்லியதில் எனக்கு மிகவும் பிடித்தது (1) தனிமனித அமைதி, (2) சமுதாய அமைதி, (3) உலக அமைதி. எவ்வளவு எளிமையாக உள்ளது.

பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சொல்வதுபோல், உயர் நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி என்று சொல்வதுபோல் உள்ளது.

பரபரப்பான இந்த உலகத்தில் அமைதியாக வாழ வழி சொல்பவர்கள் மிகமிகக் குறைவு. அதிலும் ஆதாயம் தேடுபவர்கள் தான் அதிகம். ஆனால் மகரிஷி அவர்கள் திசை மாறிப் போகாதீர்கள். உங்களை அமைதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்றும், அதற்கு மனதை ஓர்நிலைப் படுத்த வழி தியானம் என்ற எளியமுறையையும் சொல்லியுள்ளார்.

இமயலைக்குப் போங்கள். காட்டிலும், மேட்டிலும், கல் மீதும், முள் மீதும் தவம் இருங்கள் என்று சொல்லவில்லை; ஐயா அமைதியாக இருங்கள் என்றுதானே சொல்கிறார்.

நீ அமைதியாக வாழக் கற்றுக் கொண்டால்தான் வீடு, ஊர், உலகம் அமைதியாக இருக்கும் என்பது உண்மை.

வாழ்க வளமுடன்!

✣ ✣ ✣

## 89. சூத்திரம் தந்த சூத்திரவாதி

- முனைவர். திருவாசகம், துணைவேந்தர்,
பாரதியார் பல்கலைக் கழகம்.

நாங்கள் யாரையும் தேடித்தேடி கல்வி கொடுக்க முடியவில்லை. உட்கார்ந்திருக்கிறோம். ஆனால், டாக்டர் அம்பேத்கார் கண்ட கனவு, அண்ணல் மகாத்மா காந்தி கண்ட கனவு, சுவாமி விவேகானந்தர் கண்ட கனவு, மரியாதைக்குரிய நம்முடைய வேதாத்திரி மகரிஷி கண்ட கனவு அத்தனையும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து ''நீ ஏழையா, நீ எளியவனா, நீ பாட்டாளியா, நீ பாமரனா, உன் வீடு தேடிவந்து படிப்புத் தருகிறோம்'' என்று சொன்ன ஒரே நிறுவனம் வேதாத்திரி மகரிஷியின் உலக சமுதாய சேவா சங்கம் மட்டுமே.

நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும், மனதுக்கும் துன்பம் தரமாட்டேன்; துன்பப்படுவோர்க்கு என்னால் முடிந்த உதவி களைச் செய்வேன். மகரிஷியின் இந்த இரண்டடி சூத்திரம் மெய் சிலிர்க்க வைக்கிறது.

இந்த இரண்டு அடியை எவரொருவர் தன்னுடைய சூத்திரமாகக் கொள்கின்றனரோ? அவர் வாழ்க்கையில் நிம்மதியாக வாழ்வார், பிறரையும் நிம்மதியாக வாழ வைப்பார்.

இக்கருத்தையே மகரிஷியின் உலக சமுதாய சேவா சங்கம் இன்று கல்வி மூலமாக பட்டயங்களாக, பட்டங்களாகக் கொடுக்கிறார்கள். சமுதாயம் இப்போதாவது விழித்துக் கொண்டது. இது நல்ல அறிகுறி

✣ ✣ ✣

## 90. செப்பரிய சிந்தனையாளர்

- முனைவர். ய. மணிகண்டன்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

வாழ்க வையகம், வாழ்க வளமுடன். வேதாத்திரி என்ற மா மனிதனைத் தன்னகத்தே இருத்தி வேதாத்திரியத்தை உலகுக்களித்த ஆழியாறு மண்ணிற்கு தலை வணங்குகிறேன். ஆழியாறில் ஞான ஆழியாக மகரிஷி இருக்கிறார். அவரில் சங்கமிக்கும் ஆறுகளாய் நாம் இருக்கிறோம்.

வாழையடி வாழையாக வந்த அருளாளர்களில் மரபிற்கு அணி சேர்க்கும் பெரியோர் வேதாத்திரி மகரிஷி. தமிழ் மண்ணில் மலர்ந்த

ஞானியர்கள் வரிசையில் நம் காலதில் தோன்றித் துலங்கும் - ஞாலத் தையே துலங்க வைக்கும் ஞானப் பெருந்தகை மகரிஷி அவர்கள். மானுடரின் சிந்தனையை மேம்படுத்தி உயர்த்தும் மகத்தான திருப் பணியில் ஈடுபட்ட மகரிஷியின் எண்ணங்கள், ஞானம் பொழியும் நறுந்தமிழ்ப் பாடல்களாக வெளிப்பட்டுள்ளன. செப்பரிய சிந்தனை யாளராக மட்டுமின்றி சிறந்த பாவலராகவும் திகழ்ந்தவர் அவர்.

மாண்புகள் இழந்த மனிதனை மீட்டெடுத்து உயர்ந்த மனிதனாக்க வேண்டியதன் தேவையையும் அதற்கான வழியாக மனவளக்கலைப் பயிற்சியையும் காட்டுகிறார்.

புத்தரும், இயேசுவும், நபிகளும், சாக்ரட்டீசும் நில உலக மக்களுக்கு எடுத்துச் சொன்ன அத்தனையும் சேர்த்து ஒரு தொகுப் பாய்ச் செய்தால் எல்லாம் ஒன்றாகவே இருக்கும் என்று அவர் பகர்ந்தது போலவே அவரின் சிந்தனைகளும் பெரியோரை அடியொற்றுகின்றன.

எண்ணிறந்த மதங்களுண்டு மனிதருக்கு.

எனினும் தெய்வம் என்பதொன்றே ஆகும்.

எனும் மகரிஷியின் வாக்கு, இராமகிருஷ்ணரின் வாக்கையும், மகாகவி பாரதியின் ஆத்திச்சூடி இளம் பிறையணிந்து என்ற கடவுள் வாழ்த்துப் பாடலையும் நினைவூட்டுகிறது.

''தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே'' என்னும் பாரதிதாசப் பாட்டுப்போக்கும் ''அனைத்துலக மக்களும் ஓர் குடும்பமாக'' என்னும் மகரிஷியின் பாட்டுப் போக்கும் ஒரே திசையில் நடைபோடக் காண்கிறோம்.

ஒரே மாதிரியான சிந்தனைகள் மகத்தானவர்களுக்கே கைவரக் கூடியவை.

✣ ✣ ✣

# 91. படைப்பாளி

- சு. செல்வகுமாரன்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

படைப்பு என்பது சமூகத்தின் உயிர்நாடி. அது கடந்தகால சமூகத்தை வெளிப்படுத்துவதோடு, எதிர்காலச் சமூக அமைவு குறித்த அவசியத் தையும் உணர்த்துகின்றது. அது படைப்பாளனின் மன உணர்வு. அனுபவத்தைப் பொறுத்ததாக அமைகின்றது. ஓர் நல்ல படைப் பாளன் **சமூக நோய் நீக்கும் மருத்துவர்** எனலாம்.

சுவாமி விவேகானந்தருக்குப் பிறகு சமூக முன்னேற்றம் குறித்த கருத்தை எல்லா நிலைகளிலும் மிகுந்த வலிமையோடு முன்வைத்துள்ள ஒரு துறவி இவராகவே இருக்க முடியும். வேதாத்திரி ஒரு மகரிஷியல்ல, மாறாக ஒரு சமூகப் புரட்சியாளர் என்பதே உண்மையாக இருக்க முடியும்.

இவரது படைப்பின் ஒவ்வொரு வரியும் சமூக உருவாக்கம் குறித்தே அலசுகின்றது. சமூகம் எனும் மாமண்டபத்தைத் தூக்கி நிறுத்தியுள்ள தனிமனிதன் குறித்து விவரிக்கின்றது. அவனது மனம், உடல் உருவாக்கம் பற்றித் தத்துவார்த்தமாக பேசுகின்றது.

சமூகத்தின் மூலக் கூறுகளான தனிமனிதன், பெண், தொழிலாளி, ஆட்சி, மதம், சடங்கு, பொருளாதாரம், ஆன்மீகம் என எல்லா நிலைகளிலும் புகுந்து, அங்கு குவிந்து கிடக்கின்ற குப்பைகளை அகற்றி, தம் புதிய புரட்சிக் கருத்துக்களால் சமூக நறுமணம் கமழ விழைகின்றார்.

✣ ✣ ✣

# 92. ஞானக் கலவை

- முனைவர். க. திலகவதி,
தமிழ்ப்பல்கலைக்கழகம்.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகில் உள்ள மானுட சமுதாயம் நலமாகவும், வளமாகவும் வாழ வேண்டும் என்பதற்காக 'வாழ்க வளமுடன்' என்னும் தத்துவத்தையும், ஊர்தோறும் 'மனவளக்கலை' மன்றங்களையும், 'உலக சமுதாய சேவா சங்கத்தையும்' அமைத்து உலக மக்களின் மன அமைதிக்கு வழிகாட்டி வருகிறார்.

ஆதிசங்கரர், திருமூலர், வள்ளுவர், வள்ளலார், தாயுமானவர், சித்தர்கள் கண்ட தத்துவத்தின் விளக்கமாக இவருடைய இறையியல் சிந்தனைகள் பரிணமிக்கின்றன.

**நியூட்டன், ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், ஸ்டீபன் ஹாக்கின்ஸ்** போன்ற விஞ்ஞானிகளின் தெளிவு பெற முடியாத சில விஞ்ஞானக் கோட்பாடுகளுக்குத் தீர்வு காணும் விஞ்ஞான விளக்கமாகவும் இவருடைய கோட்பாடுகள் அமைந்துள்ளன. இவருடைய இறையியல் சிந்தனைகள் மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் கலந்த ஞானக் கலவை என்றால் அது மிகையாகாது.

சிறுவயதிலிருந்தே மகரிஷி அவர்களுக்குக் கடவுள் யார், உயிர் என்றால் என்ன? என்ற கேள்வி எழுந்தது. வேதாத்திரி இக்கருத்தினை,

'எனது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலில் மிகத் தெளிவாகக் குறிப்பிடுவார். அக்கேள்விக்கான விடைகளைக் கண்டு தானும் உணர்ந்து உலகிற்கும் உணர்த்தி வருகிறார். எளிய முறை உடற்பயிற்சி, குண்டலினியோகம், தளராத தற்சோதனை, அறுகுணச் சீரமைப்பு, காயகல்பயோகம் போன்ற வாழ்க்கை நெறிமுறைகளைக் கற்பித்து உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் மேலோங்கி வாழ வாழ்த்துகின்றார், வழிகாட்டுகின்றார்.

பொது நோக்குப் பார்வையோடு இறையியல் கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார். அத்வைதம் விசிட்டாத் துவைதம், துவைதம் போல இவருடைய சித்தாந்தம் வேதாத்திரியமாக உலகெங்கும் பரவி ஒளிகாட்டும்.

✣ ✣ ✣

# 93. கல்வி சீர்திருத்தாளர்

- முனைவர். தி. பெரியசாமி,
பெரியார் பல்கலைக்கழகம்.

மனிதகுலம் நிறைவோடும் அமைதியோடும் வாழவேண்டும் எனக் கருதி ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல மகான்களும் ஞானிகளும் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றித் தன்னாட்டை வளமையாக்கி வருகின்றார்கள்.

அந்த வகையில் தமிழகத்தில் தோன்றித் தற்பொழுது நம்மிடையே வாழ்ந்துவரும் மகான் வேதாத்திரி மகரிஷி அவர்கள். இவர், தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர். இன்முகம், எளிமை இரண்டையும் தம் இரு கண்களாகக் கருதுபவர்.

ஆழியாறு அறிவுத் திருக்கோயில் அமைத்து அருள் தொண்டாற்றி வருபவர். உலக ஒற்றுமையும், எல்லா நாட்டு மக்களின் வளமான வாழ்வுமே மிக விரும்பும் அருட்தந்தை மகரிஷி அவர்கள் மனித உடல் நலனுக்கும் மன பலத்திற்கும், ஆன்மீக வளத்திற்கும் என்று பல அறிவுரைகள் கூறியுள்ளார்.

உலகெங்கும் பல கல்வியாளர்கள் கல்வி பற்றிப் பல தத்துவங் களை உணர்த்தியுள்ளனர். கல்வியாளர் ரூசோ அவர்கள் இயற்கை மனிதனுக்குச் சிறந்த ஆசான் என்கிறார். மகரிஷி அவர்கள் பிரபஞ்சம் ஒரு பள்ளிக்கூடம் என்பார்.

# 94. அற்புதமனிதர்

- முனைவர். சு. வெங்கட்ராமன்,
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

இந்த பாரதபூமி புண்ணியபூமி, சமுதாயத்திலே சிக்கல்களும், சீர்கேடுகளும் மிகும் காலகட்டங்களிலெல்லாம் பூமியில் ஒவ்வொரு மகான் தோன்றி இயற்கை நிலையில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்தியுள்ளார். அது போன்று இன்றைய நாளில் அந்த வரிசையிலே தோன்றி **இவ்வுலகை உய்விக்க வழிகாட்ட வந்த மகான் வேதாத்திரி மகரிஷி அவர்கள்.** வேதாத்திரியம் வாழ்க்கை நெறியாக சமய நெறியாக உள்ளது.

மகரிஷி அவர்கள் காட்டும் சமய சிந்தனை என்பது தமிழ் மரபிற்கு புதியது அன்று. ஆனால் அதனை இந்த நூற்றாண்டு மனிதனின் வாழ்க்கைச் சூழலுக்கும் நடைமுறைச் சமூக சிக்கல்களுக்கும் ஏற்ப அறிவியல் பார்வையுடன் அவர் நோக்குகிறார். மனிதகுலம் முழுமைக்கும் உலகப் பொதுமையான ஒன்றாகவே அவர் சமயநெறியை விளக்குகிறார். ஒரு நாமம் ஒரு உருவம் இல்லாத சுத்த வெளியாக அவர் இறை வனைக் காட்டுகிறார்.

ஒரு வகையில் வேதாத்திரியம் அத்வைத வேதாந்தமாகவே உள்ளது. புலமையாளர் வேதாந்தமாக நின்றுவிடாமல் பட்டினத்தார், தாயுமானவர், தத்துவராயர், பாரதியார் காட்டிய ''காக்கை குருவி எங்கள் ஜாதி'' எனக் காட்டிய நெறியாக, பொதுமக்கள் அத்வைதமாக அவர் கொடுத்துள்ளார்.

வேதாத்திரி மகரிஷி ஒரு புரட்சிகரமான, காலத்தின் தேவைக் கேற்ற சிந்தனையாளர், மனிதனை மனிதன் ஏமாற்றிப் பொருள் கவரும் பக்தி மரபு சடங்குமுறைகளைத் துணிச்சலாகப் புறந்தள்ளுகிறார் அருளாளர் மகரிஷி அவர்கள்.

வேதாத்திரி மகரிஷி உயர்வுதாழ்வுகளற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டவர். மனிதன் தன்னுள் இருக்கும் தெய்வத்தையும் பிறருள் இருக்கும் தெய்வத்தையும் தரிசிக்கத் தெரிந்து கொண்டு விட்டால், தான் உயர்ந்தவன் மற்றவர் தாழ்ந்தவர் என்ற எண்ணமே அவனுக்கு வராது. 'நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு' என்ற பொதுமக்கள் வேதாந்தத்திற்கு வித்திட்டவர் அருட்தந்தையவர்கள்.

வேதாத்திரி மகரிஷி முன்வைக்கும் சமயநெறி, இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற, அறிவியல் நெறியிலான ஒன்றாகும். ''யாவரும் கேளிர்'' என்று ஒரு சேரத் தழுவிக் கொண்டு ''தெய்வம் நீ என்று உணர்''

என உணர்த்தி, நம்மை நடமாடும் கோயிலாகப் பார்க்கச் செய்யும் பரந்த அகத்தவத்தை நமக்கு கற்றுக் கொடுத்த **அற்புத மனிதர் அருள் தந்தையவர்கள்.**

✣ ✣ ✣

## 95. சகலகலா வல்லவர்

- முனைவர். பா. நீலாவதி,
அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம்.

''அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் இந்த நூற்றாண்டின் அருளாளர்களில் சிறப்பிடம் பெற்றவர். அவர் சிந்தித்து தெளிவுபடுத்தாத துறையேயில்லை. ஆகவே அவரையே நாம் ஞானக்களஞ்சியம் எனக் கூறலாம். அவர் வீடு, நாடு, சமுதாயம் இவை எவ்விதமெல்லாம் உயர் வடையும் என்னும் வழிகண்டு சொன்னவர்.

அவர் தமது கட்டுரைகளிலும், கவிதைகளிலும் குறிப்பிட்டுள்ள **பல கருத்துக்கள் நாளைய சமுதாயத்தின் சிக்கல்களுக்குத் தீர்வாகவும், சமுதாயம் சீர்பெற எழுந்த வடிகாலாகவும்** விளங்குவன. அதில் சமுதாயத்தின் **ஒப்பற்ற கண்ணாகவும்**, நாளைய **சமுதாயத்தின் சிற்பி களாகவும்** விளங்கும் குழந்தைச் செல்வத்தைப் பற்றி மகரிஷி அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் மனித சமுதாயத்திற்குப் பெருநிதியாகும்.

நவ உலகச் சிற்பிகளான குழந்தைகளை வளர்ப்பதில் பெரும்பங்கு சான்றோர்களுக்கு உண்டு என்ற புதிய சிந்தனையை மகரிஷி அவர்கள் தருகிறார்கள். வீடு, நாடு, சமுதாயம் இவை மூன்றும் உயர வேண்டு மானால் குழந்தைகளைப் பெற்றோர்கள் வளர்த்தல் கூடாது என்கிறார்.

ஏன் பெற்றோர்கள் அக்குழந்தைகளை வளர்த்தல் கூடாதென்றால், ''தாய், தந்தையர் அக்குழந்தைகளுக்குச் சாதி, மதம், மொழி இவற்றிலே பேதங்களைத்தான் கற்றுத் தருவார்கள். அவர்களால் வருங்காலக் குழந்தைகளுக்குச் சமத்துவம் கிடைக்காது.

எனவே உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளையும் சமுதாயத்தின் பேரறிஞர்களாய் வாழ்கின்றவர்களும், ஐந்து புலன்களையும் கடந்து உண்மையைக் கண்டவர்களும் வளர்க்க வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் அறவழியில் நடக்கும் என்கிறார்.

மகரிஷி அவர்கள் குழந்தைகள் நலமே உலக நலம் என்றும், குழந்தைகள் மூலமே உலகைச் சீர்திருத்த இயலும் என்றும், உணர்வும்

கல்வியும் உலகக் குழந்தைகளுக்கெல்லாம் பொதுவாக்கப்படல் வேண்டும் என்றம் பொதுநலச் சங்கம் வேண்டும் என்றும், விளையாட்டுகள் குழந்தைகளுக்கு மட்டுமே தேவை என்றும் கூறுகிறார். இச்சிந்தனைகள் அனைத்தும் மற்றெவரும் சொல்லாத புதிய சிந்தனையாகும்.

❖ ❖ ❖

## 96. ஓருலகச் சிந்தனையாளர்

- முனைவர். தே. ஞானசேகரன்,
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

இந்த உலகில் அவதரித்த இயேசு, நபிகள், புத்தர் போன்ற மகான்கள் போன்று மகரிஷியும் இந்த மானுடச் சமூகத்தின் துயர் துடைக்கப் பாடுபடும், சிந்திக்கும் மகானாக அறியப்படுபவர் ஆவார். மேற்சொன்ன மகான்களின் சிந்தனைகளில் தோன்றிய ''உலகத் துன்பங்களுக்குக் காரணம் பேராசையே'' என்பதை முன்னிலைப்படுத்தியே மகரிஷியும் தனது சமூக விடுதலைக் கருத்தை முன்வைக்கிறார்.

இதுவரை மனித வாழ்வில் வந்த பயன் இன்பம், துன்பம் இரண்டு மட்டுமே. இந்த இன்ப துன்பங்களைக் கடந்து மனிதன் மகிழ்வுடனும், அமைதியுடனும் வாழ வேண்டுமென்றால் சாதி, மதம், தேசமொழி, இனபேதங்கள், தனி உடைமைப் பற்று எனும் காரணங் களிலிருந்து மனித சமூகம் விடுதலை பெற வேண்டும். இதற்கு ஒரே வழி உலகம் முழுமையும் ஒரு குடையின் கீழ் ஆளப்படும் ஓருலகப் பேரரசின் கீழ் இந்தப் பூலோகம் ஆளப்படுவதே ஆகும் என்கின்றார்.

இந்த உலகப் பொது ஆட்சியில் ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கடவுள், மானுடம் முழுமையும் ஒரே இனம், சம அந்தஸ்து, சுதந்திரவாழ்க்கை, அனைத்தும் பொது உடைமை, போரற்ற சமதர்ம ஆட்சி என்று உலகமே ஒரே அமைதிப் பூங்காவாகத் தன் கவிதைகளில் திரும்பத் திரும்பப் பாடுகின்றார் மகரிஷி.

இந்த ஓருலகச் சிந்தனை உடனே நடைமுறையில் சாத்திய மில்லை என்றாலும் இதுதான் மனித சமூகத்தின் விடுதலைக்கு நிரந்தரத் தீர்வு எனும் கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதைப் பார்க் கின்றோம். இந்த ஓருலகச் சிந்தனை கற்பனைக்கு எட்டாதது. அடைய முடியாத இலக்கு என்று கருத்தியலுக்காக நாம் வாதிட்டாலும் இந்த ஓருலகச் சிந்தனை அனைத்து மானுடச் சமூகத்திலும் ஏற்றுப் போற்றக் கூடியதுதான். போரற்ற உலகில்தான் மனிதன் அமைதியாக வாழ முடியும் என்பது மகரிஷியின் கருத்து.

இந்த மானுட சமூகம் அச்சமற்று அமைதியான வாழ்வு நடத்திட வேண்டுமாயின் பணம், போர் ஆகியவற்றில் ஏற்படும் ஆதிக்கத்தைக் குறைத்து ஒருலகம் எனும் கோட்பாட்டை ஏற்று நடத்திட வேண்டும்.

இந்த ஒருலகக் கோட்பாடு உறுதி செய்யப்படாத வரையில் சாதி, மதம், இனம், மொழி, தனியுடைமை என்ற கருத்திக்கத்தால் மனிதன் அமைதியற்ற வாழ்வையே தொடர்ந்திட வேண்டியிருக்கும் என்பது மகரிஷியின் தெளிந்த சிந்தனையாகும்.

✣ ✣ ✣

# 97. இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற சிந்தனையாளர்

- முனைவர் அ. பிச்சை,
காந்திகிராமம் பல்கலைக் கழகம்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் மானுடகுலம் தழைத்து முன்னேறு வதற்குப் பல ஞானிகளும் மகான்களும் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றித் தன்னாட்டை வளப்படுத்தி வருகிறார்கள்.

காரல் மார்க்ஸ், மகாத்மா காந்தி, தாகூர், சிவானந்தர், ரமண மகரிஷி, ஜி. கிருஷ்ணமூர்த்தி, இராதா கிருஷ்ணன் ஆகியோர் 1920 நூற்றாண்டில் புகழ்பெற்ற சிந்தனையாளர்கள்.

இவ்வரிசையில் இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றி நம்மிடையே வாழ்ந்து வருபவர் வேதாத்திரி மகரிஷி.

மகரிஷியின் சிந்தனைகள் உலக அறிவு பெற்ற எல்லா மனிதர் களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது. முக்கியமாக அறிவியல் கற்ற அறிஞர் களும் ஓரளவு அறிவியல் கற்றவர்களும் ஆன்மீகத்தை ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் அணுக்கொள்கை காந்தக் கோட்பாடு அடிப்படையில் இறைத் தத்துவத்தை விளக்கியுள்ளார். இந்தத் தத்துவம் இக்காலத்திற்கும், எக்காலத்திற்கும் பொருந்தும்.

வேதாத்திரியம் உலகிலுள்ள பல மதங்களின் சாராம்சம், சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்துவம் ஆகியோரின் தத்துவத்திலும், பக்தி நெறியிலும், அறக்கோட்பாட்டிலும் உள்ள சாரத்தை வேதாத்திரியம் கூறுகின்றது.

பொருள் முதல் வாதமும், கருத்து முதல் வாதமும் பிணைந்த மனிதகுல மேம்பாட்டுக்கான மாயாவாதம் இல்லாத அமுல்படுத்தத்தக்க சிந்தனை வோதத்திரியம் ஆகும். தனி மனித வெற்றிக்கான திறவு கோல் வேதாத்திரியம் என்பதில் ஐயமில்லை.

✣ ✣ ✣

## 98. சமாதானப் பிரியர்

- தந்தை பெரியார்

ஒரு சமயம் ஈ.வெ. ராமசாமி கூடுவாஞ்சேரி வந்திருந்தார். பயணிகள் விடுதியில் தங்கியிருந்தார். காலை பதினொரு மணி இருக்கும். அந்த ஊரில் உள்ள திராவிடக் கழக பிரமுகர்கள் அவரைப் பார்க்கிறார்கள். அதற்கு முன்னதாக ஏழுமலை என்ற அன்பர் ''உலக சமாதானம்'' என்ற நூலை பெரியாரிடம் கொடுத்திருக்கிறார்.

''ஒருநாள் அதாண்டா வரப் போகுது. நீ என்ன சொல்றே! அது தப்பு என்கிறாயா?'' என்று கேட்டிருக்கிறார். அந்த அன்பர் நேராக வேதாத்திரியிடம் வந்தார். பெரியார் வந்திருக்கிறார். நீங்கள் பார்க்க விரும்பினால் அவரைச் சென்று பார்க்கலாம் என்றார். ''பார்க்கலாம்'' என்று மகரிஷி சொன்னார். உடனே அவரிடம் சென்று சொன்னதும் ''வரட்டும்'' என்றார் பெரியார். மகரிஷியும் பெரியாரைப் பார்க்கச் சென்றார். அங்கு போனதும் உட்காரச் சொன்னார். மகரிஷியும் உட்கார்ந்தார்.

''நீங்கள் எழுதிய உலக சமாதானம் புத்தகம் பார்த்தேன். நீங்கள் அதையே செய்யுங்கள். எதிர்ப்பு இருக்கும். எதிர்ப்பு இல்லாமல் இருக்காது. இந்தப் பசங்களுக்கு (மக்களுக்கு) எப்படி ஏறப்போகுது'' என்றார் பெரியார்.

✣ ✣ ✣

## 99. விஞ்ஞானி மகரிஷி

- பாரத் ரத்னா முனைவர் மத்திய அமைச்சர்

C. சுப்ரமணியம்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஆன்மீகத்தில் மேம்பட்டவர் மாத்திர மல்லர், அவர் விஞ்ஞானத்தைப் புரிந்து கொண்டுள்ளவரும் கூட. மதம் என்பது விஞ்ஞானத்திலிருந்து வேறுபட்டதன்று என்பது அவருடைய கருத்தாகும்.

அவை இரண்டுமே ஒன்றை ஒன்று முழுமைப்படுத்திக் கொள்வன ஆகும் என அவர் கருதுகிறார். விஞ்ஞானம் இயற்கையைப் பற்றிக் கூறுவதாகும். மதமோ மனிதனைப் பற்றிக் கூறுவதாகும். மதமோ மனிதனைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் மனிதன் இயற்கையின் ஒரு பகுதியே.

எல்லா ஆற்றல்களினுடைய ஒற்றுமை பற்றிய ஒரு கோட்பாட்டை மகரிஷி அவர்கள் ஏற்படுத்தியுள்ளார். 'ஒன்றிலிருந்தே பலவும் வெளிப் பட்டுள்ளன. பிரபஞ்சம் முழுமையும் பிரம்மத்திலிருந்தே பரிணமித்துள்ளது' என்பது வேதாந்தத் தத்துவமாகும்.

தற்காலத்து முன்னேறிய விஞ்ஞானம் இயற்கையிலிருந்து சக்தி வெளிப்பட்டது என்கிறது. ஆகவே,

- மின்காந்த சக்தி
- அணுவினது வலிய சக்தி.
- அணுவினது மெல்லிய சக்தி மற்றும்
- ஈர்ப்பு சக்தி.

ஆகியவற்றை ஒன்றுபடுத்திக் காட்டத் தற்காலத்து விஞ்ஞான உலகம் முயன்று கொண்டிருக்கிறது. முதல் மூன்றும் ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டதன்று என்ற கட்டத்தை விஞ்ஞானிகள் எட்டி விட்டார்கள். ஈர்ப்பு சக்தியையும் மற்றவற்றோடு ஒன்றுபடுத்திவிட முடியாதா? வேதாத்திரி மகரிஷிகளின் விளக்கங்களை இந்தக் கோணத்தில் தான் ஆராய வேண்டும்.

தமது கோட்பாட்டை வெவ்வேறு விஞ்ஞான மாநாடுகளில் மகரிஷி அவர்கள் முன் வைத்திருக்கிறார்கள். அதை விஞ்ஞானிகள் எவ்வளவு தூரத்திற்கு ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

எந்த ஒரு புதிய கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட நாளாகும் என்ற உண்மையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உலகம் கோள வடிவ மானது என்னும் கருத்துக் கூட எதிர்ப்பையே சந்தித்தது. அக்கருத்தை வெளியிட்டவர்கள் தண்டிக்கவும் பட்டார்கள்.

சூரியன் மற்றும் நட்சத்திரங்களின் மையத்தில் பூமி இருப் பதாகவும், இதனை அவையெல்லாம் வலம் வந்து கொண்டிருப்பதாகவும் ஒரு காலத்தில் நினைக்கப்பட்டது. பிரபஞ்சத்திலுள்ள சூரியக்குடும்பத்தில் நமது பூமி ஒரு சிறிய கோள் என்பது உணரப்பட பல காலம் பிடித்தது.

மகரிஷிகளின் கோட்பாடும் விஞ்ஞான உலகத்தால் அங்கீகரிக்கப் படக்கூடிய நன்னாளை நாம் எதிர்நோக்கலாம்.

✣ ✣ ✣

## *100.* Social Reformer

- APJ Abdul Kalam, President of India.

His Holiness Vethathiri Maharishi was a seer and a **Social reformer** who propogated the vision of world peace through cultivation of peace and harmony from Individual to family and ultimately from family to society for the **Positive transformation of our planet.**

✣ ✣ ✣

## துணைநின்ற நூல்கள்


1. சுதேசமித்திரன்
2. ஞானஒளி
3. ஈழகேசரி
4. வேதஒளி
5. மங்கையர் மலர்
6. தினமலர்
7. பரஞ்சோதி மகான்
8. அறிவுத்திருக்கோயில் திறப்பு விழா மலர்கள்
9. அருட்தந்தையின் பயிற்சிகளிலும், விழாக்களிலும், கருத்தரங்குகளிலும் சேகரித்த விபரங்கள்.
10. அறிஞர் பெருமக்களிடம் நேரடியாக சேகரித்த விபரங்கள்.

**வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்**



- ☐ ஆன்மீக வாதிகள்
- ☐ தமிழ் அறிஞர்கள்
- ☐ துணை வேந்தர்கள்
- ☐ தலைவர்கள்
- ☐ கவிஞர்கள்
- ☐ புலவர்கள்
- ☐ எழுத்தாளர்கள்
- ☐ மருத்துவர்கள்
- ☐ பேராசிரியர்கள்
- ☐ இதழ்கள்

பண்பிலே ஆசான் அருள் தந்தையைப்போல்
மற்றொருவரைக் காணமுடியாது.
அவர் ஒரு பெரிய தன்னிகரற்ற தத்துவ ஞானி.
உலக உத்தமரைப் பற்றி 100 அறிஞர்களின்
கருத்துகளைத் தொகுத்து
நல்ல நூலினை ஞானச் செல்வர் பானுகுமார் அவர்கள்
வடிவமைத்துள்ளார்கள்.
இத்தொகுப்பு காலத்தை வென்று நிற்கும் கருவூலமாக
திகழும் என்பதில் ஐயமில்லை.

– தியாகராஜன்

ISBN 81844621 9-0

9788184462197

Rs.60/-